www.tamilarangam.net

களத்தில்

> **தமிழீழப் பகுதிகள் எவை ?**
> “இலங்கையில் எந்தெந்தப் பகுதிகள் மீது சிங்கள விமானங்கள் வீசும் குண்டுகள் விழுந்திருக்கின்றனவோ, அந்தந்தப் பகுதிகளைக் கொண்டதே எமது தமிழீழம்”
> - கேணல் கிட்டு

திருவள்ளுவர் ஆண்டு 2028 ( 29.01. 1997 ) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தி தாள் (127) அன்பளிப்பு: 60 p

# சிங்கள-பௌத்த அரசுக்கு பாரிய தொடர் இழப்புக்கள்

**இராணுவத் தீர்வால் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்பது, சிறிலங்காவுக்கு நன்கு தெளிவுபடுத்தப்படுகிறது. தமிழர் பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலமான அமைதித் தீர்வைக் காண்பதற்கு விடுதலைப் புலிகள் விடுத்த பல அழைப்புக்களை உதாசீனம் செய்து, இராணுவத் தீர்வை முன்னெடுத்த சிறிலங்கா அரசுக்கு, இராணுவத் தீர்வால் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்பது, 1997ஆண்டிலும் நன்கு தெளிவுறுத்தப்பட்டு வருகிறது.**

தமிழீழத் தேசத்தின் தேசிய பாதுகாப்புக்குப் பொறுப்பான விடுதலைப் புலிகளை ஒழித்து விட்டோம் எனக் கொக்கரித்த சிறிலங்காவின் சந்திரிகா அரசு, தரையிலும் கடலிலும் தற்போது மீண்டும் வானிலும் பாரிய இராணுவ இழப்புக்களைத் தொடர்ந்து சந்தித்து வருகிறது.

## எமது உறவுகளின் நிலை என்ன? சிங்கள மக்கள் கேள்வி

சந்திரிகா அரசின் செயலால் தமது பிள்ளைகள், உறவினர்கள் போர்முனைகளில் பலியாவது குறித்துக் கொதித்தெழும் சம்பவங்கள், சிறிலங்காவில் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. அதிலும் குறிப்பாகப் பரந்தன் சமரில் மரணமுற்ற சிறிலங்காப் படையினரின் உடல்களைச் செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் சர்வதேச போர் விதிகளுக்கு ஏற்ப விடுதலைப் புலிகள் கையளித்து, சர்வதேச சட்ட ஒழுங்கு விதிகளை மதித்து நடந்து கொண்ட போதிலும், அவ் உடல்களைச் சிறிலங்கா அரசு பொறுப்பேற்க மறுத்தமை, சிங்கள மக்களின் மனதில் ஆழமான உணர்வுகளைத் தட்டி எழுப்பியுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனால், மனக் கொதிப்புற்ற சிங்கள மக்கள் தினமும் சிறிலங்கா படைத் தலைமையகம் முன்பாக அணி திரண்டு போர் முனைகளுக்கு அனுப்பப்பட்ட தமது உறவுகளின் நிலையினை அறிந்து கொள்வதற்குக் கடும் முயற்சிகள் எடுப்பதாகத் தெரிய வருகிறது. ஆயினும், சிறிலங்கா அரசு போரில் ஏற்படும்

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

# வானிலும் தொடர் இழப்பு
## மூன்று சிறிலங்கா விமானங்கள் அழிவு

- ✳ தன்னியக்க விமானம் பூநகரியில் நொருங்கியது
- ✳ சீன தயாரிப்பு வை-12 மாய மறைவு
- ✳ இஸ்ரேல் தயாரிப்பு 'கிபீர்" கடலில் மூழ்கியது

சிறிலங்கா வான்படை, அடுத்தடுத்து மிகமோசமான இழப்புக்களை 1997இன் முதல் மாதத்திலேயே சந்திக்கத் தொடங்கியுள்ளது.

### தன்னியக்க விமானம் நொருங்கியது

நவீன புகைப்படக் கருவிகளுடன் கூடிய 'ரேடார்' சாதனத்திரைக்குத் தென்படாமல் இயங்கும் ஆற்றலுள்ள இஸ்ரேலியத் தயாரிப்பான தன்னியக்க உளவு விமானம், இம்மாதம் 18ஆம் திகதி விடுதலைப் புலிகளின் ஆயுதக் கப்பலைத் தேடிப் புறப்பட்டுச் சென்று கொண்டிருக்கையில் பூநகரிப் பகுதியில் வீழ்ந்து நொருங்கியது.

விமானி எதுவும் இன்றி தன்னியக்கமாகச் செயற்படும் இவ் விமானம், 1995ஆம் ஆண்டிலிருந்து சிறிலங்கா வான்படையினரால் உளவு பார்ப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டு வந்தது. இவ் விமானத்தைத் தமிழ் மக்கள் **'மூட்டைப் பூச்சி'** என குறியீட்டுப் பெயர் கொண்டு அழைத்து வந்தனர். இவ் உளவு விமானம் மூலம் எடுக்கப்பட்ட வரைபடங்களைக் கொண்டே சிறிலங்கா வான் படை, மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் நாசகாரத் தாக்குதல்களை மேற்கொண்டு வந்தது.

இவ் விமானம் வீழ்ந்து

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

# அறுவடையைத் தடுக்கும் அரசின் கைங்கரியம்

- அறுவடை நிலங்களை நோக்கி கடும் எறிகணை வீச்சு
- அறுவடை பெரும் நாசம்
- 10 பொதுமக்கள் காயம்

கிளிநொச்சி, ஆனையிறவு சிறிலங்காப் படை முகாம்களில் இருந்து கடும் எறிகணை வீச்சுக்கள் சுற்று வட்டாரத்திலுள்ள விவசாய நிலங்களை நோக்கி தினமும் ஏவப்படுகின்றன. 23-01-97 இல் இவ்வாறு நடாத்தப்பட்ட தாக்குதலில் 10 பொதுமக்கள் காயமடைந்தனர். முருகண்டி, வட்டக்கச்சி, இராமநாதபுரம், முரசுமோட்டை பகுதிகளின் அறுவடையிலுள்ள வயல் நிலங்களை நோக்கியே அதிகளவில் இத் தாக்குதல்கள் நடாத்தப்படுகின்றன. தற்போது நெல்வயல்கள் அறுவடைக் காலமாதலால், மக்களை அறுவடைகளில் ஈடுபடாமல் தடுத்து, பெரும் உணவுத் தட்டுப்பாட்டையும் பலத்த நட்டத்தையும் ஏற்படுத்தும் கெட்ட நோக்குடனேயே இத் தாக்குதல்கள் நடாத்தப்படுகின்றன. தமிழ் மக்கள் மீது, உணவை ஆயுதமாகப் பயன்படுத்தி வரும் சிறிலங்கா அரசின் உச்சக்கட்ட வெறியாட்டங்களில், இத்தகைய குண்டுவீச்சுக்களும் ஒன்றாகக் கருதப்படுகின்றன.

## தென் தமிழீழத்திலும் நெல் வயல்கள் அழிப்பு

மட்டக்களப்பில் கல்லடி, நாவற்காடு, திருப்பெருந்துறைப் பகுதிகளிலும் சுற்றிவளைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு பொதுமக்களைக் கைது செய்தும் தாக்கியும் அட்டூழியம் செய்யும் சிறிலங்கா இராணுவத்தினர், பொதுமக்களின் நெல்வயல்களைக் கடுஞ்சேதத்திற்கு உள்ளாக்கி

தொடர்ச்சி 4 ம் பக்கம்...



- ❀ தாயகம் நோக்கிய ...
- ❀ தமிழீழ விடுதலைப் போரும் பெண்களும்... (நடுப்பக்கம்).
- ❀ வடக்கில் தமிழர்களுக்குப் புதைகுழிகள் .....
- ❀ கனடா (நீதிமன்ற) வழக்கு....
- ❀ கவிதைக்களம் ...
- ❀ ஓயாத கால்கள்..... (உண்மைக் கதை)
- ❀ கல்லறையும் கருத்தரிக்கும்... (சிறுகதை)
- ❀ தமிழீழச் செய்திகள்...
- ❀ மக்கள்பணியில் த.பு.க.(TRO)
- ❀ போரும் பொருண்மியமும்...


# பொலிஸ் முகாம் தரைமட்டம்

பலத்த பாதுகாப்புக் கெடுபிடிகளுடன் திகழும் அனுராதபுர மாவட்டத்திலுள்ள **'கெப்பிட்டிக் கொலாவ'** இராணுவ-பொலிஸ் கூட்டு முகாம் புலி வீரர்களினால் அதிரடித் தாக்குதல் மூலம் அழிக்கப்பட்டுள்ளது. 18-01-96 இல் நடாத்தப்பட்ட வெற்றிகரமான இத் தாக்குதலில் 22 பொலிசார் கொல்லப்பட்டனர். 20 பேர் படுகாயம் அடைந்துள்ளதாக பி.பி.சி. செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது.

இத் தாக்குதல் நிகழ்த்தப்படுவதற்கு சில மணி நேரத்திற்கு முன்பாகத்தான் சிறிலங்காவின் ஜனாதிபதி சந்திரிகா, “சமீபத்திய மாதங்களில் சிறிலங்கா அரசு அடைந்துவரும் இராணுவ வெற்றிகளினால் புலிப்படையினர் மிகமோசமாகப் பலவீனம் அடைந்துள்ளனர்” என உரை நிகழ்த்தியிருந்தார் என்பதையும் பி.பி.சி செய்தி நிறுவனம் சுட்டிக்காட்டி ஒப்பீடு செய்துள்ளது.

தொடர்ச்சி 4 ம் பக்கம்...




புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

www.tamilarangam.net



# கடலில் மிதந்த தலையில்லாத மீனவர் சடலம்

முல்லைத்தீவு மாவட்ட அலம்பில் கடற்பரப்பிற்கு வந்த சிறிலங்காக் கடற்படையினர், மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டனர். இதனால் தமது தொழிலைக் கைவிட்ட மீனவர்கள் விரைவாகக் கரை திரும்பினர். இதன்போது, இரு மீனவர்கள் காணாமல் போயுள்ளனர். இவர் படையினரால் கொண்டு செல்லப்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

இதேவேளை, கைதுசெய்து கொல்லப்பட்ட மீனவர் ஒருவரின் சடலம் தலையில்லாத நிலையில் முல்லைத்தீவுக் கடற்கரையில் ஒதுங்கியது. அத்துடன், இவருடன் மீன்பிடிக்கச் சென்ற இன்னும் இரு மீனவர்களின் நிலை பற்றி இதுவரை தெரியவரவில்லை என, சடலத்தை அடையாளம் காட்டிய மற்றைய மீனவர்கள் கூறினர்.

திருகோணமலை கோணேசர் கோயிலருகே உள்ள கடற்கரையில் மீன் பிடிக்கச் சென்ற பத்தொன்பது வயது மீனவர் ஒருவர், சிறிலங்காப் பொலிசால் கைது செய்யப்பட்ட பரிதாப சம்பவமும் இடம் பெற்றுள்ளது. ✷

# வானிலும் தொடர்...

அமைக்கப்பட்டிருந்த அவசரகால பாதுகாப்புப் பொறிமுறையினால் ஆசனத்துடன் வெளியே தள்ளப்பட்ட விமானி, பரசூட்டின் உதவியுடன் தரையிறங்கியுள்ளார். விமானி தன்னைக் காத்துக் கொள்ளும் இச் செயற்பாட்டை, விமானம் பறக்க ஆரம்பித்த கையுடனேயே மேற்கொண்டிருந்தார் என்பதை மட்டும் தெரிவிக்கும் சிறிலங்காத் தரப்பு அதிகாரிகள், மேலதிக தகவல்கள் எதையும் கொடுக்கவில்லை.

தமிழ் மக்களின் உயிர்களைக் குடித்தும், சொத்துக்கள் நகரங்களை அழித்தும் சிங்களப் பேரினவாத அரசு புரியும் இனப் படுகொலைகளுக்கு உறுதுணையாக இருந்து வந்த இந்த விமானங்களின் அழிவு கண்டு, தமிழீழ மக்கள் பேரானந்தம் அடைந்தனர். ✷

# தாயும் மகளும் கூட இருந்தபெண்ணும் பாலியல் வன்முறைக்குப் பலி

மட்டக்களப்பில் திகிலவெட்டுவான் பகுதியில் வீடொன்றை உடைத்து உள்நுழைந்த சிறிலங்கா இராணுவக் குண்டர்கள், அங்கே உறங்கிக் கொண்டிருந்த தாய், மகள் மற்றும் அவர்களுடன் தங்கியிருந்த பெண்ணையும் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கியுள்ளனர். வாழைச்சேனை வைத்தியசாலையில் தற்பொழுது அனுமதிக்கப்பட்டுள்ள இம் மூன்று தமிழ்ப் பெண்களும், அதிர்ச்சியில் இருந்து மீளாத நிலையில் காணப்படுகின்றனர்.

மண்டூரிலும் சிறிலங்கா அதிரடிப் படையினர் இரண்டு தமிழ்ப் பெண்கள் மீது, துப்பாக்கி முனையில் பாலியல் வன்முறைச் சம்பவத்தில் ஈடுபட்டு, ஒரு கிழமைக்குள் இந்தக் கொடிய சம்பவம் நிகழ்ந்துள்ளது. ✷

# ஆணைக்குழு எதற்கு?

**பௌத்த – சிங்களவர்களுக்கு, கடந்த 200 ஆண்டுகளுக்கு மேலாக ஏற்பட்ட அநீதிகளை ஆராய ஆணைக்குழு ஒன்று பேரினவாதிகளால் அமைக்கப்பட்டுள்ளது.**

பௌத்த – சிங்களவர்களின் குறைபாடுகள், அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் குறித்து விசாரணை செய்ய முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவர் தலைமையில் ஆணைக்குழு ஒன்றை சிறீலங்கா பௌத்த குருமார் காங்கிரஸ் மற்றும் 35 பௌத்த அமைப்புக்களும் ஒன்றிணைந்து அமைத்துள்ளன. கடந்த இருநூறு ஆண்டுகளுக்கு மேலாக சிங்கள – பௌத்தர்கள் முகம் கொடுத்த அல்லது கொடுத்துவரும் குறைபாடுகள் மனத்தாங்கல்களை இனம்காண்பதற்காகவே இந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டிருப்பதாக இதன் அமைப்பாளர்கள் கூறியுள்ளனர். இந்த ஆணைக்குழுவில் உறுப்பினர்களாகப் பல்வேறு அரச பதவிகளில் இருந்து ஓய்வு பெற்ற பௌத்த கல்விமான்களும், பேராசிரியர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

**இலங்கைத்தீவு முழுவதும் பௌத்த சிங்களவர்களுக்கே சொந்தம் தமிழ் மக்களும் ஏனையோரும் வந்தேறு குடிகள் சிங்களவரின் சில பிரதேசங்களை இவர்கள் ஆக்கிரமித்துள்ளனர் என நிறுவும் முயற்சியின் வெளிப்பாடே இந்த ஆணைக்குழு.**

இலங்கைத்தீவு முழுவதும் பௌத்த சிங்களவர்களிற்கே சொந்தம் என ஆதாரபூர்வமாக நிறுவ வேண்டும் என்ற 'ஆப்பிழுத்த குரங்கின்' முயற்சியில் பல பௌத்த சிங்கள கல்விமான்கள் பல்வேறு வழிகளிலும் முயன்று வந்துள்ளனர். இந்தவகையில் அரசின் ஆதரவுடனும், தனிப்பட்ட முறையிலும் மேற் கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளில் கிடைத்த ஆதாரங்களைத் தமக்குச் சார்பான வகையில் திரித்துக் கூறவும் மாற்றியமைக்கவும் முயன்றிருக்கின்றனர்.

இவ்வாறாக, வரலாற்றை மாற்றியமைக்கும் பௌத்த – சிங்கள இனவாதிகளின் முயற்சிகளில் ஒன்றாகவே, இந்த ஆணைக்குழுவையும் எடுத்துக்கொள்ள முடியும்.

48 ஆண்டுகாலமாக ஆட்சிப் பொறுப்பிலிருந்த அனைவரும் பௌத்த – சிங்களவராகவும், பௌத்த – சிங்கள இனவாதிகளை திருப்தி செய்பவர்களாகவுமே இருந்திருக்கின்றனர். இவர்கள் சிறுபான்மையின மக்களின் உரிமைகளைப் பறிப்பவர்களாகவும், அவர்களுக்கு அநீதி விளைவிப்பவர்களாகவும் இருந்திருக்கிறார்களே ஒழிய, பௌத்த – சிங்களவர்களுக்கு அநீதி விளைவிப்பவர்களாக இருந்ததில்லை. பௌத்த – சிங்களவர்களின் ஆதரவைப் பெற்று, ஆட்சிப்பீடமேறி அவர்களைத் திருப்திப்படுத்துவதற்காக தமிழ் மக்களுக்கு இழைத்த அநீதிகளே – தமிழ்மக்களை ஆயுதமேந்திப் போராட வைத்தது என்பது அனைவரும் அறிவர்.

பௌத்த – சிங்களவரின் ஆதிக்கத்தை மேலோங்கச் செய்யவும், தமிழர்களைப் பலவீனப்படுத்தவும் ஒருபகுதி இந்திய வம்சாவளித் தமிழர்களின் குடியுரிமையைப் பறித்து, அவர்களை நாடற்றவர்களாக்கி, நாடு கடத்தி அனுப்பி வைத்தவர்கள் பௌத்த – சிங்கள ஆட்சியாளரே. இந்த வகையில் இந்திய வம்சாவழித் தமிழ் மக்களுக்கு குடியுரிமையை வழங்கியதன்மூலம் சிங்களவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் குறித்து அந்த ஆணைக்குழு ஆராயவுள்ளமை அது அமைக்கப்பட்டதன் நோக்கத்தைப் புலப்படுத்துகின்றது.

சிறீலங்காவின் ஆட்சிமொழியாக 'சிங்களம்' அரசியல் அமைப்பிலேயே குறிப்பிடப்பட்டுள்ள நிலையிலும் சிங்கள மொழிக்கு முன்னுரிமையும் முக்கியத்துவமும் கொடுக்காததால் விளையும் அநீதிகள் குறித்து இந்த ஆணைக்குழு ஆராய உள்ளது. இலங்கையில் பௌத்த – சிங்களவர் ஆட்சிபீடம் ஏறியதிலிருந்து காலத்திற்குக் காலம் நிகழ்த்தப்பட்ட இனக்கலவரங்கள் மூலம் தமிழரை அழித்து ஒழித்ததுடன், அவர்களை அகதியாக விரட்டியடிப்பதில் சிங்கள ஆட்சியாளர்கள் முன்னணியிலிருந்து செயற்பட்டிருக்கின்றார்கள். அத்துடன் தமிழர் தாயகத்தைச் சிதைப்பதற்காக, அரச ஆதரவுடனான பாரிய குடியேற்றத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டதுடன் இந்தச் சிங்களக் குடியேற்றங்களுக்காக பூர்வீகமாக வாழ்ந்துவந்த தமிழ் மக்கள் அப்பகுதிகளிலிருந்து விரட்டியடிக்கப்பட்டுள்ளார்கள்.

இந்த நிலையில் வடக்கு–கிழக்கு மாகாணங்களிலிருந்து சிங்கள மக்கள் துரத்தப்பட்டதன்மூலம் ஏற்பட்ட அநீதிகள் குறித்தும் இந்த ஆணைக்குழு இன்று ஆராய இருப்பது அதன் நோக்கத்தைத் தெளிவுபடுத்துகின்றது. அதாவது, இலங்கைத்தீவு முழுவதும் பௌத்த சிங்களவர்களுக்கே சொந்தம்; தமிழ் மக்களும் ஏனையோரும் வந்தேறு குடிகள்; பௌத்த – சிங்களவர்களுக்கு, தமிழர்கள் அநீதி இழைத்து இலங்கைத்தீவின் சில பகுதிகளை ஆக்கிரமித்துள்ளனர் என நிறுவும் முயற்சியே இந்த ஆணைக்குழு என்பது தெளிவாகிறது. ✷

www.tamilarangam.net





# பூகம்பக் குமுறல்

சிறிலங்காவின் ஆக்கிரமிப்பு ஆசைக்கு, 1997ஆம் ஆண்டின் ஆரம்பமே பெரும் சோதனையாக உள்ளது.

புலிகளை அடக்கவென, ஆனையிறவு பெருமுகாமுக்கு அருகில் நிறுவப்பட்டிருந்த ஆட்டிலறித் தளம் மற்றும் டாங்கித் தளம், புலி வீரர்களால் அழிக்கப்பட்ட வரலாற்றுச் சாதனையுடன் 1997 இன் முற்பகுதி ஆரம்பமானது.

300 கோடி ரூபாக்கும் மேற்பட்ட பெறுமதியான ஆயுத இழப்பையும் பல நூறு ஆளணி இழப்பையும் சிறிலங்கா அரசுக்கு ஏற்படுத்தி, அதன் இராணுவத் தீர்வு முடிவுக்கு தகுந்த பாடம் புகட்டியுள்ளனர் விடுதலைப் புலிகள். இத் தோல்வி அதிர்ச்சிகளில் இருந்து மீளாத படைத் தலைமைக்கு, கெப்பிட்டிக் கொல்லாவ பொலிஸ் முகாம் தாக்கியழிக்கப்பட்ட நிகழ்வு மேலும் அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது. இதனால், எந்நேரத்திலும் எப்பிரதேசத்திலும் இராணுவ நடவடிக்கைகளை வெற்றிகரமாக நடாத்தக்கூடிய வலிமை தமக்குண்டு என்பதை, விடுதலைப் புலிகள் மீண்டும் உணர்த்தியுள்ளனர்.

இதேவேளை, பொலிஸ் நிலைய தாக்குதல் நடந்த அதேசமயம், சிறிலங்கா வான்படையின் 54 கோடி ரூபா பெறுமதியான தன்னியக்க வேவு விமானம் பூநகரியில் வீழ்ந்து நொருங்கியது் இரு தினங்களின் பின் மீண்டும் அடுத்த இழப்பு– சீனத் தயாரிப்பு வை–12 விமானம், புலிகளின் ஆயுதக் கப்பலைத் தேடப்போய் காணாமல் போய்விட்டது. தேடப் புறப்பட்ட விமானத்தை, சிறிலங்கா தேடிக் கொண்டிருக்கிறது. இந்த இழப்புகளுக்கு மேலான பேரிழப்பாய் நீர்கொழும்புக் கடலில் அடுத்த சம்பவம்– சிறிலங்கா வான்படையின் நம்பிக்கை நட்சத்திரமான இஸ்ரேலியத் தயாரிப்பு போர் விமானம் 'கிபீர்' திடீரென வீழ்ந்து மூழ்கிவிட்டது. 1995 ஆண்டைப் போல் மீண்டும் பெறுமதிமிக்க விமானங்களை இழக்கும் சிறிலங்கா வான்படை மிகுந்த அச்சம் அடைந்துள்ளது.

சிறிலங்காக் கடற்படையினர் ஏற்கனவே இந்த உளவியல் அச்சத்தில் உள்ளனர். அதன் பிரதிபலிப்பே, மண்டைதீவு–குருநகர் கடற்பரப்பில் புலிகளால் நடாத்தப்பட்ட தாக்குதலின்போது, அண்மைப் பிரதேசங்களில் நின்ற கடற்படைப் படகுகளின் தப்பியோட்டமாகும். இவ்வாறு தரை, கடல், வானில் பேரிழப்புக்களைச் சந்திக்கும் சிறிலங்காப் படையினர், தமிழீழப் பிரதேசமெங்கும் இதேநிலையில் தவிப்பதைத் தென்தமிழீழத்தில் புலிகள் பெற்றுவரும் வெற்றிகளும் தமிழீழப் பகுதிகள் புதிதாக மீட்கப்பட்டு வருவதும் தெளிவாக்கிறது.

சுருக்கமாகக் கூறினால், விடுதலைக் கருக்கொண்ட மண்ணில் நிலைகொள்ள முனையும் ஆக்கிரமிப்பாளனுக்கு அது என்றுமே பூகம்பமாகக் குமுறும் என்ற உண்மை, சிங்களப் படைகளுக்கு தமிழீழ மண் எங்கும் எந்நாளும் உணர்த்திக் கொண்டேயிருக்கும்.

இவ்வாறான, தனது தோல்விகளுக்குப் பழிவாங்க அப்பாவித் தமிழ்மக்கள் மீது, இனப்படுகொலையை மேலும் கட்டவிழ்த்து விட்டுள்ளது சிறிலங்கா அரசு. ஆக்கிரமிப்புப் பகுதிகளில் காணாமல் போதலும் பாலியல் வன்முறைகளும் தொடர்ந்து நடந்தவண்ணமே உள்ளன. தமிழ் மீனவர்கள் மீதான தாக்குதலால் பலர் கொல்லப்பட்டும் காயமுற்றும் வருகின்றனர். இதில் இந்திய மீனவர்களும் அடங்குகின்றனர்.

தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் கூறுவதுபோல், **"அடக்குமுறையாளர்கள், போராளிகளை அழிப்பதில் காட்டும் தீவிரத்தை விட, பொதுமக்களின் ஆன்மீக உறுதியை உடைப்பதில் தான் அதிக அக்கறை காட்டுகின்றனர்."**

இந்த அடிப்படையிலேயே உணவும் மருந்தும், கல்வி, இருப்பிடம் கூட தமிழ் மக்களுக்கெதிரான போரில் ஆயுதமாகத் திட்டமிட்டுப் பயன்படுத்தப்படுகிறது.

ஒவ்வொரு அடக்குமுறையும் ஒரு பூகம்பக் குமுறலைத் தோற்றுவிக்கும் என்ற உண்மையைச் சிறிலங்கா மறக்கலாம். ஆனால், அண்மைய சம்பவங்கள் இதனையே எடுத்துக் காட்டுகின்றன.

எனவே, மக்களை அழிப்பதினால் – அடக்குவதினால் – பிரதேசங்களை ஆக்கிரமிப்பதால் ஒருபொழுதும் பிரச்சினைகள் தீராது என்ற யதார்த்தத்தை இனியாவது சிறிலங்கா உணர்ந்து கொள்ளட்டும். இதை உணர்ந்து, இராணுவத் தீர்வுச் சிந்தனையை விடுத்து, தமிழீழ மக்களின் அரசியல் தலைமைத்துவமான தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினையைத் தீர்க்க முயல வேண்டும். இதன் மூலமே பூகம்பக் குமுறல்களின் விளைவுகளைக் குறைத்து, தீவில் அமைதியைத் தோற்றுவிக்கலாம். ✷

# புதிய ராணுவ நடவடிக்கை இலக்கு என்ன ?

வடக்கிலும் கிழக்கிலும் இரு வேறு இராணுவ நடவடிக்கைகளை சிறிலங்கா இராணுவம் தொடங்கியது. வழமைபோல இராணுவ நடவடிக்கையின் போது எறிகணை வீச்சும், விமானக் குண்டு வீசும் பரவலாகவே நடைபெறுவதோடு மக்கள் கொல்லப்படுவதும் காயப்படுவதும் நிகழ்ந்த வண்ணம் உள்ளன. இத்தாக்குதல்களில் இருந்து தப்ப மக்கள் இடம் பெயர்ந்த வண்ணம் உள்ளனர். இராணுவம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் பெரும்பாலும் மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளாகவே இருக்கின்றன என ஊகிக்க முடியும். புலிகளின் நிலைகளைத் தாக்கி அழிப்பதே நடவடிக்கையின் நோக்கம் என அரசு கூறிக் கொள்வதும் இதனையே புலப்படுத்துகின்றது.

இந்த வகையில், இராணுவ நடவடிக்கையில் ஈடுபடும் துருப்புக்கள் பெரும்பாலும் நடவடிக்கை முடிந்தபின் முகாம் திரும்புவார்கள் என்றே எதிர்பார்க்க முடியும். இதற்கு மாறாக, சில சமயம் ஓரிரு முகாம்கள் கூட அமைக்கலாம். இருப்பினும், இந்த இராணுவ நடவடிக்கைகளின் பலாபலன்கள் அரசிற்கு என்னவாக இருக்க முடியும்.? அரசோ, இராணுவத் தலைமையோ கூறிக் கொள்வது போன்று, இந்த நடவடிக்கைகள் மூலம் புலிகளைப் பலவீனப்படுத்தவோ அன்றி அவர்களின் நிலைகளை அழிந்துவிடவோ முடியுமா?

இதே போன்றே கடந்த ஆண்டின் இறுதி மாதத்தின் மத்தியில் "பாடும் மீன்" என்ற பெயரில் மட்டக்களப்புப் பகுதியில் ஓர் இரா்ணுவ நடவடிக்கை அரசினால் மேற்கொள்ளப்பட்டது. ஆயிரக்கணக்கான துருப்புக்கள் பங்கேற்ற இந்தப் படைநடவடிக்கையின் போது, சில மைல்கள் முன்னேறிய படையினர் பின்னர் அப்பகுதியில் இருந்து விரைவாகப் பின்திரும்பினர். ஆனால், இந்த நடவடிக்கையின் மூலம் அவர்கள் எதிர்பார்த்த பயன் எதுவும் கிட்டவில்லை. இந்தப் படை நடவடிக்கையின் போது இருதரப்பிலும் உயிர் இழப்புக்கள் இல்லை என்று கூறும் அளவிற்கு நிலமை இருந்தது.

இந்த நிலையில், "புலிகளின் நிலைகளை அழித்தல்" என்பது, புலிகள் கைப்பற்றியிருந்த இடங்களில் சிலவற்றை இராணுவம் தாக்குவதும் அழிப்பதுமாய் இருந்தது. இதே சமயம், இந்த இராணுவ நடவடிக்கையின் போது சிங்களப் படை செய்த நடவடிக்கையானது – அப்பகுதியில் இருந்த தமிழ் மக்களின் குடியிருப்புக்களையும், பொருளாதார நடவடிக்கைகளையும் அழித்ததே ஆகும். அத்தோடு, மக்கள் பலரைக் கொன்றதும், பலரைக் காயப்படுத்தியதுமே ஆகும்.

இந்த நிலையில், "புதிய இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன" என்ற பேச்சு எழுவது நியாயமானதே ஆகும். இதனால் புலிகளுக்குப் பாதிப்பு ஏற்படாத தாக்குதலே மேற்கொள்ளப்படுகின்றன என்பதே ஆகும். ஆனால், இதனை சிங்களப் படை தெரியாமல் மேற்கொள்ளுவதாக இல்லை; நிலைமையைப் புரிந்து கொண்டே அது செயற்படுகின்றது. அவ்வாறானால் இந்த நடவடிக்கையின் நோக்கம் என்ன?

கிழக்கு மாகாணத்தில் சிங்களப் படைத் தரப்புக்கு ஏற்பட்டுள்ள பின்னடைவினால் இராணுவத் தீர்வு குறித்த நம்பிக்கை, சிங்கள மக்கள் மத்தியில் குறையத் தொடங்கியுள்ளது – இந்த நடவடிக்கைகளுக்குக் காரணமாகும். அம்பாறை மாவட்டத்தில் அதிரடிப்படை முகாம் மீது புலிகள் தாக்கியழித்தமை, தற்கொலைப்படையின் குண்டுத் தாக்குதலால் அதிரடிபடையினரின் பொறுப்பதிகாரி கொல்லப்பட்டமை என்பன, அதிரடிப்படையினரின் மட்டத்தில் பெரும் அதிருப்தியையும், சோர்வையும் ஏற்படுத்தியுள்ளது.

> **குட்டி இராணுவ நடவடிக்கைகள் மூலம், சிறிலங்கா அரசு மக்கள் கவனத்தைத் திசை திருப்ப முனைகின்றது. இவைகள் மக்களை ஏமாற்றவோ - அரசியல் - இராணுவச் சூழ்நிலைகளிலே மாற்றங்களையோ ஏற்படுத்தப் போவதில்லை.**

இவைகள், "இனப்பிரச்சனைக்கு இராணுவத் தீர்வு" என்ற அரசின் அணுகுமுறை குறித்துக் கேள்வியும், நம்பிக்கையீனமும் எழத் தொடங்கியுள்ளது. இந்த நிலையில்தான் குட்டி இராணுவ நடவடிக்கைகள் மூலம், அரசு மக்கள் கவனத்தைத் திசை திருப்ப முனைகின்றது எனலாம். ஆனால், அரசின் இந்த நடவடிக்கைகள், மக்களை ஏமாற்றவோ – அரசியல் – இராணுவச் சூழ்நிலைகளிலே மாற்றங்களையோ ஏற்படுத்தப் போவதில்லை. ஏனெனில், நீண்டகாலத்துக்கு இவ்வாறான தந்திரோபாயங்களைக் கண்டாகிவிட்டது. ✷

## வாசகர்கள் கவனத்திற்கு !

இப்பிஞ்சு உள்ளத்தின் எண்ணத்தில் தோன்றுவது அதிர்ச்சியா? சோகமா ? உள்ளக் குமுறலா ?
எங்கே உங்கள் பேனாவுக்கு வழி விடுங்கள். எட்டு வரிகளுக்கு மேற்படாத கவியாக இது அமையட்டும்.



அனுப்பவேண்டிய
இறுதித் திகதி: 6 - 2 - 97

அனுப்பவேண்டிய முகவரி.

**'Kalathil', Eelam House,
202 Long Lane,
London SE1 4QB.**

களத்தில் ஆசிரியர் குழு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# புலிகளின் நிர்வாகத்தில் மாங்குளம் பாடசாலை திறப்பு

மாங்குளம் மத்திய மகா வித்தியாலயம், இடம்பெயர்ந்த மக்களின் குடியிருப்பாக மாற்றப்பட்டதினால் மாணவர்கள் கல்வி கற்க முடியாதிருந்தது.

தற்பொழுது விடுதலைப் புலிகளின் நிர்வாகத்தில் இடம் பெயர்ந்த மக்களுக்குப் புதிய மாற்றுக் குடியிருப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டு உள்ளதினால் அப் பாடசாலை தற்பொழுது மீண்டும் ஆரம்பமாகியுள்ளது.

அதேவேளை, சிறுவர்களின் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கும் தமிழீழ நிர்வாகத்தில் பாடசாலைகளை மீண்டும் திறந்தும் புதிதாக அமைத்தும் கல்வி கற்க வசதிகள் செய்யப்படுகின்றன. கடந்த வாரம் அம்பலவன் பொக்கணையில் மாவீரர் மேஜர் அன்பு நினைவாக, பாடசாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## அறுவடையைத் ...

வருகின்றனர்.

அறுவடைக்கு ஆயத்தமாகக் கிடந்த நெல் வயல்களூடாக வாகனங்களைச் செலுத்தியும், தீ மூட்டி எரித்தும், அதற்குள் ஓடித் திரிந்தும் வயல்களை நாசமாக்கியுள்ளனர். கடந்த ஆண்டு இறுதியில் மட்டக்களப்பு பகுதியில் நடாத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போதும் இம் மாதிரியான அழிப்பு வேலைகள் கையாளப்பட்டது.

சிறிலங்கா அரசின் உணவை ஆயுதமாக்கும் போர்த் தந்திரோபாயத்தின் ஓர் அங்கமாகவே இவ் அழிப்புக்கள் படையினரால் திட்டமிட்டு செய்யப்படுகின்றன.

# சிங்கள-பௌத்த அரசுக்கு....

இழப்புகள் குறித்து சரியான தகவல்களை வழங்காமையினால் ஆத்திரமுற்ற சிங்கள மக்கள், தென்னிலங்கையில் சந்திரிகா அரசிற்கு எதிராகச் சுவரொட்டிப் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருவதாகக் கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. அண்மையில் கொழும்பிலுள்ள இராணுவத் தலைமையகம் முன்பாக அதன் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் மீறி, பல சிங்கள மக்கள் அரசுக்கு எதிரான கோசங்கள் எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்தமை, சந்திரிகா அரசின் மீது சிங்கள மக்களுக்கு ஏற்பட்ட விரக்தி நிலையைத் தெளிவாகக் காட்டுகிறது.

## சிங்களவருக்கும் போரின் தாக்கம் அரசின் மீது வெறுப்பு

இது இவ்வாறிருக்க, போர் தொடர்வதினால் நாடு எதிர்நோக்கும் பொருண்மிய 'வரட்சி' நிலைமை சிங்கள மக்களிடையே என்று மில்லாதவாறு வறுமை நிலையினை அதிகரித்து வருகின்றது எனச் சமூக அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். ஆயினும், சந்திரிகா அரசு மனிதத் தன்மையற்ற வகையில் சிங்கள மக்களின் வறுமை நிலையையும் தனது போர் வெறிக்குச் சாதகமாகப் பயன்படுத்தித் தனது இராணுவத்திற்கு ஆட்சேர்ப்புக்கான முயற்சிக ளிலேயே அதிக ஆர்வம் காட்டுவது தெரிகிறது. இதனால், "அமைதியை ஏற்படுத்துவேன்" என வாக்குறுதி கொடுத்து பதவிக்கு வந்த சந்திரிகா அம்மையாரின் நிலைப்பாட்டினால், பெரும்பாலான சிங்கள மக்கள் அதிருப்தியும் ஆத்திரமும் அடைந்து காணப்படுவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. அவிசாவளையில் ஒழுங்குசெய்யப்பட்ட இன்னிசை நிகழ்ச்சியொன்று சிங்கள மக்களால் குழப்பப்பட்ட சம்பவமானது, சிங்கள மக்களின் மனக்கொதிப்பின் வெளிப்பாடே என்று கூறப்படுகிறது.

"தமது பிள்ளையின் உடலைப் புலிகள் செஞ்சிலுவைச் சங்கத்திடம் கையளித்தும், அதனைச் சந்திரிகாவின் அரசு கையேற்க மறுத்துள்ளது. தனது இராணுவ நலன்களுக்காக எங்கள் புதல்வர்களின், கணவன்மார்களின் உடல்களைக் கூட கையளிக்க மறுத்து, இந்தப் போரைத் தொடர்வதிலேயே அரசு குறியாக இருக்கிறது" என, ஆத்திரமுற்ற சிங்களத் தாய் ஒருவர் தெரிவித்துள்ளதாகக் கொழும்புப் பத்திரிகைகள் தெரிவிக்கின்றன.

## உளவியல் பாதிப்படையும் படையினர்

இதற்கிடையில் 09-01-1997 இல் நடாத்தப்பட்ட பரந்தன் சமரில், சிறிலங்காப் படையினரின் டாங்கிப் பிரிவு மற்றும் பீரங்கிப் பிரிவைத் தமது பூரண கட்டுப்பாட்டில் புலி வீரர்கள் கொண்டுவந்த வரலாற்றுப் பெருமைமிகு வெற்றியானது, சிறிலங்காப் படையினரை உளவியல் ரீதியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி, போராடும் மனவலிமையை மழுங்கடித்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. அத்துடன், 300 கோடி ரூபா பெறுமதியான ஆயுத இழப்பினை ஏற்படுத்திய இச் சம்பவத்தினால் தமது ஆயுத பலத்தினைக் கொண்டு தம்மைப் பாதுகாக்கலாம் என்ற நப்பாசையும் சிறிலங்காப் படையினரிடையே இல்லாது போகிறது.

பொலநறுவை, அநுராதபுரம், அம்பாறை உட்பட போர்ப் பிரதேசம் எங்கும் புலி வீரர்கள் நடாத்தும் தொடர் தாக்குதலினால் எந்தப் படைமுகாம் எந்த நேரத்தில் புலிகளிடம் வீழ்ச்சியுறும் எனக் கணிக்க முடியாது சிங்களப் படையினர் ஏங்கித் தவிப்பதாகத் தெரிகிறது. இதற்கிடையில் கடலிலும் வானிலும் ஏற்படும் பாரிய இழப்புக்கள், விடுதலைப் புலிகளின் போரிடும் ஆற்றல் சிங்களப் படையினருக்கு கடும் மனச் சோர்வை ஏற்படுத்தும் என இராணுவ ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். தற்பொழுது கொழும்பில் பெயர் குறிப்பிட விரும்பாத இராணுவ அதிகாரி ஒருவர், பரந்தன் சமரில் சுமார் 700 படையினர் கொல்லப்பட்டோ காணாமலோ போயிருக்கலாம் எனக் கூறியதாகத் தெரிகிறது. இத் தகவல்களினால் சிறிலங்கா அரசின் தகவல் வெளியீட்டில் அதன் படையினருக்கே நம்பிக்கையீனத்தைத் தோற்றுவித்துள்ளது. ஏனெனில், பரந்தன் சமர் பற்றி வெளிவரத் தொடங்கியதும், 9 படையினரே பலியாகியதாக அரசு அவசர அவசரமாகக் செய்தி வெளியிட்டது. பின்னர் 263 பேர் பலியாகினர் எனக் கூறிக் கொண்டது. தற்போது இராணுவ அதிகாரிகளே, பல நூறுகளாக ஏற்பட்ட இழப்புக்களை ஒப்புக் கொள்வதை அவதானிக்கையில், திட்டமிட்ட முறையில் சிங்களப் படையினருக்கே தகவல்களை மறைத்து, அவர்களைத் தொடர்ந்தும் பலியாக்குவதற்கான இராணுவத் தந்திரமாகக் கையாளப்படுகிறது என, படையினருக்கிடையிலேயே விரக்தி நிலை தோன்றியுள்ளதாகக் கூறப்படுகிறது. இத்தகைய செய்தி மறைப்பினால், சிங்கள மக்கள் அரசிற்கு எதிரான கடும்போக்காளர்களாக மாறிவருவதையே மக்களின் அரசுக்கெதிரான அண்மைக்கால நடவடிக்கைகள் தெளிவுபடுத்துகின்றன.

## பேச்சுவார்த்தையே உகந்த வழி சிங்கள மக்களும் உணர்கின்றனர்

இவ்வாறாக, அமைதிப் பேச்சுவார்த்தை மூலம் மட்டுமே தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்ற எண்ணம் சிங்கள மக்களுக்கும் இருக்கின்றது. இருந்தபோதிலும், தமிழீழ மக்களின் தலைமைத்துவமான தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைக்கான நல்லெண்ணத் தூதுக்களை மேற்கொள்ளவும் முடியாத நிலையில் சிங்கள மக்களின் சமூகத் தலைவர்கள் பலர் உள்ளதாகத் தெரிகிறது.

அதேவேளை, போருக்கு ஆதரவு வழங்கும் பௌத்த மகா சங்கத்தினர் மீதும் சிங்கள மக்களின் அதிருப்தி திசை திரும்பியுள்ளதும், மகா சங்கத்தினரின் கூட்ட அழைப்புக்கள் உதாசீனம் செய்யப்படுவதும் நல்ல உதாரணங்களாக அமைகின்றன.

ஆயினும் சந்திரிகா அரசும், பௌத்த மகா சங்கமும் போர் வெறியினை வளர்ப்பதற்கான பகீரதப் பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றனர் எனவும், சிங்கள மக்களின் உண்மை மனோநிலையையும் தமிழீழ மக்களின் அரசியல் யதார்த்தத் தன்மைகளையும் மறைக்கக்கூடிய முறையில் சர்வதேச நாடுகளில் பிரச்சாரங்களை மேற்கொள்வதற்கு கோடிக்கணக்கான பணத்தை செலவிட சிறிலங்கா முடிவு செய்து செயற்படுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# பொலிஸ் முகாம் ....:

## கடற்படை மீதும் தாக்குதல்

15-10-96 இல் குருநகர் - மண்டைதீவு கடற்பிரதேசத்தில் காலை 10.45 மணியளவில் ரோந்துப் படகுகளில் வந்த கடற்படையினர், இராணுவத்தினர் மீது கடற்புலிகள் கடும் தாக்குதல் தொடுத்தனர்.

இத் தாக்குதலைச் சிறிதும் எதிர்பாராத படையினர், தம்மைத் தயார்ப்படுத்துவதற்கிடையில் கடற்புலிகள் தாக்குதலை வேகப்படுத்தி ரோந்துப் படகுகளை நெருங்கினர். நிலைமை தமக்குப் பாதகமாகியதை அடுத்து, ரோந்துப் படகில் ஒன்று வேகமாகத் திரும்பியோடித் தப்பித்துக் கொண்டது. மற்றையது, கடற்புலிகளால் சுற்றி வளைத்துத் தாக்கப்பட்டு அதிலிருந்த மூன்று படையினரின் சடலங்களுடன் கரைக்கு கொண்டு வரப்பட்டது.

இத் தாக்குதல் தொடங்கியவுடன், இப் பிரதேசத்திற்கு அண்மைப் பகுதிகளில் நின்ற சிறிலங்காக் கடற்படைப் படகுகள் மண்டைதீவு கடற்படைப் பாதுகாப்பு நிலைகளை நோக்கிப் பின்வாங்கி ஓடி மறைந்து கொண்டதாகத் தெரிகிறது.

40 குதிரை வலுக்கொண்ட 21 அடி நீளமான ரோந்துப் படகும் பி.கே.எல்.எம்.ஜி தன்னியக்க ஆயுதம் ஒன்றும் வானொலித் தொடர்பு சாதனம் ஒன்றும் மற்றும் சில இராணுவ உபகர ணங்களும் விடுதலைப் புலிகளால் எவ்வித இழப்புக்களுமின்றிக் கைப்பற்றப்பட்டன.

# வானிலும் தொடர் ...

நொருங்கியதற்கான சரியான காரணம் தெரிய வரவில்லை.

இதேவேளை, விமானம் தரையில் வீழ்ந்த அதே நாளிலேயே பாதுகாப்புமிகு சிங்கள பிரதேசமென வர்ணிக்கப்படும் அனுராதபுர மாவட்டத்தில் உள்ள கெப்பிட்டிக்கொல்லாவ இராணுவ-பொலிஸ் கூட்டு முகாமும் தமிழீழ விடுதலைப் புலிகளால் தகர்த்தெறியப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## வை-12 விமானம் மாயமாய் மறைந்தது

20ஆம் திகதி அதிகாலை 4.20 மணிக்கு விடுதலைப் புலிகளின் ஆயுதக் கப்பல் ஒன்று வருவதாகக் கிடைத்த தகவலையடுத்து கண்டறியவென மூன்று அதிகாரிகளுட்பட நால்வருடன் பலாலியில் இருந்து புறப்பட்ட சீனத் தயாரிப்பான வை-12 ரக விமானம் வடகடலில் மாயமாய் மறைந்துள்ளது. ஏவுகணை எதிர்ப்புக் கருவிகள் பொருத்தப்பட்ட இவ் விமானம், தமிழீழ விடுதலைப் புலிகளின் விமான எதிர்ப்புப் படையணியினால் சுட்டு வீழ்த்தப்பட்டிருக்கலாம் என சிறிலங்கா இராணுவ வட்டாரங்கள் ஊகம் தெரிவித்துள்ளன. ஆயினும், இச் செய்தி அச்சுக்குப் போகும்வரை விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடத்திடம் இருந்து இது குறித்த செய்திகள் எதுவும் வெளியிடப்படவில்லை.

இது இவ்வாறிருக்க, இவ் விமானத்தின் விமானி இறுதியாக பலாலி விமானக் கட்டுப்பாட்டு நிலையத்திற்குக் கொடுத்த தகவலின்படி, "ஏதோ ஒரு கப்பலைக் கண்டுவிட்டதாகவும் அதை உறுதிப்படுத்த தாளப் பறப்பதாகவும்" கூறியதுடன் விமானம் காணாமல் போயுள்ளது.

## 'கிபீர்' கடலில் மூழ்கியது

21ஆம் திகதி கட்டுநாயக்கா விமானப் படைத்தளத்திலிருந்து புறப்பட்ட இஸ்ரேலிய தயாரிப்பான அதிவேக 'கிபீர்' போர் விமானம் நீர்கொழும்புக் கடலேரியில் திடீரென வீழ்ந்து நொருங்கியுள்ளது. விமானத்தில்

தொடர்ச்சி 2ம் பக்கம்...

www.tamilarangam.net



# தெற்கில் சிங்களவர்களது புதைகுழிகள் தோண்டப்படுகின்றன!

## வடக்கில் தமிழர்களுக்கு புதைகுழிகள் வெட்டப்படுகின்றன !

ஒரு மனித உயிரின் விலை என்ன? இந்தக் கேள்விக்குப்பதில், எந்த மனிதனது உயிர் என்பதைப் பெறுத்தது.

அந்த உயிர் ஒரு பாலஸ்தீனியனின் உயிர் என்றால் அதன் விலை அரைச்சதம், அந்த உயிர் ஒரு தமிழனது அல்லது ஒரு தமிழிச்சியினது என்றால், அதன் விலை பூஜ்ஜியம்.

அயத் மகமது பத்ரான் (Iyad Mahmoud Badran) ஒரு பாலஸ்தீனிய இளைஞன். அவனது வயது 18. இவன் ஒரு இஸ்ரேலிய இராணுவ வீதித் தடைமுகாமில் வைத்து, இஸ்ரேலிய இராணுவத்தினரால் சுட்டுக்கொலை செய்யப்பட்டான். இந்த இளைஞன் எந்தக் குற்றமும் செய்யாதவன். ஆனால், அவன் இனத்தால் பாலஸ்தீனியன். எனவேதான், இஸ்ரேலிய இராணுவத்தினர் அவனைக் கண்மூடித்தனமாகச் சுட்டுக்கொன்றார்கள்.

ஒரு நிரபராதியைச் சுட்டுக்கொலை செய்த குற்றச்சாட்டில், இஸ்ரேலிய இராணுவத்தைச் சேர்ந்த நான்கு இராணுவச் சிப்பாய்கள் இஸ்ரேலிய இராணுவ நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டார்கள்.

வழக்கை விசாரித்த இராணுவ நீதிமன்றம், அந்த நால்வருக்கும் தலா அரைச்சதம் (Lagora) தண்டம் விதித்தது. அத்தோடு ஒருமணித்தியால ஒத்திவைப்பு சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

இஸ்ரேலிய ஒருரூபாய் நாணயத்துக்குப்பெயர் செகேல் (Shekel). நூறு அகொரா கொண்டது ஒரு செகேல். ஒரு செகேலின் பெறுமதி 43சதம். பாலஸ்தீனிய மக்களுக்கு எதிராக இஸ்ரேலிய இராணுவம் கட்டவிழ்த்துவிடும் காட்டுமிராண்டித்தனமான அடக்குமுறை, சித்திரவதை, சிரச்சேதம் இவற்றிற்கு இந்தச்சம்பவம் ஒரு எடுத்துக்காட்டு.

இதேபோன்ற சம்பவங்கள், இஸ்ரேலிய இராணுவம் இன்னமும் ஆக்கிரமித்துக் கொண்டுள்ள பாலஸ்தீனியப் பிரதேசத்தில் நாளும் பொழுதும் நடைபெற்ற வண்ணம் உள்ளன.

ஒருகாலத்தில் அடக்கப்பட்டவர்கள் என்று உலகத்தின் பச்சாதாபத்தை சம்பாதித்துக்கொண்ட யூதர்கள், இன்று அடக்குமுறையாளர்களாக உருவெடுத்துவிட்ட விந்தையை, இஸ்ரேலில் பார்க்கக் கூடியதாக இருக்கிறது.

இருந்தும் முழுதும் குடிமுழுகிப் போய்விடவில்லை. மானிடத்தையும் மனிதவுரிமைகளையும் மதிக்கும் நல்ல உள்ளம் படைத்த யூதர்களும் இஸ்ரேலில் இல்லாமல் இல்லை.

இஸ்ரேலிய இராணுவ நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து, இஸ்ரேலிய மனிதவுரிமை இயக்கங்களில் ஒன்றான B'tselem போர்க்கொடி உயர்த்தியுள்ளது. "இது பெரிய பகிடி. எனக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை" என, இந்த மனிதவுரிமை இயக்கத்தின் பேச்சாளர் Shirly Eran பத்திரிகைகளுக்கு அளித்த செவ்வியில் கூறியிருக்கிறார்.



கிருசாந்தி - ராசம்மா - பிரனவன்

படுகொலை செய்யப்பட்ட கிரிசாந்தி குடும்பத்தினர்.

இதுமட்டுமல்ல, இஸ்ரேலியத் தொலைக்காட்சி, கைது செய்து தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பாலஸ்தீனியர்களை எல்லைக் காவலர்கள் அடித்து உதைக்கும் காட்சிகளைப் போட்டுக் காட்டியது.

இவையெல்லாம், இஸ்ரேல் நாட்டில் சனநாயகம் முற்றாகப் பட்டுவிடவில்லை என்பதைக் காட்டுகிறது. மானிடம் இறந்துவிடவில்லை என்பதைத் தெளிவுபடுத்துகிறது.

ஆனால், போதிமரத்துப் புத்தரின் தர்மத்துக்கு உறைவிடம், அந்தப்புத்தரின் பாதம்பதித்த மலையின் இருப்பிடம் என்று சொல்லிக்கொள்ளும் சிங்கள - பௌத்த சிறிலங்காவில், சனநாயகத்தின் நிலை என்ன? மானிடத்தின் பெறுமதி என்ன? தமிழர்களது உயிரின் விலை என்ன?

'பத்தலந்த' என்பது தென்மாகாணத்தில் உள்ள ஒரு சிங்களக் கிராமம். 1988-89 ஆண்டுகளில் தென் இலங்கையில் இடம்பெற்ற ஜாதிக விமுக்தி பெரமுனையின் (J.V.P) கிளர்ச்சியின் போது, பயங்கரவாதிகள் என்ற சந்தேகத்தின் பேரில் சிறிலங்காப் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டவர்கள், இந்தக் கிராமத்தில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த வதைமுகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டார்கள். பலர் கொல்லப்பட்டு, புதைகுழிக்குள் போட்டு மூடப்பட்டார்கள். இதில் சிங்கள பள்ளிமாணவர்களும் அடங்குவர்.

1994ஆம் ஆண்டு நடந்த சனாதிபதி பதவிக்கான தேர்தலில் வெற்றிபெற்று வந்த சந்திரிகா குமாரதுங்கா, இந்த வதைமுகாம் பற்றியும் அங்கு நடந்த கொலைகள் பற்றியும் விசாரிக்க சனாதிபதி ஆணைக்குழு ஒன்றை நியமித்தார்.

இந்த ஆணைக்குழு, புதைகுழிகளைத் தோண்டி, புதைக்கப்பட்டவர்களின் எலும்புகளைப் பொறுக்கி விசாரணை செய்து வருகிறது.

அப்போது சிறிலங்காவின் பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்காவை C.I.D பொலிஸார் 5 மணித்தியாலங்கள் துளைத்தெடுத்து, அவரிடம் இருந்து வாக்குமூலம் ஒன்றைப் பெற்றுள்ளது. சனாதிபதி ஆணைக்குழு முன் சாட்சியம் அளித்த சாட்சியங்களின் வாக்குமூலங்களின் அடிப்படையிலேயே ரணில் விக்கிரமசிங்காவை பொலிஸ் விசாரணை செய்துள்ளது. ஆணைக்குழு முன் தோன்றுமாறு அவருக்கு விரைவில் ஆணை பிறப்பிக்கப்படலாம்.

இந்த சனாதிபதி ஆணைக் குழுவைப்போல் இன்னும் பல ஆணைக் குழுக்கள் கடந்த கால ஐ.தே.கட்சியின் ஆட்சியின்போது நடந்த மனிதவுரிமை மீறல்கள், கொலைகள், காணாமல்போதல் பற்றி விசாரணை செய்து வருகின்றன.

சனாதிபதி சந்திரிகாவின் கணவர் விஜயகுமாரணதுங்காவின் கொலைபற்றியும் சனாதிபதி ஆணைக் குழு ஒன்று விசாரணை செய்து வருகின்றது.

இதுமட்டுமல்ல, 1971லும், 1988-89லும் இடம்பெற்ற கிளர்ச்சியின் போது காணாமல் போனவர்களுக்கு நினைவாலயமும் பூங்காவும் அமைக்க, சனாதிபதி சந்திரிகாவின் அரசு முடிவு செய்துள்ளது.

இந்த நினைவாலயத்துக்கு, 'நிரபராதிகளின் ஆலயம்' (Shrine of the Innocents) எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இந்த நினைவாலயம், பூங்கா இவற்றோடு ஒரு தொல் பொருள் காட்சியகமும் அமைக்கப்படும். இதில் 1971ஆம் ஆண்டு தொடக்கம் சிங்கள இளைஞர்கள் உபயோகித்த பல்வேறு பொருட்கள் காட்சிக்கு வைக்கப்படும். சனாதிபதி சந்திரிகாவைப் போலவே, முன்னாள் சனாதிபதி ரணசிங்க பிரேமதாசா, 1971ஆம் ஆண்டுக் கிளர்ச்சியின்போது இராணுவத்தால்



பாலியல் வல்லுறவிற்கு உள்ளாக்கப்பட்டு பின் சுட்டுக்கொலை செய்யப்பட்ட பிரேமாவதி மானம்பெரிக்கு, அம்பாந்தோட்டையில் சிலை எழுப்பினார்.

அன்றைய பிரதமர் சிறீமாவோ பண்டாரநாயக்காவின் முகத்தில் கரி பூசுவதற்காக, பிரேமதாசா ஊர்ஊராகச் சென்று பிரேமாவதி மானம்பெரி இராணுவத்தினரால் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கிக் கொலை செய்யப்பட்டதை ஆதியோடு அந்தமாக விபரித்து பிரசாரம் செய்தார்.

இப்படி, தென் இலங்கையில் சிங்களவர் புதைக்கப்பட்ட புதைகுழிகளைத் தோண்டி எலும்புகளை எண்ணும் சனாதிபதி சந்திரிகா, காணாமல்போன சிங்களவர்களுக்கு ஆலயம் எழுப்பும் சந்திரிகா, வட இலங்கையில் - தமிழீழத்தில் தமிழ் இளைஞர்களைக் கொலைசெய்துவிட்டு புதைகுழிகளுக்குள் போட்டு மூடுகிறார். தமிழ் யுவதிகளை பாலியல் வதைக்கு உள்ளாக்கி அவர்களது கழுத்தை நெரித்துக் கொலை செய்துவிட்டு புதைகுழிக்குள் போட்டு மூடுகிறார்கள்.

தமிழீழத்தில் கிருசாந்தி குமாரசாமி, இராசம்மா குமாரசாமி, பிரணவன் குமாரசாமி, சிதம்பரம் கிருபாமூர்த்தி, ரஜனி வேலாயுதபிள்ளை ஆகியோரின் சடலங்கள் புதைகுழியிலிருந்து மீட்கப்பட்டதைத் தொடர்ந்து, தென்மராட்சிப் பகுதியிலுள்ள எழுதுமட்டுவாள் கிராமத்தில் கடந்த நவம்பர் மாதம் 17ஆம் திகதி ஞாயிறன்று புதைகுழி ஒன்றிலிருந்து ஆறுபேரின் சடலங்கள், அக் கிராமவாசிகளால் மீட்டெடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் நான்கு சடலங்கள் அடையாளம் காணமுடியாதபடி உருக்குலைந்து இருக்கின்றன.

தொடர்ச்சி 6 ம் பக்கம்...

**தென் இலங்கையில் சிங்களவர் புதைக்கப்பட்ட புதைகுழிகளைத் தோண்டி எலும்புகளை எண்ணும் சனாதிபதி சந்திரிகா, காணாமல்போன சிங்களவர்களுக்கு ஆலயம் எழுப்பும் சந்திரிகா, வட இலங்கையில் - தமிழீழத்தில் தமிழ் இளைஞர்களை கொலை செய்துவிட்டு புதைகுழிகளுக்குள் போட்டு மூடுகிறார்.**

**தமிழ் யுவதிகளை பாலியல் வதைக்கு உள்ளாக்கி அவர்களது கழுத்தை நெரித்துக் கொலை செய்துவிட்டு புதைகுழிக்குள் போட்டு மூடுகிறார்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தெற்கில் சிங்களவர்களது புதைகுழிகள் ......

பொன்னு அரியரத்தினம் (வயது 33), கந்தசாமி புலேந்திரராசா (வயது 16), கந்தையா தியாகராசா (வயது 16), ராமு மாணிக்கம் (வயது 43) ஆகிய நால்வரின் சடலங்களே அடையாளம் காணப்பட்டுள்ளன.

நாற்பத்திரண்டு நாட்களுக்கு முன்னர் காணாமல் போனவர்களே, புதை குழியிலிருந்து சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

இதே காலகட்டத்தில், பத்தமேனியைச் சேர்ந்த 10 வயது பாடசாலைச் சிறுமி வெறிபிடித்த சிங்க இராணுவத்தால் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறாள். நல்ல காலம் புதைகுழியில் வெட்டிப் புதைக்கப்படாமல் தப்பிவிட்டார்!

இந்தச் சிறுமி இராணுவ மிருகங்களால், இரக்கமற்ற கொடியவர்களால் எப்படிக் கதறக் கதற பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டாள் என்பதை, திரு.ஜி.ஜி. பொன்னம்பலம் (ஜுனியர்), மாட்சிமை தங்கிய சனாதிபதி சந்திரிகாவிற்குக் கடிதமூலம் தெரிவித்துள்ளார்.

இரத்தத்தை உறைய வைத்து, இதயத்தைக் கசக்கிப்பிழிய வைக்கும் ஒரு தமிழிச்சியின் சோகக் கதை இது. வேட்டை நாய்களிடம் அகப்பட்டு, தன் விலை மதிக்க முடியாத கற்பைப் பறிகொடுத்துவிட்டு மீண்ட மான் குட்டியின் கண்ணீர்க் கதை இது.

*''யாழ்.நகருக்கும் பலாலிக்கும் இடைப்பட்ட பகுதியில் அமைந்திருக்கும் அச்சுவேலியின் பத்தமேனியைச் சேர்ந்தவர் இந்த 10வயது மாணவி தேனுகா செல்வராஜா. அச்சுவேலி மகாவித்தியாலயத்தில் இவர் 5ஆம் வகுப்பில் கல்வி பயில்கிறார். 1996 நவம்பர் 12 செவ்வாய்க்கிழமை காலை தேனுகா பாடசாலைக்குச் சென்று கொண்டிருக்கும்போது, சுமார் 8.15 மணியளவில் அவரைக்கடத்திய இராணுவத்தினர் புத்தூர் கிராம சபைக் கட்டிடத்தில் அமைந்திருக்கும் இராணுவ முகாமுக்குக் கொண்டு சென்றனர்.*

*முகாமில் தேனுகாவின் துகிலுரிந்த சில படையினர், மாறி மாறி அவரைப் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கி தமது வெறியைத் தீர்த்துக்கொண்ட பின்னர் இப்படையினர் உடல்ரீதியான உபாதைக்கும், மனோ ரீதியான அதிர்ச்சிப் பேதலிப்பிற்கும் உள்ளான தேனுகாவை வெளியே செல்ல அனுமதித்தனர்.*

*நேரடியாகத் தனது பாடசாலைக்குச் சென்ற இச் சிறுமி, தனக்கு நேர்ந்ததை அதிபரிடம் கூறினார்.*

*அச்சுவேலி பிரதான முகாமில் முறைப்பாட்டைச் செய்வதற்காக அதிபர் மாணவியையும் கூட்டிக் கொண்டு அங்கு சென்றார். ஆனால், அங்குள்ள முகாம் தளபதியோ தங்களுக்கு எந்தவித அக்கறையுமே கிடையாது என்று திட்டவட்டமாகக் கூறிவிட்டார். உண்மையில் இருவரையுமே இராணுவத்தினர் அந்த முகாமிலிருந்து விரட்டி இருக்கிறார்கள்.*

*கிருசாந்தி குமாரசாமியின் விவகாரத்தைப் போன்றதல்ல, தேனுகா விவகாரம். ஏனென்றால், இந்த விவகாரத்தில் மிகவும் உறுதியான சான்றுகளை எவராலுமே காணமுடியும். பாலியல் சித்திரை வதைக்கு ஆளான தேனுகா உயிருடன் இருக்கின்றார். சம்பவம் காலை வேளையிலேயே நடந்திருப்பதால் தன்னைப் பாலியல் வன்முறைக்கு உட்படுத்திய படையினரை அடையாளங் காட்டக்கூடியதாக இருக்கும் என்றும் நம்பலாம்.*

*அவரின் உடைகளும் இருக்கின்றன. அதிபரிடம் இருந்தும் சில சான்றுகளைப் பெறமுடியும். இச்சிறுமி டாக்டர் ஒருவரிடம் அழைத்துச் செல்லப்பட்டு காயங்களுக்காகச் சிகிச்சை அளிக்கப்பட்டாரா என்பது எனக்குத் தெரியாது.*

*தனக்கு நேர்ந்த கதி குறித்து உடனடியாக முறைப்பாடு செய்ய, இச் சிறுமி ஒரு இராணுவ அதிகாரியிடம் சென்ற போது அந்த அதிகாரிக்கு, தமிழர்களின் இதயங்களை வெற்றி கொள்ளும் அரசின் கொள்கையில் அக்கறையிருக்கவில்லை.*

*பெறுமதி மிக்க சான்றுகளை நாம் இழக்காதிருக்க வேண்டுமானால், உடனடியாகவே இச் சம்பவம் குறித்து அர்த்தமுடைய விசாரணை ஆரம்பிக்குமாறு அதிகாரிகளுக்கு உத்தர விடுவது சாத்தியமா? இவ்வாறு செய்யாவிட்டால், 'இன சுத்திகரிப்பு" நடவடிக்கையில் அரசாங்கம் இறங்கியிருக்கின்றது என்று எண்ண வேண்டிய நிலைக்குத் தமிழர்கள் தள்ளப்படுவார்கள். ஏனென்றால், இராணுவத்தினர் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் வடக்கின் பகுதிகளில் பாலியல் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துக்கொண்டே வருகின்றன.*

*அதேவேளை, பாதிக்கப்பட்ட இச் சிறுமியினதும், தாய் தந்தையினரதும், மற்றும் பாடசாலை அதிபரினதும் பாதுகாப்பைத் தயவு செய்து உறுதிப்படுத்துங்கள். ஏனென்றால், வடக்கில் ஆட்கள் கடத்தப்படுவதும், காணாமற்போவதும் சாதாரணம் என எமக்குச் செய்திகள் கிடைக்கின்றன.""*

சனாதிபதி சந்திரிகா, கிருசாந்தி குமாரசாமியின் பாலியல் வல்லுறவுக் கொலை சம்பந்தமாகக் கடைப்பிடித்துவரும் பயங்கர மௌனத்தைப் போன்றே, தேனுகா செல்வராசா சிங்கள இராணுவக் காடையர்களால் பாலியல் வல்லுறவுக்கு உட்பட்டதையிட்டு மௌனம் சாதிக்கிறார்.

தென் இலங்கையில் பத்து இருபது வருடங்களுக்கு முன் கொலை செய்யப்பட்ட சிங்களவர்களின் புதை குழிகள் தோண்டப்பட்டு அது பற்றி நீதி விசாரணை, அவர்களுக்கு நினைவாலயம், பூங்கா, தொல்பொருள் காட்சியகம்.........!

தமிழீழத்தில், சந்திரிகாவின் கண்முன்னே பாலியல் வல்லுறவுக்குள்ளாகிக் கொலை செய்யப்பட்ட கிருசாந்தி பற்றி பயங்கர மௌனம்........! பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்ட பத்துவயதுச் சிறுமி தேனுகா பற்றி அப்பட்டமான அலட்சியம்.......! சடலங்களாகப் புதைகுழியிலிருந்து மீட்கப்படும் தமிழர்கள் பற்றியும் அதே மௌனம்.......! அதே அலட்சியம்......!

பேய் அரசாட்சி செய்தால், பிணம் தின்னும் சாத்திரங்கள். சந்திரிகாவின் பேயாட்சியில் அவர் ஏவிவிட்ட பேய்கள், தமிழ்ப் பெண்களின் கற்பைச் சூறையாடுகின்றன. தமிழர்களின் உயிர்களைக் குடிக்கின்றன.

சந்திரிகா மட்டுமல்ல சிங்கள அரசியல்வாதிகள், பௌத்த தேரர்கள், சிங்களப் பத்திரிகையாளர்கள், சிங்கள அறிவுப் பிழைப்பாளர்கள், சிங்கள மனிதவுரிமையாளர்கள் யாருமே இந்தக் கொலைகள், கற்பழிப்புக்கள் பற்றி மூச்சே விடக்காணோம்.

சில பெண்கள் அமைப்புக்கள் மட்டும், விழிப்புப் போராட்டம் நடத்தியுள்ளன.

சிங்கள பௌத்த மேலாண்மையைத் தூக்கிப்பிடித்து, அதற்கு வெண்சாமரை வீசும் Sunday Time (10/11/96) பத்திரிகை ஆசிரியர், கிருசாந்தி குமாரசாமி பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டதற்கான காரணத்தைக் கண்டுபிடித்துள்ளார். இந்த வக்கிர புத்தி படைத்த ஆசிரியர் எழுதியிருப்பதைப் படியுங்கள்:

**".....No doubt the Army needs to take very strong disiplinary action. against its errant soldiers for what is indeed a dastardly crime. Equally, however the army and the government must be mindful that here are men serving in the north with little or no rest and recreation so vital for any Army in the battlefield"**

வடக்கில் பணிபுரியும் இராணுவத்தினர்க்கு ஓய்வும், பொழுதுபோக்கும் இல்லையாம். அதுதான் இராணுவம் (தமிழ்ப் பெண்களை) பாலியல் வன்முறைக்குட்படுத்திக் கொலை செய்கிறதாம்! எனவே இராணுவத்தினர்க்கு தேவையான ஓய்வையும், பொழுதுபோக்கையும் இராணுவமும் அரசாங்கமும் ஒழுங்கு செய்யவேண்டும். இல்லாவிட்டால், இப்படியான பாலியல் வன்முறைகள், கொலைகள் மேலும் தொடர்வதைத் தடுக்கமுடியாதாம்.

அதாவது, சிங்கள இராணுவ வெறியர்களின் பாலியல் தேவைகள் பூர்த்திசெய்யப்பட வேண்டும். இல்லையேல் மேலும் பல கிருசாந்திகள், ரஜனிகள் பாலியல் வல்லுறவிற்கு உள்ளாக்கப்பட்டுக் கொலை செய்யப்படுவது தொடரும் என இந்தத் துச்சாதனன் துணிந்து எழுதியிருக்கிறான்.

பாலஸ்தீனியர்களது உயிர்களின் பெறுமதி அரைக்காசு என்கிறது, இஸ்ரேலிய இராணுவம். தமிழர்களது உயிர்களுக்கும், தமிழ்ப்பெண்களது கற்புக்கும் அரைக்காசும் பெறுமதியில்லை என்கிறது சந்திரிகாவின் இனவாத அரசு.

பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட கிருஷாந்தி, அவரது தாயார், அவரது தம்பி, அயலவரான சிதம்பரம் கிருபாமூர்த்தி ஆகியோரின் கொலை தொடர்பான வழக்கில் சந்தேக நபர்கள்,

## நக்கீரன்

கடந்த திங்கக்கிழமை (18-11-96) கொழும்பு பிரதம நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது சம்பந்தப்பட்ட 11 இராணுவத்தினரும் மிகவும் அலட்சியமாகவும் பெரிய கெட்டித்தனம் செய்தவர்கள் போலவும் நடந்து கொண்டார்களாம். (Rape and murder suspects maintained expressions of indifference and defiance)

*இந்த 11 சந்தேக நபர்கள் சாதாரண சட்டத்தின்கீழ் கொலைக்குற்றம் மட்டும் சாட்டப்பட்டுள்ளார்கள்.*

*கிருஷாந்தியின் சடலம் உருக்குலைந்துவிட்டதால் பிரதம துஆமு (கொழும்பு) அவரால் பிரேத பரிசோதனை செய்ய முடியவில்லை. இதனால் மரணத்துக்குரிய உண்மையான காரணமும் கண்டறிய முடியவில்லை. பாலியல் வன்முறையையும் நிரூபிக்க முடியவில்லை.*

பதினொரு சந்தேக நபர்களும் மிகவும் அலட்சியமாகவும், கெட்டித்தனம் செய்தவர்கள் போலவும் நடந்து கொண்டதில் ஆச்சரியமில்லை.

எங்கள் தாயக பூமியின் ஒருபகுதி சிங்கள-பௌத்த வெறிபிடித்த இராணுவத்தின் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகி இருக்கும் வரை, எங்கள் தாய்மார்களது சகோதரிகளது கற்புக்கும் தந்தை, தாய், அக்கா, அண்ணன், தம்பி, தங்கச்சி இவர்களது உயிருக்கும் பாதுகாப்பு அறவே இல்லை.

சிங்கள-பௌத்த இராணுவம் புதைகுழிகளைத் தோண்டிக்கொண்டே இருக்கும்.

"எமது மண்ணிலிருந்து சிங்க ளப்படைகளை விரட்டும்வரை, எமது தேசத்திற்கு விடுதலை கிட்டும்வரை, எமது மக்களுக்கு விடிவு ஏற்படும்வரை நாம் உறுதி தளராது துணிவோடு போராடுவோம்" என தமிழினத்தின் தேசியத்தலைவர் சூழுரைத்துள்ளார்.

எங்கள் பங்குக்கு, தமது குருதியை விலையாகக் கொடுத்து எம் தேசத்தின் விடுதலைக்குப் போராடும் விடுதலைப் புலிகளுக்கு நாங்களும் தோள் கொடுப்போம். ✷

---

"எமது மண்ணிலிருந்து சிங்களப்படைகளை விரட்டும்வரை, எமது தேசத்திற்கு விடுதலை கிட்டும்வரை, எமது மக்களுக்கு விடிவு ஏற்படும்வரை நாம் உறுதி தளராது துணிவோடு போராடுவோம்"

*- தமிழீழத் தேசியத்தலைவர்*

---

எங்கள் தாயக பூமியின் ஒருபகுதி சிங்கள – பௌத்த வெறிபிடித்த இராணுவத்தின் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகி இருக்கும் வரை, எங்கள் தாய்மார்களது சகோதரிகளது கற்புக்கும் தந்தை, தாய், அக்கா, அண்ணன், தம்பி, தங்கச்சி இவர்களது உயிருக்கும் பாதுகாப்பு அறவே இல்லை.

சிங்கள – பௌத்த இராணுவம் புதைகுழிகளைத் தோண்டிக்கொண்டே இருக்கும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தைக் கண்காணிக்க சம்மதித்ததன் மூலம் நோர்வே, கனடா அரசுகள் விடுதலைப்புலிகளை அங்கீகரித்துள்ளன.

உலகத்தமிழர் இயக்கப் பொறுப்பாளர் மாணிக்கவாசகம் சுரேஷ் அவர்களுக்கு எதிராக, குடிவரவுச்சட்ட விதி 40.1 இன் கீழ் தொடரப்பட்ட வழக்கு விசாரணை, கடந்த மார்ச் மாதம் 19 ஆம் திகதி ஆரம்பமாகியது. பலநாள் விசாரணையின் பின்னர், இவ் வழக்கு செப்டம்பர் மாதம் 17 ஆம் திகதிக்கு ஒத்திப்போடப்பட்டது.

வழக்க விசாரணையின்போது, அகில உலக சட்ட நிபுணர்களது சாட்சியங்கள் நீதி மன்றத்தில் சுரேஷ் சார்பாக நெறிப்படுத்தப்பட்டன.

மார்ச் மாதம் 20 ஆம் நாள் மாலை நடந்த நீதிமன்ற விசாரணையின்போது Illinois பல்கலைக்கழகப் பேராசிரியர் பிரான்சிஸ் பொயில் சாட்சியம் அளித்தார்.

அவரது சாட்சியத்தின் முக்கிய பகுதிகளைத் தமிழில் மொழிபெயர்த்துக் கீழே தருகிறோம். இது முன்னர் வெளிவந்த சாட்சியத்தின் தொடர்ச்சியாகும்.

## -பேராசிரியர் பிரான்சிஸ் பொயில் சாட்சியம்

**வே**று வார்த்தைகளில் சொல்லவேண்டும் என்றால், அவர்கள் பொதுக்குற்றவாளிகள் (Common Criminals). ஆனால், அவர் சம்பிரதாயபூர்வமாக இணைப்பாட்சிக்கு எதிராக (பொருளாதார) முற்றுகையை அமுல் செய்தபோது, அமெரிக்க நீதிமன்றங்கள் அதனை ஒருமுறையான **'போர்ப்பிரகடனம்'** என்று விளங்கிக் கொண்டன. அத்தோடு, அந்தக் கிளர்ச்சியையும் அங்கீகரித்தன.

எனவே முற்றுகை என்பது, ஒரு போர்ச்செயலாகும். அது அரசு ஒன்று போரில் ஈடுபட்டிருப்பதை அந்த அரசு ஒப்புக்கொண்டதற்குச் சமமாகும். அப்போது நாங்கள் வெறுமனே பொதுக் குற்றவாளிகளோடு சம்பந்தம் வைத்திருப்பதாகச் சொல்ல முடியாது.

**கேள்வி:** நான் இப்போது இதனைக் கொஞ்சம் மேலே விளக்குமாறு உங்களைக் கேட்கப்போகிறேன். காலனித்துவம் பற்றிய உங்கள் விளக்கம், பிரித்தானியர்கள் 1948இல் வெளியேறினார்கள் என்று நினைக்கிறேன்......

**பதில்:** நான் அங்குள்ள நிலைமையைப் படித்துக்கொண்டதன் அடிப்படையில், சிறிலங்காவில் காலனித்துவ நிலைமை இருக்கிறது. அங்கு இரண்டு வெவ்வேறு அரசுகள் இருந்தன. பிரித்தானியர் வந்து அந்த இரண்டையும் பலாத்காரமாக காலனித்துவ ஆக்கிரமிப்பின் அடிப்படையில் இணைத்து விட்டார்கள்.

எனவே பிரித்தானியர் வெளியேறியபோது, விட்டுச்சென்ற ஐக்கிய அரசு காலனித்துவ ஆக்கிரமிப்பு, மிருகத்தனமான வலிமை இவற்றின் பெறுபேறாகும். இந்த அடிப்படையில் பிரித்தானியர் விட்டுச் சென்ற அரசு, பிரித்தானிய காலனித்துவத்தின் எச்சமாகும்.

இரண்டாவதாக, பிரித்தானியர்கள் விட்டுச்சென்ற அரசியல் யாப்பு, சரியாகச்சொன்னால் மக்களிடம் திணிக்கப்பட்ட யாப்பு, தமிழ் மக்களுக்கு சில அடிப்படை மனிதவுரிமைகளை உத்தரவாதம் செய்தது. 1950 தொடக்கம் சிங்களவர் இந்த அடிப்படை பாதுகாப்புக்களை, அரசியல் யாப்பில் மாற்றமுடியாதபடி எழுதப்பட்ட விதிகளை அழித்து விட்டார்கள். இதன் மூலம், பிரித்தானியர்களால் திணிக்கப்பட்ட காலனித்துவ அரசியல் யாப்பு ஒழிக்கப்பட்டது. இது தமிழர் சிங்களவர்களுக்கிடையிலான சண்டையை துவக்கிவிட்டது.

**கேள்வி:** வரலாற்று வழியாக, தமிழர்களது பரம்பரை பூமியாக இருந்த பிரதேசத்தில் சிங்கள அரசினால் திட்டமிட்ட குடியேற்றத்தின்கீழ் சிங்களவர் குடியேற்றப்பட்டார்கள். இது காலனித்துவத் தாக்கத்தை உண்டாக்கியதா?

**பதில்:** சிங்கள அரசு விவரித்தவாறு, இதனைக் காலனித்துவக் கொள்கை என விவரித்துள்ளது.

**கேள்வி:** சிறிலங்காவில் இடம்பெறும் மோதலைமிட்டு நீர் அறிந்தளவில் வேறு ஏதாவது ஒரு நாடு அதனைக் கண்டுகொண்டுள்ளது அல்லது அதில் பங்குபற்றியுள்ளதா?

**பதில்:** ஆம், நோர்வே அரசு இதில் தலையிடவும், தனது நல்லெண்ண செயற்பாடுமூலம் சிங்கள அரசுக்கும் தமிழர்களுக்கும் இடையிலான சண்டையைத் தீர்த்து வைக்க முன்வந்தது.

இது நோர்வே அரசு, இஸ்ரேலியர்களுக்கும் பாலஸ்தீனியர்களுக்கும் இடையிலான சண்டையில் தலையிட்டதற்கு ஒப்பானதாகும். சமாதானத்துக்கான பேச்சுவார்த்தைகள்....... நானும் இதில் கலந்துகொண்டேன். வாஷிங்டனில் நடைபெற்றுக் கொண்டிருந்த போது, நோர்வே ஓசைப்படாமல் பி.எல். ஓவுக்கும் இஸ்ரேலிய அரசுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்து வைக்க, தனது உதவியை நல்க முன்வந்தது. இந்தப் பேச்சுவார்த்தைகள்தான் ஒஸ்லோ ஒப்பந்தத்திற்கு (Oslo Agreement) வழிகோலியது.

ஆகவே நோர்வே அரசு, விடுதலைப்புலிகளைப் போராளிகள் என நிட்சயமாகக் கருதுகிறது. மேலும் போராளிகளுக்கு உரிய உரிமைகளும், தனிச் சுதந்திரங்களும் (Rights and Privilegs) யதார்த்த அரசும் விடுதலைப்புலிகளுக்கு, இஸ்ரேலுக்கு எதிரான போராட்டத்தில் பி.எல்.ஓவிற்கு இருந்தமாதிரி இருக்கிறது.

**கேள்வி:** இப்போது நீதிமன்றத்திற்கு யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழு பற்றிய சாட்சியங்களைச் சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

1995ஆம் ஆண்டு ஆரம்பத்தில் உருவான மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தை (Cessation of Hostilities Agreement) கண்காணிக்க, கனடா உட்பட பல நாடுகள் சம்பந்தப்பட்டன. உங்கள் முடிவுகளுக்கு இதன்தாக்கம் ஏதாவது உண்டா?

*பதில்:* மீண்டும், இது விடுதலைப் புலிகளின் போராளிகள் அந்தஸ்தை, சம்பந்தப்படுத்தப்பட்ட நாடுகள் அங்கீகரித்ததைக் காட்டுகிறது. விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகள் அல்ல. அவர்கள் வெறும் குற்றவாளிகள் அல்ல, போராளிகள் அந்தஸ்து படைத்தவர்கள் என்பதைக் காட்டுகிறது. அப்படி அல்லாவிட்டால் கண்காணிப்புக் குழுக்களில் இந்த நாடுகள் இடம் வகித்திருக்கமாட்டா.

மேலும் சம்பந்தப்பட்ட நாடுகள், திறமையான சர்வதேசச் சட்டவாதிகளைத் தங்களுடன் வைத்திருக்கிறார்கள் என நம்புகிறேன். இதில் கனடாவும் அடங்கும். நான் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தைப் படித்தது போலவே, கனடாவும் அதைப்படித்திருக்கும். அதாவது சிறிலங்கா அரசு, விடுதலைப் புலிகளைச் சர்வதேசச் சட்டத்தின்கீழ் தனிச்சுதந்திரங்களும், உரிமைகளும் உடைய போராளிகள் என அங்கீகரித்துள்ளது. ஆகவே, அந்த ஒப்பந்தத்தைக் கண்காணிக்க அந்த நாடுகள் ஒப்புக்கொண்டன.

எனவே இந்த நாடுகள், இதில் சம்பந்தப்பட்டதன் மூலம் விடுதலைப் புலிகளது, 'போராளிகள் அந்தஸ்தை' காத்திரமான முறையில் அங்கீகரித்துள்ளன.

**கேள்வி:** பதிவு செய்வதற்காக நான் ஒரு விளக்கத்தைப் பெற விரும்புகிறேன். 1949ம் ஆண்டு ஜெனிவா மரபுகள், 77ஆம் ஆண்டு மேலதிக ஒப்பந்தம், சர்வதேச மட்டத்தில் செயல்படுத்தப்படுகிறதா? இவை மரபுச்சட்டங்கள் என்ற அந்தஸ்தை அடைந்து விட்டனவா?

**பதில்:** 1949 மரபுச்சட்டங்கள் நான்கும் எவ்வித சந்தேகத்துக்கும் இடமின்றி அந்த அந்தஸ்தை அடைந்து விட்டன. இது விவாதத்திற்கு அப்பாற்பட்டது. அநேகமாக உலகில் உள்ள ஒவ்வொரு நாடும் இந்த நான்கு மரபுகளையும் அங்கீகரித்துள்ளன. இன்னும் சொல்லப் போனால், ஐ.நா சாசனத்தைவிட, கூடுதலான நாடுகள் ஜெனிவா மரபுகளை அங்கீகரித்துள்ளன.

என்ன நடந்தது என்றால் 1960 களில், 1970 களில் காலனித்துவ ஆட்சிமுறைகளுக்கு எதிராகத் தோன்றிய தேசிய விடுதலை இயக்கங்களது போராட்டங்களையிட்டு, குறிப்பாகச் செயற்படுவதற்கு, தனித்த மேலாதிக்க ஒப்பந்தம் இருக்க வேண்டும். என்பது ஒப்புக்கொள்ளப்பட்டது.

இந்த நான்கு ஜெனிவா மரபுகளும் 1949ல் வரையப்பட்டபோது, அவை இரண்டாவது உலக யுத்தத்தின்போது இருந்த மோதல்கள் பற்றிய பின்நோக்கோடு செய்யப்பட்டன. இதனால் இந்தமரபுகள், **'தேசிய விடுதலை இயக்கங்கள்'** பற்றிக் குறிப்பிடவில்லை. இராணுவங்கள் பற்றியே குறிப்பிட்டன. இருந்தும், பிரான்சு எதிர்ப்பு (French Resistance) பற்றி இந்த மரபுகளில் காணப்பட்ட ஒருவிதி (அதுபற்றி) குறிப்பிட்டுள்ளது.

நாசிகள், பிரான்சு எதிர்ப்பாளர்கள் ஒரு பாவகரமான குற்றவாளிகள் என்ற நிலைப்பாட்டை எடுத்தார்கள். ஆனால் நாம் பின்நோக்கிப் பார்க்கும் போது, அந்தநிலைப்பாடு பிழை என்பதை நாம் எல்லோரும் ஒத்துக்கொள்ள வேண்டும். அதற்காக அந்த மரபுகளில் ஒரு விதி சேர்க்கப்பட்டது.

ஒரு தேசிய விடுதலை இயக்கத்தின் உரிமைகள், தனிச்சுதந்திரங்கள், பொறுப்புக்கள், கடப்பாடுகள் வரையறை செய்யப்பட முயற்சி செய்யப்படவில்லை. அவர்களுக்கு, **'சுயநிர்ணய உரிமை'** இருந்தாலும், அந்த உரிமையை நிலைநாட்ட ஆயுதபலத்தை உபயோகிக்கும் உரிமை இருந்தாலும், தேசிய விடுதலை இயக்கங்கள் வெறுமனே யாரைக்கொல்ல விரும்பினாலும் கொல்லலாம் என்றில்லை. குறிப்பாக, அப்பாவிப் பொதுமக்களைக் கொல்லும் உரிமை இல்லை. போரில் இராணுவங்களுக்கு வழக்கமாக எத்தகைய கடப்பாடுகளும் கடமைகளும் உண்டோ, அவை விடுதலை இயக்கங்களுக்கும் உண்டு.

எனவே, தேசிய விடுதலை இயக்கங்களை எப்படி நடாத்துவது என்ற பிரச்சனையே, 1974–1977 வரை நடந்த ஜெனிவா மாநாட்டுக்கும் அந்த மாநாட்டில் **'மேலதிக ஒப்பந்தம்'** ஒன்றும் உருவாகுவதற்கு வழிகோலியது. கனடா இந்த மாநாட்டில் கலந்து கொண்டது. பின் கனடா அதற்கு உடந்தையாகியது.

எனக்குத்தெரியாது, கடைசியாக நான் பார்த்தபோது மேலதிக ஒப்பந்தம் ஒன்றை அங்கீகரித்த நாடுகளின் தொகை 70, 80, 90 ஆக இருந்தது. நீங்கள் சரியான மேலதிக ஒப்பந்தம் 1ஐ அங்கீகரித்த நாடுகளின் எண்ணிக்கையைத் தேடிக் கண்டுபிடித்துக் கொள்ளலாம்.

சில நாடுகள் மேலதிக ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. ஐக்கிய அமெரிக்கா ஏற்றுக்கொள்ளவில்லை. இருந்தும் சனாதிபதி றீகன் மேலதிக ஒப்பந்தம்–1 பற்றி இப்படிக் குறிப்பிட்டார். "மேலதிக ஒப்பந்தம்– 1 இன் பெரும்பான்மை விதிகள் மரபு சர்வதேசச் சட்டமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால், நாங்கள் தேசிய விடுதலை இயக்கங்கள் பற்றிய மாநாட்டின் முடிவுகளை ஏற்றுக்கொள்ள முடியாது. ஆன காரணத்தினால் மேலதிக ஒப்பந்தம்– 1ஐ முறையாக அங்கீகரிக்க மாட்டோம்."

எனவே, அமெரிக்கா விதி– 1(4)ஐ நிராகரித்து விட்டாலும், மேலதிக ஒப்பந்தத்தின் ஏனைய பகுதிகளை மரபு சர்வதேச சட்டமாக ஏற்றுக் கொண்டுள்ளது.

தொடரும்......

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மக்கள் பணியில் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் (பிரித்தானிய கிளை)



வீட்டின் வெளிச்சுவரோடு வாழ்கின்ற எம்மக்கள்

## தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் பணி

இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் வாழும் தமிழ் மக்களுக்கு அதிகளவில் நிவாரணம் அளிப்பதும் நீண்டகாலப் புனர்வாழ்வுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதுமாகும்.

### எமது நோக்கங்களாவன:

* இலங்கையின் வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்களுக்கு உணவு, உடை, வதிவிட வசதிகள் போன்ற அத்தியாவசியப் பொருட்களைத் தேவைக்கேற்ப உடனுக்குடன் அளித்தல்.
* வட-கிழக்கில் வாழும் தமிழ் அகதிகளின் சுய அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிபுணத்துவ உதவிகள் அளிப்பதோடு நிதி உதவியும் வழங்குதல்.
* இலங்கையில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடாத்தும் புனர்வாழ்வுப்பணிக்கு, பிறதேசங்களில் இருந்து நிதி உதவி பெற வழி வகை செய்தல்.
* இலங்கையின் வட-கிழக்குப்பகுதியில் அல்லலுறும் தமிழர்களின் துன்பநிலை பற்றி, சர்வதேச உலகுக்கும் அரசுகளுக்கும் அக்கறை காட்டக்கூடிய முறையில் உண்மை நிலைகளை அறியப்படுத்தப் பிரச்சாரம் செய்தல்.
* சிறிலங்கா அரசு, தமிழ் மக்களுக்கெதிராக மேற்கொள்ளும் பொருளாதாரத் தடையை நீக்க முயற்சி செய்தல். (பிறநாடுகளினூடு அழுத்தம் கொடுத்தல்) அதன் மூலம் தமிழ் அகதிகளுக்கு உணவு மற்றும் மருத்துவ வசதிகள் தங்குதடையின்றிக் கிடைக்க வழி செய்யலாம்.

### எமது கழகம் பற்றி ......

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் 1985ஆம் ஆண்டு முதலில், இலங்கையிலிருந்து தென் இந்தியாவிற்கு இடம்பெயரும் மக்களின் நலன்கருதித் தென் இந்தியாவில் ஆரம்பிக்கப் பட்டது.

1987முதல் இலங்கையின் வட-கிழக்குப் பகுதியில் தொடர்ச்சியான போரின் உக்கிரத்தால் இலங்கை வாழ் தமிழ் மக்களுக்குச் சேவை செய்யும் பொருட்டு புனர்வாழ்வுக் கழகத்தில் திட்டஅமுலாக்கல் அலுவலகம் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

அவுஸ்திரேலியாவில் இயங்கும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம், உலகளாவிய ரீதியில் இயங்கும் 16 சர்வதேச தமிழர் புனர்வாழ்வுக் கழகங்களுக்கும் இணைப்பு அலுவலகமாக இயங்குவதன் மூலம் இலங்கையில் வாழும் தமிழ் அகதிகளின் புனர்வாழ்வுப் பணிக்குப் பெரிதும் உறுதுணையாக இருக்கிறது. ஐக்கிய இராச்சியத்தில் (பிரித்தானியாவில்) இயங்குகின்ற தமிழ் புனர்வாழ்வுக் கழகம் பதிவு செய்யப்பட்ட அறக்கட்டளை நிலையமாக இயங்குவதோடு, இரு நிலை முகாமைத்துவக் கட்டமைப்புக்களுடன் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

1. கழகத்தின் திட்டவரைதலுக்கு ஆளுமைக்குழு பொறுப்பாக அமைகிறது.
2. கழகத்தின் நாளாந்த நிர்வாகத்திற்கு முகாமைத்துவபீடம் பொறுப்பாக அமைகிறது.

### தமிழர் புனர்வாழ்வுக்கழகம் பின்வரும் வழிகளில் நிதியைச் சேகரிக்கின்றது.

* தனிப்பட்டவர்களினதும் சங்கங்களினதும் நன்கொடைப் பணம்
* திட்டமிட்ட குறிப்பிட்ட அபிவிருத்திகள்
* அவசரகாலத் திட்டங்கள்.
* கலை நிகழ்ச்சிகள் ஒழுங்கு படுத்துதல்

புனர்வாழ்வுக் கழகத்தின் ஆளுமைக்குழு அங்கத்தவர், முகாமைத்துவ சபை மற்றும் தொண்டர்கள் வழங்கும் ஆலோசனை, நேரம், சேவை அனைத்தும் முற்றிலும் இலவசமானதாகும்.

## தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் வெற்றிகரமாக நடாத்தப்பட்ட பணிகள்

### சிறுவர் பராமரிப்புத் திட்டம்

பராமரிப்புப் பெற்றோர் மூலம், பெற்றோர் பாதுகாவ லரை இழந்த 36 சிறுவர்கள், பிரித்தானியாவில் இருக்கும் பராமரிப்புப் பெற்றோரால் பராமரிக்கப்படுகின்றனர்.

### சத்துணவுப் பராமரிப்பு நிலையம்:

இந்நிலையம் சத்துணவுகளை வழங்குவதோடு அது சம்பந்தப்பட்ட கல்வியறிவையும் இலங்கை வட - கிழக்கிலுள்ள தமிழர்களுக்கு வழங்குகின்றது. இதன் மூலம் குழந்தைகளுக்கும் பாலூட்டும் தாய்மாருக்கும் போசாக்கின் மையால் ஏற்படும் குறைபாடுகளைத் தவிர்க்க முடிகிறது.

சத்துணவை வழங்கும் பயிர்களை வளர்ப்பதற்கு நிதி உதவி வழங்குவதோடு ஆலோசனையும் ஆதாரமும் அளிக்கின்றது.

* 96ம் ஆண்டு பிரித்தானியாவில் நடைபெற்ற உதைப்பந்தாட்டப் போட்டி மூலம் திரட்டப்பட்ட நிதி 12,000 பவுண்கள் மடுவில் அமைக்கப்பட்டுள்ள சத்துணவுத் திட்டத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்பதை அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.

### விழிப்புலன் செவிப்புலன் அற்ற சிறுவர்களுக்கான பராமரிப்பு நிலையம்

இலங்கையின் வடபகுதியில் உள்ள பாடசாலையில் 5-15 வயதிற்கு உட்பட்ட 25 விழிப்புலன் செவிப்புலன் அற்ற சிறுவர்கள் பராமரிக்கப்பட்டனர்.

இதற்கான நிதி குறிப்பிட்ட திட்டத்திற்கென விதந்துரைக்கப்பட்ட நிதி மூலமும் வழமையான நிதி சேகரிப்பு மூலமும் பெறப்பட்டன.

### மருத்துவ உதவிகள்:

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கு அன்பளிக்கப்படும் நிதி மூலம், வடக்கு கிழக்கு தமிழ் அகதிகளுக்கு மருந்துகளை விநியோகிக்கப் பயன்படுத்தப்படுகின்றது. அத்துடன் பிரித்தானியாவிலுள்ள தமிழர் புனர் வாழ்வுக்கழகத்திற்கு அன்பளிக்கப்பட்ட மருந்து களும் இலங்கையில் வடகிழக்குப் பகுதித் தமிழ் அகதிகளுக்கு அனுப்பப்பட்டன.

போக்குவரத்து வசதியீனங்களாலும், சிறிலங்காவின் திட்டமிட்ட பொருளாதாரத்தடையினாலும் இங்கிருந்து அனுப்பப்படும் மருந்து வகைகள் குறிப்பிட்டளவிலேயே வடகிழக்கைப் போய் அடைகின்றன.

### அவசரகால உதவி

ஒக்டோபர் 95இல் இருந்து சிறிலங்கா ஆயுதப் படையினர் இலங்கையின் வடகிழக்குப் பகுதியில் வாழும் மக்கள் மீது கண்மூடித்தனமான முறையில் எறிகணைத் தாக்குதலும் குண்டுத்தாக்குதலும் நடாத்தி வருகின்றனர். இதனால் எண்ணிப்பார்க்க முடியாதளவு தமிழ் மக்கள் பாரிய இடப்பெயர்ச்சி அடைந்து வருவதனால் அவர்களுக்கு அவசிய உதவி அளிப்பதற்காக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மூல வளங்களும் நிதி வளங்களும் பயன்படுத்தப்படுவதால் கஸ்டமான சூழ்நிலை யொன்றைத் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் எதிர்கொண்டு வருகிறது. இதனால் கார்த்திகை 95ல் கழகம் அவசர நிதி உதவி வேண்டுகோளை விடுத்ததன் விளைவால் பிரித்தானியாவில் தமிழ்ச்சங்கங்கள் சமய ஸ்தாபனங்கள், பல்கலைக்கழக மாணவர் சங்கங்கள் ஒருங்கிணைந்து அளித்த நிதித்திரட்டலால் ஒரு இலட்சம் பவுண்களுக்கு மேலான பணம் திரட்டமுடிந்தது.

### எமது அடுத்த நடவடிக்கைகளாவன

அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களுடன்

* கூட்டங்களை ஏற்படுத்துதல்
* இலங்கையில் தமிழ் அகதிகளின் நிலவரங்களை அறிக்கை மற்றும் பிரசுரங்கள் வாயிலாக அறியத் தருதல்.

### * மருந்துவ, உணவு, சுகாதார வசதிகள் ஏற்படுத்துதல்:

* பிரித்தானிய மற்றும் வெளிநாட்டு அரசாங்கங்கள் மற்றும், அரச சார்பற்ற நிறுவனங்களிடம் தமிழ் அகதிகளுக்கு உணவு மருத்துவ, சுகாதார வசதிகளை ஏற்படுத்துமாறு தூண்டுதல் இதனால் தமிழ் அகதிகளின் சுமையைச் சற்று குறைக்கலாம்.

### * தொடர்ச்சியாக நிதியுதவி வழங்கச் செய்தல்

இதனால் தமிழ் அகதிகளின் அடிப்படை வசதிகளான உணவு, உடை, இருப்பிட வசதிகளை ஏற்படுத்துதல்.

### சிறுவர் பராமரிப்பு

ஐக்கிய இராச்சியத்தில் உள்ளவர்கள் பராமரிக்கப் படுவதற்கென ஒதுக்கப்பட்டுள்ள ஆதரவு தேடும் குழந்தைகளுக்கான பராமரிப்பு பெற்றோரை ஒழுங்குபண்ண முயல்தல்

### சத்துணவு புனர்வாழ்வு நிலையமும் விழிப்புலன், செவிப்புலன், கல்வி நிலையம்

* மேலதிக நிதியுதவிகளை மேற்குறிப்பிட்ட நிலையங்களின் வளர்ச்சிக்கு வழங்கி அவற்றின் செயற்பாடுகளை ஊக்குவித்தல்.



அலயங்களில் அடைக்கலம் தேடும் எம்மவர்கள்


தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின்

**வருடாந்த உதைபந்தாட்டப் போட்டி**

(இப்போட்டியின் மூலம் திரட்டப்படும் நிதி வன்னிப்பகுதியின் அடிப்படை மருத்துவ வசதித் திட்டங்களுக்கு முழுமையாகப் பயன்படுத்தப்படும்)

பல உள்நாட்டு, வெளிநாட்டுக்கழகங்கள் இந்த உதை பந்தாட்டப்போட்டியில் மோதவிருக்கின்றன. இதை விட

* 12ம் அதற்குட்பட்ட வயதுடையோரின் உதைபந்தாட்டம்
* 16 வயதிற்குட்பட்டோரின் உதைபந்தாட்டம்
* பெண்களுக்கான வலைப்பந்தாட்டம்
* சிறுவருக்கான விளையாட்டு நிகழ்ச்சிகள்

**காலம்: 5.5.1997 (வங்கி விடுமுறை)**

காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரை

**இடம்:** Doughlas Eure Sports Centre
Coppermill Lane
Walthamstow, London E17 7HE

**அண்மைய ரயில் நிலையம்:** Blackhorse Road

**அனுமதி 2 பவுண்கள்**


### அன்பார்ந்த தமிழ் மக்களே!

சொந்த மண்ணில் எம் மக்களின் நொந்த நிலையை எண்ணிப் பாருங்கள். காலத்தின் தேவையை அறிந்து இன்று நாம் அவர்களுக்கு உதவத்தவறின், எம் இனத்திற்குப் பெரும் துரோகம் இழைத்தவர்கள் ஆவோம். சிறு துளி பெரு வெள்ளம். இன்னலுறும் எம் மக்களுக்கு நாம் அளிக்கும் சிறிய அளவு பணம் அவர்களின் நல்வாழ்வுக்குப் பெரிதும் உறுதுணையாக இருக்கும். எனவே தாமதியாது உதவுங்கள். மேலதிக தொடர்புகளுக்கு


தமிழர் புனர்வாழ்வுக்கழகம் (பிரித்தானிய கிளை)
Tamils Rehabilitation Organisation
Registered Charity No: 1010029
79 Hoe Street, Walthamstow, London E17 4SA
தொலைபேசி இல: 0181 - 520 5876

www.tamilarangam.net




# போரும் பொருண்மியமும்

## முல்லை மாவட்டத்தில் விலங்கு வேளாண்மைத்துறை அபிவிருத்தி

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் போர்த்திறனிலும் சரி, கலை பண்பாட்டுத்துறையிலும் சரி தன்னகத்தே பெரும் வரலாற்றுப் பெருமை கொண்ட பிரதேசமாகவும், கடின உழைப்பாளிகளைக் கொண்ட பிரதேசமாகவும் விளங்கும் முல்லை மாவட்டம் விவசாயம், விலங்கு வேளாண்மை ஆகிய இரு துறைகளையும் தனது இரு கண்கள் போல் கொண்டுள்ளது. இங்குள்ள மக்களின் வருவாயைப் பெருக்கும் துறையாகக் காணப்படுகின்ற இவ்விரு துறைகளையும் அம்மாவட்ட மக்கள் தம் கடின உழைப்பால் மேம்படுத்தி வந்தனர். ஆனால், சிறிலங்கா அரசின் இனவாத அரசியல் போக்கின் காரணமாகவும், பொருளாதாரத் தடைகளாலும், பெரும் நிலப்பரப்பைக் கடந்த பத்து ஆண்டுகளாக தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்த காரணத்தாலும், இந்திய வல்லாதிக்கப் போர் நடவடிக்கை காரணமாகவும் இப்பகுதி மக்களின் பொருளாதாரம் சிதைவடைந்தன.




இந்த வகையில் விலங்கு வேளாண்மைத் துறையைப் பொறுத்தளவில், மிகவும் மேம்பாடான நிலையில் காணப்பட்ட தமிழீழத்தின் இதயப் பகுதியாக விளங்கும் மணலாற்றைக் கைப்பற்றுவதற்காக இந்திய, சிங்களப் படைகள் நடத்திய தொடர்ச்சியான ஆக்கிரமிப்பு, பொருளாதார அழிப்புப் போர் நடவடிக்கைகளால் அப்பகுதி சிதைவடைந்தது. இதனால், இங்கு காணப்பட்ட விலங்கு வேளாண்மைத் துறையில் முக்கியம் பெறும் நல்லினக் காளை இனங்களான கிளாரி (காங்கேயன்) இன இழுவை மாடுகளும், நல்லினப் பசுக்கள், "சூர்த்தி" இன எருமை மாடுகள் ஆகியன கவனிப்பாரற்றுக் கட்டாக்காலிகளாகச் சிதறி ஓடின. மிதிவெடிகளிலும் துப்பாக்கிச் சூடுகளிலும் குண்டு வெடிப்புகளிலும் அகப்பட்டு ஊனமுற்றன அல்லது இறந்தன. அத்துடன், கால்நடைப் பண்ணையாளர்களும் உரிமையாளர்களும் இடம்பெயர்ந்ததுடன், தம்முடன் இழுத்துச் சென்ற எஞ்சிய கால்நடைகளுக்குச் சிகிச்சை அளித்தல், மருத்துவ ஆலோசனை பெறல் என்பவற்றில் பெரும் கஸ்டத்தை எதிர்நோக்கினர். மேலும் போக்குவரத்துச் சீர் இன்மையால் ஏற்பட்ட பால் மற்றும் விலங்கு வேளாண்மைத் துறை, உற்பத்திப் பொருட்களின் சந்தைப்படுத்தல் பிரச்சினை போன்ற நிலைகளினாலும் வேறு பல காரணிகளாலும் முல்லை மாவட்டத்தில் விலங்கு வேளாண்மைத்துறை மிக மிகப் பாதிப்படைந்தது.



வரலாற்றுப் புகழ் பெற்ற முல்லைப் பெருஞ்சமரினால் (ஓயாத அலைகள்) முல்லை மாவட்டம் விடுவிக்கப்பட்டு விட்டது. முகிழ்ந்து நிற்கும் முல்லையிலே இன்று தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தமது பொருண்மியத் திட்டங்களை வேகமாகச் செயற்படுத்தி, பலனை மக்களுக்கே கொடுக்க விரும்புகின்றது. அதில் முக்கியமாக விலங்கு வேளாண்மை பெரும் பங்கை வகிக்கின்றது. இதன் அடிப்படையில் கால்நடைகளைப் பராமரிக்கவென மணலாற்றுக் கோட்டத்திலும், முள்ளிய வள்ளையிலும் கால்நடை சுகாதார சேவை நிலையங்களை அமைத்து, அங்கு அத்துறைசார் பயிற்சியாளர்களை நியமித்து அங்குள்ள பண்ணையாளர்களுக்கு இலவச ஆலோசனை வழங்கி கால்நடை வளர்ப்பை ஊக்குவித்து, தடுப்பு ஊசி போடல், சிறு சிகிச்சை வழங்கல் என்பனவும் மேற்கொள்ளப்படுகின்றது. அத்துடன், கால்நடை சுகாதார திணைக்களங்களுக்கூடாக கால்நடைகளுக்கு தேவையான மருந்துகள் பண்ணையாளர்களுக்கு கிடைப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. மேலும், சேவை நிலையங்களை மாவட்டமெங்கும் அமைப்பதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அத்துடன், பண்ணையாளர்களுக்கிடையே மிக நீண்ட காலமாகக் காணப்பட்ட சந்தைப்படுத்தல் பிரச்சினையை நிவர்த்தி செய்யும் முகமாக, குமுழமுனையில் நெய் உற்பத்தி நிலையம் திறக்கப்பட்டு அங்கு பால் கொள்வனவு இடம் பெற்று வருவதுடன், நெய் நீக்கிய பால், சுவை ஊட்டப்பட்டுப் பிற இடங்களுக்கு விற்பனைக்காக அனுப்பப்படுகின்றது. சேகரிப்பு நிலையத்தில் சேகரிக்கப்படும் பால், பால் குறைவான இடங்களுக்கு கொண்டு சென்று விற்பனை செய்யப்படுகின்றன.

மேலும், இத்திட்ட விரிவாக்க முயற்சியாக மேச்சற்தரைத் திட்டங்கள், நல்லினப் புல் வளர்ப்புத் திட்டங்கள் என்பன செயற்படுத்தப்படுகின்றன. இதற்கென முல்லை மாவட்டம் பேராற்றுக்கரையில் மேற்கொள்ளப்பட்ட பரீட்சார்த்த புல் வளர்ப்புத் திட்டம் பெரும் வெற்றி அடைந்ததைத் தொடர்ந்து, நல்லினப் புல் வகைகளான "நேப்பியர்", "கினிடி", என்பன பண்ணையாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டு அவற்றைப் பெருக்குவதுடன் குளக்கரைகள், நீரேந்துப் பிரதேசங்கள், வாய்க்கால் காடுகள் ஆகிய பொது இடங்களிலும் இப் புல் வளர்ப்பு சமூக மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

மேலும், ஒருங்கிணைந்த பண்ணைத் திட்டத்தினூடாக பன்றி, முயல், மாடப்புறா, சிறிய இனக் கோழி, ஆடு, குதிரை, வான்கோழி ஆகிய அருகிவரும் இனங்களை வளர்த்து இனவிருத்தி செய்வதோடு பொதுமக்களையும் இக்கால்நடை வளர்ப்பில் ஊக்குவிப்பதற்காகக் கோழிக்குஞ்சு விநியோகங்கள் என்பன மேற்கொள்ளப்படுகின்றன.

இவ்வாறான நல்லினக் கால்நடைகளை அழிவிலிருந்து கட்டுப்படுத்தும் முகமாக மேற்கொள்ளப்பட்டுவரும் திட்டங்களும், இறைச்சி பரிசோதனை முறைகளும், திட்டமிட்ட விலங்கு வேளாண்மைத்துறை மேம்பாட்டிற்கான கால் நடைகளுக்கு இலக்கமிடல் திட்டங்களும், நோய்த் தடுப்பிற்கான விரைவான நடவடிக்கைகளும், மேச்சற்தரைத் திட்ட விரிவாக்கம் என்பவற்றுடன் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் புனரமைத்தல் போன்ற சேவைகள் மூலமும் முல்லை மாவட்டம் விலங்கு வேளாண்மைத்துறையில் நல்ல வளர்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருப்பதுடன், எமது தமிழீழத் தேசத்தின் தற்சார்புப் பொருண்மிய வளர்ச்சிக்கு இம் மாவட்டமும், இத்துறையும் பாரிய பங்கை வகிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இத்திட்டங்கள் வெற்றி பெறச் செய்வதில் விஞ்ஞான அறிவும், வசதியும் பெற்று வெளிநாடுகளில் வாழும் ஈழத் தமிழர்களின் பங்களிப்பு பெரிதும் வேண்டப்படுகிறது. இத்துறையில் நீங்கள் பெற்றுள்ள கல்வியறிவு, அனுபவ அறிவு ஆகியவற்றை உங்களின் நாட்டிலுள்ள தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின ருக்கு நேரடியாகவோ அல்லது எழுத்து மூலமோ கொடுத்து உதவுங்கள்.

அத்துடன் "சிறு துளி பெரு வெள்ளம்" என்பது போல உங்களினால் இயலுமான அளவு நிதியுதவியினைக் கொடுத்து இத்திட்டங்களில் நீங்களும் பங்கெடுத்துக் கொள்ளுங்கள்.

தகவல்:
ஆதாரம் (தமிழீழம்)

### தமிழீழத் தேசாபிமானிகளின் கவனத்திற்கு !

இத்திட்டங்கள் வெற்றி பெறச் செய்வதில் விஞ்ஞான அறிவும், வசதியும் பெற்று வெளிநாடுகளில் வாழும் ஈழத் தமிழர்களின் பங்களிப்பு பெரிதும் வேண்டப்படுகிறது. இத்துறையில் நீங்கள் பெற்றுள்ள கல்வியறிவு, அனுபவ அறிவு ஆகியவற்றை நீங்கள் வாழும் நாட்டிலுள்ள தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினருக்கு நேரடியாகவோ அல்லது எழுத்து மூலமோ கொடுத்து உதவுங்கள்.

அத்துடன், "சிறு துளி பெரு வெள்ளம்" என்பது போல, வளமான தமிழீழத்தைக் கட்டி எழுப்ப, உங்களினால் இயலுமான அளவு நிதியுதவியினைக் கொடுத்து இத்திட்டங்களில் நீங்களும் பங்கெடுத்துக் கொள்ளுங்கள்.

ஆக்கம் : தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் (இலண்டன்)

www.tamilarangam.net

# தமிழீழ விடுதலைப்

ஒரு விடுதலைப் போராட்டம் முதிர்ச்சி பெறுவதும் முழுமை பெறுவதும் பெண்களின் பங்களிப்பில் தங்கியிருக்கிறது. உலக விடுதலைப் போராட்ட வரலாறுகளை எடுத்துக் கொண்டால் இந்த யதார்த்த உண்மையைப் புரிந்து கொள்ளலாம். ஒரு தேசத்தினது அல்லது இனத்தினது சனத்தொகையில் சரி பாதியாகவுள்ள பெண்கள், விடுதலைப் போராட்டத்தில் முழுமையான பங்களிப்பைச் செய்ய முன்வரும் போதுதான் போராட்டம் முனைப்புப் பெற்று முன்னேறுகிறது.



உலக வரலாற்றில் பெற்றி கண்ட தேசிய விடுதலைப் போராட்டங்களில் பெண்கள் ஆயுதமேந்திப் போராடியிருக்கிறார்கள். தேசியப் பொருண்மியத்தைப் பேணி வளர்ப்பதிலும் கல்வி, சுகாதாரம், சமூக சேவை போன்ற துறைகளிலும் அளப்பரிய தொண்டு புரிந்து நாட்டின் விடுதலைக்காகப் போராடியிருக்கிறார்கள். விடுதலைப் பற்றும், தேசப் பற்றும் கொண்ட இந்தப் புரட்சிகரப் பெண்களின் பங்களிப்பால், எத்தனையோ ஒடுக்கப்பட்ட தேசிய இனங்கள் இன்று சுதந்திரம் பெற்ற நாடுகளாக மாறியுள்ளன.

தமிழீழத்திலும் ஒரு தேசிய விடுதலைப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எமது எதிரியான சிங்களப் பேரினவாத அரசு, தமிழீழ மக்களுக்கு எதிராக ஒரு இனப்படுகொலைப் போரைக் கட்டவிழ்த்து விட்டிருக்கிறது. இந்தப் போரானது, எமது சமுதாயக் கட்டமைப்பில் பூகம்பமான தாக்கங்களை விளைவித்திருக்கிறது. வரலாறு கண்டிராத பேரழிவுகளை ஏற்படுத்தியிருக்கிறது. இலட்சக்கணக்கான மக்களை இடம்பெயரச் செய்து அகதிகளாக்கியிருக்கிறது. இந்தப் போரின் ஒட்டுமொத்த விளைவாக, எமது சமுதாயத்தில் ஆண்களின் சனத்தொகை கணிசமான அளவு குறைந்துள்ளது. சிங்கள இராணுவத்தின் தாக்குதல்களால் ஆயிரக்கணக்கான ஆண்கள் அநியாயமாகக் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.



எதிரியுடன் போராடி, ஆயிரக்கணக்கில் எமது போராளிகள் வீர மரணத்தைத் தழுவியுள்ளனர். இது ஒரு புறமிருக்க, பல்லாயிரக்கணக்கான ஆண்கள் தமது சொந்தத் தாயகத்தை விட்டு அந்நிய நாடுகளுக்குச் சென்றிருக்கிறார்கள். பயத்தினால் ஓடியவர்களும், படிக்கச் சென்றவர்களும், வேலை வாய்ப்புத் தேடிச் சென்றவர்களுமாக பெருந்தொகையான ஆண்கள் வெளிநாடுகளுக்கு இடம்பெயர்ந்துள்ளனர். இதன் காரணமாக, இன்று தமிழீழத்தில் பெண்களின் சனத்தொகையே ஆண்களை விடக் கூடுதலாக உள்ளது. பெண்கள் பெரும்பான்மை யாகவுள்ள சமுதாயம் என்பதால், தேசிய சுதந்திரப் போராட்டத்திலும் எமது தேசத்தின் வாழ்விலும் பெண்களின் பங்கு முக்கியமாகின்றது.

## விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் பங்கு

காலம் காலமாக பெண் ஒடுக்குமுறை நிலவி வந்த ஒரு பழமைவாத சமுதாயமாக இருந்தபோதும், தேசிய விடுதலைப் போராட்டத்தில் தமிழீழப் பெண்ணினம் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்து வருகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. எமது சமுதாயத்தைப் பொறுத்தவரை இது ஒரு புரட்சிகரமான முன்னேற்றம் என்றுதான் சொல்ல வேண்டும். ஆயுதப் போராட்டக் களத்தில் குதிக்கும் அளவிற்குப் பெண்களின் பங்களிப்பு உயர்ந்த வடிவம் பெற்றிருக்கிறது.

ஐநூறு ஆண்டுகளுக்கு மேலாக, அந்நிய காலனித்துவத்தாலும் சிங்கள அடக்குமுறையாலும் அடிமைப்பட்டுக் கிடந்த ஒரு சமுதாயம், கடந்த பதினைந்து ஆண்டு காலத்தில், அதாவது விடுதலைப் புலிகளின் ஆயுதம் தரித்த விடுதலைப் போராட்டம் ஆரம்பமாகி வளர்ச்சி கண்ட காலவரம்பிற்குள், மாபெரும் எழுச்சி கொண்டு பெண்களின் புரட்சிக்கும் வழி வகுத்திருக்கிறது.

இன்று ஆயிரக்கணக்கான இளம் பெண்கள் ஆயுதமேந்தி, போராட்டக் களத்தில் குதித்திருக்கிறார்கள். சமுதாயத்தின் பழமைவாத பெண் அடிமைத்தன விலங்குகளை உடைத்தெறிந்து, தாய் மண்ணை மீட்டெடுக்க களத்தில் குதித்திருக்கும் இந்தப் பெண் புலிகளின் வீரமும் – தியாகமும் – தேசாபிமானப் பற்றும் பெண்ணுலகிற்கே பெருமை தரக்கூடியது. பலம் வாய்ந்த மகளிர் படைப்பிரிவு ஒன்று உருவாக்கப்பட்டு, அது தமிழீழ விடுதலைப் புலிகளின் தேசிய விடுதலை இராணுவத்தின் ஒரு அங்கமாகச் செய்பட்டு வருகிறது. ஆண் போராளிகளுடன் சரிசமமாக நின்று போர் புரியும் துணிச்சலும், மனவலிமையும், தியாக உணர்வும் தமக்குண்டு என்பதைப் பெண் பலி வீராங்கனைகள் நிரூபித்துக் காட்டியுள்ளனர் – காட்டி வருகின்றனர். கொக்காவில், மாங்குளம் இராணுவ முகாம்கள் தகர்க்கப்பட்டதிலிருந்து முல்லைத்தீவு தற்போதைய பரந்தன் – ஆனையிறவுத் தாக்குதல்கள் ஈறாக மகளிர் படையணிகள் மகத்தான சாதனைகளைப் புரிந்திருக்கின்றன.

யாழ்.கோட்டை முற்றுகையிலும் பங்கு கொண்டு, பயங்கரமான விமானக் குண்டு வீச்சுக்கள் மத்தியிலும் எதிரியுடன் போரிட்டிருக்கிறார்கள். வரலாற்று முக்கியத்துவம் பெற்ற இந்தச் சண்டைகளில் பெண் போராளிகள் பலர் களத்தில் மடிந்திருக்கிறார்கள். இப்படியாக இளம் பெண்கள் ஆயுதப் போராட்டத்தில் இறங்கி வியத்தகு தியாகங்களைப் புரிந்து வருவது – தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தில் புரட்சிகரமான ஒரு புதிய பரிமாணத்தைப் பிறப்பித்திருக்கிறது.



> கொக்காவில், மாங்குளம் இராணுவ முகாம்கள் தகர்க்கப்பட்டதிலிருந்து முல்லைத்தீவு தற்போதைய பரந்தன் தாக்குதல்கள் ஈறாக மகளிர் படையணிகள் மகத்தான சாதனைகளைப் புரிந்திருக்கின்றன.

## தேசத்தின் வாழ்வும் தமிழீழப் பெண்களும்

பெண்களின் பங்களிப்புடன் ஆயுதப் போராட்டம் முன்னேறி வருவதும் – பரந்துபட்ட வெகுசனங்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பின்னால் அணி திரண்டு நிற்பதும் – சிங்களப் பேரினவாத அரசுக்கு ஆத்திரத்தைக் கொடுத்திருக்கிறது. தமிழ் மக்களைத் தாங்கொணாத துன்பத்திற்குள் தள்ளி, அவர்களது மனவுறுதியை உடைத்து,

www.tamilarangam.net

# போரும் பெண்களும்

விடுதலைப் போராட்டத்தை நசுக்கிவிட, சிங்கள அரசு பல நாசகாரச் செயல்களில் ஈடுபட்டு வருகிறது. இவற்றில் ஒன்றுதான் திட்டமிட்ட பொருண்மியத் தடை.

இதனால் இன்று தமிழீழத்தில் உணவு வகைகளுக்கும், மருந்துப் பொருட்களுக்கும், எரிபொருட்களுக்கும் பெரிய தட்டுப்பாடு நிலவி வருகிறது. இதனால் பொதுமக்கள் பெரும் துன்பத்துக்கு ஆளாகியிருக்கின்றனர். இது எமது மக்களுக்கு ஒரு புதிதான அனுபவமில்லை. எமது பொருண்மிய வாழ்வைச் சிதைத்து, மக்களைப் பட்டினிச் சாவின் விளிம்புக்குத் தள்ளிவிட சிங்கள இனவாத ஆட்சிப்பீடம் பல தடவைகள் முயற்சி செய்துள்ளது. உணவுக்கும் மற்றும் அத்தியாவசியப் பொருட்களுக்கும் நாம் தொடர்ந்தும் சிங்கள தேசத்தில் தங்கியிருப்பது காரணமாகவே, அடிக்கடி இந்த உணவு நெருக்கடியை நாம் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. இந்த ஆபத்திலிருந்து நாம் தப்ப வேண்டுமாயின் தங்கு நிலையற்ற, தன்நிறைவான பொருண்மியத்தைக் கட்டி எழுப்ப வேண்டும். தனியரசு கோரி ஒரு விடுதலைப் போராட்டத்தை நடாத்திக் கொண்டு, எமது எதிரியிடம்



நாம் கைநீட்டி நிற்பது அசட்டுத்தனம். தமிழீழத் தனியரசின் அத்திவாரமாக ஒரு தன்னிறைவான, சிங்கள தேசத்தில் தங்குநிலையற்ற பொருண்மிய வாழ்வை நிர்மாணிப்பது அத்தியாவசியமாகும். இந்தத் தேசிய பொருண்மிய வாழ்வைக் கட்டி எழுப்பும் பணியில் தமிழீழப் பெண்ணினத்தின் பங்கு முக்கியமானது.

காலம் காலமாக, தமிழீழப் பெண்கள் உணவு உற்பத்தியிலும் மற்றும் சிறு கைத்தொழிலிலும் ஈடுபட்டு தேசியப் பொருண்மிய வாழ்வுக்கு முதுகெலும்பாக இருந்து வந்திருக்கிறார்கள். இன்றைய நெருக்கடியான காலகட்டத்திலும், ஆண்களின் சனத்தொகை வெகுவாகக் குறைந்துள்ள இந்தச் சூழ்நிலையில் தொழில் ஆக்க சக்தியிலேயே எமது தேசம் தங்கியிருக்கின்றது. சிங்கள இனவாதம் விடுத்துள்ள சவாலை எதிர்கொண்டு, உற்பத்தித் துறையைத் தன்னிறைவாக்கும் பணியில் பெண்கள் கூடுதலாக ஈடுபட வேண்டும். உற்பத்தித்துறையில் பங்களிப்பது சொந்த வாழ்க்கைக்கு மட்டுமன்றி, தேசத்தின் வாழ்வுக்கும் இன்றியமையாதது என்பதை உணர்ந்து பெண்கள் செயற்பட வேண்டும்.

உணவு உற்பத்தித்துறையில் மட்டுமன்றி, குடும்பப் பொருண்மிய வாழ்வைச் சீரமைக்கும் பணியிலும் பெண்களின் பங்கு முக்கியமானது. அதாவது, சிக்கனமாக வீட்டுப் பொருண்மியத்தைத் திட்டமிட்டு, சுதேசிய உணவுப் பொருட்களைக் கொள்வனவு செய்து, மரபு வழியில் நுகர்வு வழக்கங்களை மாற்றி இன்றைய நெருக்கடியைச் சமாளிக்கவும், உள்ளூர் உற்பத்திகளுக்கு ஊக்கமளிக்கவும் பெண்கள் முன்வர வேண்டும்.

போர்க்காலச் சூழ்நிலையில் ஒரு திட்டமிட்ட இனக்கொலையை நாம் எதிர்கொண்டு நிற்கும் இந்தக் காலகட்டத்தில், போராடி வாழ்வதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை என்ற இக்கட்டான நேரத்தில் குடும்பத் தலைவி என்ற பொறுப்பை வகிக்கும் ஒரு தாய், தனது பிள்ளைகளுக்கு விடுதலையுணர்வையும் – தேசப் பற்றையும் ஊட்டி வளர்க்க கடமைப்பட்டிருக்கிறாள். தாய் என்ற தகுதியை வகிக்கும் பெண்கள், இன்றைய தேசிய விடுதலைப் போராட்டத்திலிருந்து அந்நியப்பட்டு நிற்க முடியாது. ஏனென்றால், இப்போராட்டம் எமது மக்கள் அனைவரினதும், குறிப்பாக எமது இளம் சந்ததியினரது எதிர்கால வாழ்வை நிர்ணயிக்கப் போகிறது. எமது போராட்டத்தின் வெற்றியில் தான் எமது இளம் பரம்பரையினரின் எதிர்கால சுபீட்சம் தங்கியிருக்கிறது.

விடுதலையுணர்வற்று, சுயநலத்திலும் – பழமையிலும் புதைந்துபோய் – போராட்டத்தில் அந்நியப்பட்டு நிற்கும் தாய்மாரும் இருக்கத்தான் செய்கிறார்கள். பிள்ளைகளை வெளிநாட்டுக்கு அனுப்பிவிட்டால் பிரச்சினை தீர்ந்து போகும் எனக் கருதுபவர்களும் நிறையவுண்டு. ஆனால் அதேசமயம், பிள்ளைகளுக்கு விடுதலை உணர்வை ஊட்டி வளர்த்து, அவர்களை விடுதலை இயக்கத்திற்கு ஒப்படைத்துவிடும் புரட்சிகரப் பெண்களும் இருக்கத்தான் செய்கின்றார்கள்.

இன்றைய தாய்க்குலமாகவுள்ள பெண்ணினத்தின் புரட்சிகர விழிப்புணர்வில் தான் – அவர்களது பங்களிப்பில் தான் – எமது எதிர்கால



சந்ததியினரின் வாழ்வும், வீழ்வும் தங்கியிருக்கிறது.

## மக்சிம் கார்க்கி – 'தாய்' நாவலிலிருந்து

கடினமான வாழ்க்கைக்கு ஆளானவர்கள் அனைவரும், அடக்குமுறையாலும் தேவைகளாலும் அலைக்கழிக்கப்பட்டு நைந்து போன மக்கள் அனைவரும், பணக்காரர்களாலும், பணக்காரர்களின் கைக்கூலிகளாலும் தரையோடு தரையாக நசுக்கப்பட்டுக் கிடக்கும் மக்கள் அனைவரும் - மக்களின் நலத்திற்காகப் படுமோசமான சித்திரவதைக்கு ஆளாகி, சிறைக்குள்ளே கிடந்து அழிந்து கொண்டிருக்கும் அந்த மக்களோடு ஒன்று சேர வேண்டும். தங்களைப் பற்றிய எண்ணம் ஒரு சிறிது கூட இல்லாமல் பாதையில் வரும்படி அவர்கள் எவரையும் நிர்ப்பந்தித்ததில்லை. ஆனால், ஒரு மனிதன் அவர்களோடு போய்ச் சேர்ந்து கொண்டால் அவனே அவர்களை விட்டுப் பிரிந்து செல்லமாட்டான். ஏனெனில், அதுவே சரியான பாதை என்பதையும், அதைத் தவிர வேறு மார்க்கமே கிடையாது என்பதையும் அவன் கண்டு கொள்வான். அம் மாதிரி மனிதர்களோடு சேர்ந்து செல்வதைப் பற்றிச் சாதாரண மக்கள் கவலைப்படவே தேவையில்லை.

அந்த மனிதர்கள் அற்ப சொற்ப வெற்றியோடு திருப்தியடைய மாட்டார்கள். சகல ஏமாற்றுக்களையும், சகல பேராசைகளையும், சகல தீமைகளையும் ஒழித்துக் கட்டினாலன்றி அவர்கள் நிறுத்தமாட்டார்கள். அனைத்து மக்களும் ஒன்றாகச் சேர்ந்து ஒரே குரலில், "நான்தான் அதிகாரி. நான்தான் சகல மக்களுக்கும் சமமான பொதுவான சட்ட திட்டங்களை உண்டாக்குவேன்" என்ற கோசத்தைக் கிளப்புகிற வரையிலும், அவர்கள் ஓய்வு கொள்ளமாட்டார்கள். ✳



# தாயகம் நோக்கிய பயணம்




## அத்தியாயம் பதினொன்று (தொடர்ச்சி)

சர்வகலாசாலையிலே அவரைக் காண்பவர்கள் எல்லோரும், சிரித்துக்கொண்டு தங்கள் தொப்பிகளை உயர்த்தி, "காலை வந்தனம் டாக்ரர் ஐயா" (Herr Doctor) – என்பது மிஸ்டர் எனப்பொருள்படும் ஜெர்மன் சொல்) என மரியாதையுடன் தலையைத் தாழ்த்திக் கூறுவார்கள். மாலையிலோ வேறு பேராசிரியர்களும், அவர்கள் மனைவிமார்களுமோ, அல்லது பதினைந்து இருபது மாணவர்களோ அப்பாவின் அறையை நிறைத்திருப்பார்கள். அவர் முழு இரவும் பானங்கள் அருந்தியும், விவாதம் செய்தும், பாட்டுக்களைப் பாடியும் கழிப்பார்கள். அம்மாவின் வயிறு வெளியிலே தெரியும்வரை, அவளும் அவர்களோடு நடனமாடியும், கேலிக்கதைகள் கதைப்பதிலும் பங்கு கொண்டு வந்தாள்.

ஒரு மகிழ்ச்சியான ஏழு வயதுப் பெண்ணுக்கு எத்தனையோ அற்புதமான சுவைகள், நறுமணங்கள், உணர்வுகள், இசைகள் இவைகளை அனுபவிக்கக் கூடியதாக இருந்தது.

எல்லாவற்றிற்கும் மேலாக, தந்தையைக் காண எவரும் இரவுகளில் வராமலும், தந்தைக்கு அறையில் வேலை செய்ய வேண்டியிராமலும், விரிவுரைகளுக்குப் போகவேண்டியில்லாமலும் இருக்கும் சந்தர்ப்பங்கள் மிகமிக அற்புதமானவை.

முழுக்குடும்பத்தினரும் குளிருக்காக நெருப்பெரிக்கும் (Fire Place) இடத்துக்கெதிரே அமர்ந்திருக்க, தந்தையின் மடியில் அமர்ந்து, நெருப்புச் சுவாலைகளை இரசித்தபடி, அப்பாவின் சுங்கான் புகை கமழும் சூழ்நிலையில் அவர் தனது மென்மையான ஆழமான குரலில் வாசிக்கும் தேவதைக் கதைகளை கேட்பது மிக அற்புதமான ஆனந்தமே.

அந்த 1937, 38 களில் காரணம் புரியாத எத்தனையோ விசித்திரமான சம்பவங்கள் நிகழ்ந்தன. ஆட்கள் ஏதோ ஒன்றுக்குப் பயந்தபடி, இரகசியக் குரல்களில் பேசியபடி....... விசேடமாக சர்வகலாசாலை போன்ற இடங்களில்..... ஆயினும் கேளிக்கை காலங்கள் வந்தபோது இவைகள் முக்கியமற்றுப்போயின.

பேராசிரியர் ஜோஹான் பிறமென்றுக்குச் சிந்திக்கப் பல பிரச்சனைகள் இருந்தன. சூழவர நிகழும் முழுப் பைத்தியக்கார நிகழ்வுகளின் மத்தியில் ஒருவன் மூளையைத் தெளிவாக வைத்திருக்க வேண்டும். கடலின் அலைகளினதும் நீள் மட்டங்களினதும் போக்குகளை அவதானித்துத் தொகுப்பது போல், மனிதர்களின் போக்குகளையும் அவதானித்துத் தொகுக்க முடியும். உணர்ச்சி அலைகளும், வெறுப்பும், முற்றாக நியாயமற்ற நிகழ்வலைகளும் நிகழ்ந்து கொண்டிருந்தன. அவை ஒரு கருத்தையுமே தராத அளவு உச்சக்கட்டத்துக்குச் சென்று கொண்டிருந்தன. வாழ்க்கையின் உயர் மட்டங்களில் இருக்கும் பொதுவான வாழ்க்கை முறையோடு சிறிதும் தொடர்பிருக்காத, குறுகிய வட்டங்களில் இருந்தவர்களைத் தவிர, மற்றவர்கள் எல்லோரும் இந்தப் பொதுவான நிகழ்வுகளை அனுபவித்துக் கொண்டிருந்தனர். ஒரு சர்வகலாசாலையும் இப்படியான ஒரு பாதுகாப்பான தீவெனக் கருதிக் கொண்டனர்.

இடைப்பட்ட சரித்திரக் காலப்பகுதிகளில், (Middle Ages) கிறிஸ்தவ புனித யுத்த வீரர்களால் (Crusaders) யூதர்கள் கொல்லப்பட்ட போது வெறுப்பும், பேதமையும் நிலவியது. கறுப்பு மரணத்துக்காகவும் (Black death) கிறிஸ்தவர்களின் குடிநீர்க் கிணறுகளுக்கு நஞ்சூட்டியதற்காகவும் யூதர்கள் குற்றஞ்சாட்டப்பட்ட நாட்களும் கடந்தன. பிரெஞ்சுப் புரட்சியின் பின் ஏற்பட்ட விழிப்புணர்ச்சியின் போது கிறிஸ்தவர்களே, யூத குடியிருப்புக்களின் நுழைவாயில்களைச் சிதைத்தனர். இப்புதிய யுகத்திலோ ஜெர்மனியின் மகிமையும், யூதர்களும் பிரிக்க முடியாதபடி இரண்டறக் கலந்தனர். தங்கள் சொந்தப் பிரச்சனைகளை யூதர்கள், பொதுவான மக்களின் பிரச்சனைகளுக்கு இரண்டாம் பட்சமாகக் கருதினர். பிரதான சமூகத்தோடு யூதர்கள் ஒன்றிப் போயினர். அவர்களிடையே இருந்து எப்படியான உன்னத மனிதர்கள் தோன்றினார்கள். ஹெயின் (Heine) றொத்ஸ் சைல்ட் (Rothchild) கால்மாக்ஸ் (Carl Markx) கொமியூனிஸ்ட் சித்தாந்தத்துறை, மென்டெல்சொன் (Mendelscohn) பிரெயிட் (Frueud) மனோதத்துவ முறை என்று முடிவில்லாமல் பட்டியல் நீண்டு கொண்டே போகும். இம்மாமனிதர்கள் ஜோஹான் பிறமென்றைப் போலவே எப்போதும் ஜெர்மனியர்களாகவே நினைத்து வாழ்ந்தனர்.

யூத எதிர்ப்பு மனப்பான்மை (Anti semitism), மனித சரித்திரத்தை ஒத்தது என ஜோஹான் கிளமென்ற் காரணம் கற்பித்துக் கொண்டார். வாழ்க்கையின்

**லியோன் யூரிஸ்**

ஓர் அங்கம் அது, விஞ்ஞான பூர்வமான உண்மையும் கூட. அதனுடைய அளவும் தீவிரமும் தான் வேறுபடுகின்றன. கிழக்கைரோப்பிய அல்லது அரைக் காட்டுமிராண்டி வாழ்வைச் சீவிக்கும் ஆபிரிக்க யூதர்களை விட அவர் எவ்வளவோ மேலென்று நினைத்துக் கொண்டார். தன்னையே "தாழ்மைப் படுத்திக் கொள்ளும் உறுதிமொழி", (Humiliation Oaths) யும், பிராங்போர்ட் படுகொலைகளும் (Frankfurt massacre) இன்னொரு யுகத்துக் கதைகளாகிவிட்டன.

ஜெர்மனி புதிய அலைகளிலே மிதப்பதற்காக அவர் திரும்பி ஓடப்போவதில்லை. சிறந்த கலாச்சார பாரம்பரியத்தை உடைய ஜெர்மன் மக்கள் இறுதியில் எப்படியும், தற்காலிகமாக நாட்டைக் கைப்பற்றியிருக்கும், இயற்கைக்கு மாறான சக்திகளை ஒழித்துக்கட்டி விடுவார்கள் என்று நம்புவதை நிறுத்தவில்லை.

அடிமேல் அடியாக விழுவதை அவர் அவதானித்துக் கொண்டேயிருந்தார். முதலில் வெறும் கதைகளாக இருந்தது. பின்பு அச்சேற்றப்பட்ட அல்லது மறைமுகமான குற்றச்சாட்டுக்களாகின. யூத வியாபாரங்களையும், தொழில் வல்லுனர்களையும் பகிஷ்கரித்தல் தொடர்ந்தது. பகிரங்க இடங்களில் அவமானப்படுத்துதல், தாக்குதல்கள், தாடியைப் பிடித்திழுத்தல் போன்றவை வார்த்தைதானும் பேசவில்லை. வளர்ந்தவர்களும், சில வேளைகளில் குழந்தைகள் போல் நடந்து கொள்கின்றனர்', வீட்டுக்குச் சென்றகையோடு நானும், சகோதரன் கான்ஸ்சும் படுக்கைக்கு அனுப்பப்பட்டோம். இரகசிய கலந்துரையாடல்கள் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தன. கதவருகில் சென்று சிறிது திறந்து வைத்தால் முழுக் கதைகளையும் கேட்கக் கூடியதாக இருக்கும். தாயாரே மிகவும் திகிலடைந்திருந்தார். தந்தையாரோ வழமைபோல் மிகவும் அமைதியாக இருந்தார்.

ஜோஹான், என் அன்பே நாம் எங்காவது செல்வது பற்றி யோசிக்க வேண்டும். எனக்கு வரவர பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு பாதையில் போகவே பயமாக இருக்கிறது. இம்முறை நாம் இப்பிரச்சினைகள் எங்களைத் தீங்கெதுவும் செய்யாமல் கடந்து செல்லும் என நினைக்கவில்லை.

> இஸ்ரேல் –
> அது யூதர்களின் தாயகம் !
> தங்கள் தாயகத்தை விட்டு அடித்துத் துரத்தப்பட்ட யூத மக்கள் 100 க்கு மேற்பட்ட நாடுகளில் குடியேறியிருந்தார்கள். ஆனால் 2000 ஆண்டுகளாக, அடுத்த செடார் திருநாளை ஜெருசலேத்தில் கொண்டாடுவோம் என்ற வசனத்தை அவர்களது வருடாந்த செடார் பண்டிகையின் போது பிரார்த்தனையின் இறுதியில் நம்பிக்கையுடன் கூறி வந்தார்கள் !

தொடர்ந்தன. இதன்பின் "பிறவுண் ஷேர்ட்களின்" (Brown shirts) - நாஸிகளின் வாலிபர் தொண்டர் படை, பழுப்பு நிற மேலங்கிகளை அணிந்தவர்கள்) பயங்கர இரவு வந்தது, கடைசியாக சித்திரவதை தடை முகாம்கள் (Concentration Camps)

கெஸ்ராப்போ(Gestapo), எஸ்.எஸ்(S.S), எஸ்.டி(S.D), கே.ஆர்.ஐ.பி.ஓ.(K.R.I.P.O), ஆர்.எஸ்.எச்.ஏ(R.S.H.A) வந்தன. விரைவில் எல்லாக் குடும்பங்களும் நாசிகளின் கண்காணிப்பில் வந்தன. எதிர்ப்புக்களின் குரல்வளைகள் நெரிக்கப்பட்டு அழிக்கப்படும் வரை, சர்வாதிகாரத்தின் பிடி இறுகியது.

ஜெர்மனியில் பல யூதர்கள் நினைத்தது போல், தாமும் இந்தப் புதிய பிரச்சனைகளால் பாதிக்கப்பட மாட்டார் என்று பேராசிரியர் ஜோஹான் கிளமென்ற்றும் தொடர்ந்து நினைத்தார். அவருடைய பாட்டனார் ஒரு பாரம்பரியத்தையே சர்வகலாசாலையில் ஏற்படுத்தியிருந்தார். சர்வகலாசாலையானது அவரது தீவாகவும், பாதுகாக்கப்பட்ட இடமாகவும் இருக்கும் என அவர் கருதினார். அவர் தன்னை முற்றாகவே ஒரு ஜேர்மனியனாகவே நினைத்தும் வாழ்ந்து வந்தார்.

ஒரு குறிப்பிட்ட ஞாயிற்றுக் கிழமையை நிச்சயமாக மறக்கவே முடியாது. பொன்னில் (Bonn) இருந்த பாட்டியின் வீட்டில் உறவினர்கள் எல்லோரும் கூடியிருந்தனர். இங்கோ மாமா கூட, பேர்லினில் இருந்து வந்திருந்தார். எல்லாச் சிறுபிள்ளைகளும் வெளியே விளையாட அனுப்பப்பட்டுப் பிரதான மண்டபத்தின் கதவுகள் சாத்தப்பட்டிருந்தன.

கொலோனுக்கு வீட்டுக்குப் போகும் வழியில் தாயோ, தந்தையோ ஒரு

"நீ கர்ப்பமாய் இருப்பதால் தான், நிலைமை மோசமாக இருப்பதாகத் தோன்றுகிறது."

"ஐந்து வருட காலமாக நிலைமை சரியாகிவிடும் என்று சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால் நிலைமைகள் சீராகப் போவதில்லை."

"நாங்கள் சர்வகலாசாலையில் இருக்கு மட்டும் பாதுகாப்பாக இருப்போம்."

"மடையர்களின் சொர்க்கத்தில் சீவிப்பதை நிறுத்துங்கள். நண்பர்கள் எவருமில்லை எங்களுக்கு இப்போ. மாணவர்களும் இப்போ வருவதில்லை. எங்களுக்கு அறிமுகமான எல்லோரும் எங்களிடம் பேச மிகவும் பயப்படுகிறார்கள்."

ஜோர்ஹான் கிளமென்ற் தனது சுங்கானைப் பற்றவைத்து விட்டு பெருமூச்செறிந்து கொண்டார். மரியம் அவர் காலடியில் ஒடுங்கிக் கொண்டு தலையை அவர் மடியில் வைத்தாள். அவர் மெதுவாக அவள் கூந்தலை வருடிக் கொடுத்தார். கணப்புக்கு முன்பாக மக்சிமிலியன் நீட்டி நிமிர்ந்து கொண்டே முனகியது.

"நான் உங்களைப் போலவே வீரமாகவும், புரிந்துணர்வுள்ளவளாகவும், இருக்க விரும்புகிறேன்." என்றாள் அவள்.

"எனது பாட்டனாரும் தகப்பனாரும் இங்கே தான் கற்பித்தனர். நான் இந்த வீட்டில் தான் பிறந்தேன். எனது வாழ்க்கையில் நான் எதிர்பார்த்த பொருட்கள், நான் விரும்பிய பொருட்கள்

தொடரும்...



www.tamilarangam.net

www.tamilarangam.net



## உண்மைக் கதை

இன்று எமது வரலாற்று பகைச் சக்தியான சிங்களப் பேரினவாதம் தற்போது யாழ். குடாநாட்டை ஆக்கிரமித்து நமது மக்களுக்குச் செய்யும் இரத்தத்தை உறைய வைக்கும் கொடுமைகள் நாளாந்தம் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

இதேபோலவே தமிழீழ மண்ணை முழுமையாக விழுங்கிய இந்தியப் படையெடுப்பு. எமது போராட்டத்தின் இருண்ட காலமாக என்றைக்கும் இருக்கும் அந்த ஆக்கிரமிப்புக் காலகட்டத்தின் போது நிகழ்ந்த உண்மை நிகழ்வுகளை கதை வடிவில் - உணர்வு பூர்வமாக - நமது தமிழீழ எழுத்தாளர்கள் எமது இனத்திற்கு ஏற்பட்ட கொடுமைகளின் வரலாற்றுப் பதிப்பாக - நூல் வடிவில் வெளியிட்டுள்ளனர். முதலாவது தொகுதி ''அம்மாளைக் கும்பிடுறானுகள்.....!" என்ற பெயரிலும், இரண்டாவது தொகுதி "வில்லுக்குளத்துப் பறவை" என்ற பெயரிலும் வெளியிடப்பட்டுள்ளன.

சிங்கள வெறிப் படை -

'அமைதிப் படை' - ஓநாய்களின் வேட்டைக்குப் பலியான அப்பாவி மக்களின் கதைகள் - போராட்டத்தை நெஞ்சார நேசித்துச் செயற்பட்டதில் தம்மைப் பலியாக்கிய மக்களின் கதைகள் - போராளிகளை நேசித்து, அவர்களைக் காப்பாற்றத் துணிவுடனும் சாதுரியத்துடனும் செயற்பட்ட மக்களின் கதைகள் .......

எல்லாமே நாம் வாழ்ந்த காலத்தின் உண்மைகளை நெஞ்சிற் பதியுமாறு நெருக்கமாய்ச் சொல்கின்றன.

அவற்றில்....... ஓர் நிகழ்வு.

# ஓயாத கால்கள்

***தளபதி கேட்டார்-***
***"என்ன மாஸ்ரர்"" இங்கே நிக்கிறீங்கள்......?""***
***''நீங்கள் எங்கே நிற்கிறீங்களோ - அங்கேதான் நானும் நிற்கிறேன்.""***
***பக்குவமான ஒரு சிரிப்பை உதிர்த்துவிட்டுத் தளபதியைப் பார்த்தார் 'மாஸ்ரர்".***
***தளபதிக்கு மாஸ்ரரைப் பற்றிய எண்ணங்கள் நெஞ்சில் அடுக்கடுக்காய் எழுந்தன.***
***ஆங்கிலத்தில் எம். ஏ. படித்தவர் 'மாஸ்ரர்"***

**18.11.1987**

ஆனந்தராஜா 'மாஸ்ரர்', குளித்துவிட்டு முன்மண்டப நாற்காலியில், அவருக்கே உரிய சிரிப்போடு உட்காரும்போது, இரவு ஏழுமணி.

மனைவி கொண்டுவந்த தேனீரைக் குடித்துவிட்டு அவர் சொன்னார்–

"உலகத்தில ஒரு பெரிய படையான இந்தியப்படையை மோதுறதெண்டு புலிகள் முடிவெடுத்ததே ஒரு பெரிய வெற்றிதான்."

கிளிநொச்சியில் 'மாஸ்ரர்' புதிதாகக் கட்டிய வீடு அது. மகிழ்ச்சியாக அந்த வீட்டை அனுபவித்து அவர் இன்னும் வாழவில்லை. அது அவர் நோக்கமும் இல்லை. தமிழீழ விடுதலைப்போரில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்ட புலிகளோடு, அவர் இரண்டறக்கலந்து நீண்டகாலமாகிறது.

'மாஸ்ரருக்கு' தமிழீழ மண்ணின் ஒவ்வொரு அங்குலமும் வீடுதான். எந்த மணித்துளியில் அவர் எங்கு நிற்பார் என்று சொல்லமுடியாது.

நீண்ட வயல்வெளிகளின் நடுவில் – குறுகிய செம்மண் பாதைகளூடாக – நடுஇரவில் அவர் மிதிவண்டி, விடுதலைப்புலிகளை ஏற்றிப்பறக்கும்.

மேற்கே வன்னேரிக்குளம் தொடக்கம் கிழக்கே விசுவமடு வரை.....

எத்தனை சந்து பொந்துகள்....... எத்தனை வயல் வரப்புகள்........

முன்குத்தி, சில்லு காற்றிழந்துபோக – மிதிவண்டியை 'மாஸ்ரர்' நெடுந்தூரம் உருட்டி அலைந்த நாட்களும் உண்டு.

அளவான உயரம் – இறுக்கமான உடற்கட்டு – பொதுநிறம் – மிடுக்கான மீசை – கலகலப்பான பேச்சு – ஆனந்தராஜா 'மாஸ்ரருக்கு' நாற்பத்திமூன்று வயதுதான்.

கிளிநொச்சியில் பள்ளிக்கூட மாணவர்களுக்குக் கலங்கரை விளக்கமாய் இருந்தவர் 'மாஸ்ரர்'. மாணவர்களின் எதிர்காலம் – தன்னில் அல்ல – தமிழீழத்திலேயே தங்கியுள்ளது என்பதைத் தெரிந்து கொண்டு, விடுதலைப்புலிகளுக்கு உறுதுணையானார் அவர். "மாஸ்ரர்" அடிக்கடி சொல்லுவார் –

**"விடுதலைப்புலிகள் எப்படியெல்லாம் அலைகிறார்கள்....... அவர்கள் நடக்க என் காலைப் பயன்படுத்துகிறேன்."** கிளிநொச்சியை ஒட்டினாற்போல், நெடிய தென்னந்தோப்புக் கிடந்தது.

சடைத்து வானத்தைத் தழுவி – பச்சைக்காடாக நிலத்தை மூடிய தென்னைகள்.

1985இல் இத்தோப்பு, வரலாற்றில் தன்னை ஆழப் பதித்துக்கொண்டது.

விடுதலைப்புலிகள், முதியவர்களுக்கு இங்கே தற்காப்புப் பயிற்சி அளித்துக் கொண்டிருந்தார்கள். பதினைந்து நாட்கள் ஒருமணித்துளியும் ஓய்வில்லாத பயிற்சி.

ஆனந்தராஜா 'மாஸ்ரர்' என்றைக்குமே அந்த நாட்களை மறப்பதில்லை.

துப்பாக்கியால் குறிபார்த்துச் சுடப்பழகிய காலம்..... சில முதிர்ந்த நண்பர்களோடு அவரும் ஒருவராக.....

யாழ்ப்பாணத்தில் கிழட்டுப்பனைகள் சூறைக்காற்றில் ஆடி நிமிர்ந்து நிற்குமே...... அப்படி....... போர்க்காலத்தின் கட்டாயம்.......

இரவு நேரங்களில் புலிகளின் தலைவர்களோடு உட்கார்ந்து அவர்கள் மனம்விட்டுப் பேசுவார்கள்.

பழைய தமிழீழ அரசியல் – அந்தக்கால அறப்போர் – தன்னலவாதிகள் சிலர், அரசு ஓய்வூதியம், பெற்றுக்கொண்டு போராட்டத்திற்கு வந்த கதைகள் – இவையெல்லாம் அலசப்படும்.

புலிகள் விடுதலைப்போரில் தாங்கள் கொண்டுள்ள நிலைப்பாட்டைத் தெளிவாக விளக்குவார்கள்.

காற்று இதமாக வீசும்.

ஓரிரு காய்ந்த தென்னை ஓலைகள் உதிர்ந்து விழும். மின்மினிப்பூச்சிகள் விளக்குத் தூக்கித்திரியும்.

*1987 ஒக்ரோபர் 10*

தமிழீழ விடுதலைப் புலிகள் மேல் இந்தியப்படை போர்ப்பிரகடனம் செய்த நாள்.

குண்டுவீச்சு விமானங்களும் – 'ஹெலிக்கொப்ரர்' களும் வானத்தில் உறுமிப் பறந்தன.

'ஷெல்கள்' – பிணக்குவியல்கள், மரண ஓலங்கள்....... இந்திய வல்லரசின் கொடிய பற்கள் யாழ்ப்பாணத்தைக் கடித்துக் குதறத் தொடங்கிய காலம்.......

விடுதலைப் புலிகளின் பொறுப்புவாய்ந்த தளபதிகளில் ஒருவர், களத்தின் முக்கிய பகுதிக்கு வந்தார்.

விடுதலைப் புலிகள் துப்பாக்கியும் கையுமாக எதிரியைத் தேடிப்பறந்து கொண்டிருந்தார்கள்.

ஒரு களத்தில் போராடி வந்த சில புலிகள், அடுத்த களத்துக்குப் புறப்படுவதற்கு முன்பு, அவர்களுக்கு உணவு பரிமாறிக்கொண்டிருந்தார் ஆனந்தராஜா 'மாஸ்ரர்'.

தளபதி கேட்டார்–

"என்ன 'மாஸ்ரர்' இங்கே நிக்கிறீங்கள்.......?"

"நீங்கள் எங்கே நிக்கிறீங்களோ, அங்கேதான் நானும் நிக்கிறேன்."

பக்குவமான ஒரு சிரிப்பை உதிர்த்துவிட்டுத் தளபதியைப் பார்த்தார் 'மாஸ்ரர்'.

தளபதிக்கு மாஸ்ரரைப் பற்றிய எண்ணங்கள் நெஞ்சில் அடுக்கடுக்காய் எழுந்தன.

ஆங்கிலத்தில் எம். ஏ. படித்தவர் 'மாஸ்ரர்.' விடுதலைப் புலிகளின் முத்த தளபதிகளில் ஒருவரான கப்டன் பண்டிதர் உயிரோடு இருந்த காலத்தில் – மேஜர் மாறனால் இயக்க வளையத்துக்குள் கொண்டு வரப்பட்டார். **"மாஸ்ரர்" விடுதலைப்புலி அல்ல. ஆனால், விடுதலைப் போரில் தங்களை அழித்துக்கொள்கிற புலிகளுக்கு, எப்போதும் உறுதுணையாக இருக்க வேண்டும் என்றே விரும்பினார்.......**

அந்த நோக்கோடுதான், புலிகள் வழங்கிய தற்காப்புப் பயிற்சிக்கும் அவர் போனார்...... போரில் இறங்கிய புலிகளை அழிக்கவந்த அந்நிய ஆக்கிரமிப்பாளனை நினைக்க நினைக்க அவருக்குக் குருதி பொங்குகிறது......

"மாஸ்ரரை' அன்போடு நெருங்கினார் தளபதி. அவர் சொன்னார்–

'மாஸ்ரர்'........ கிளிநொச்சி மக்களுக்கு உங்களைப்போல ஆதரவானவங்க இப்ப பக்கத்தில இருந்தா நல்லா இருக்கும். நீங்கள் அங்கேதான் போக வேணும். போறதுதான் நல்லது."



கிளிநொச்சிக்கு 'மாஸ்ரர்' அன்றே கிளம்பி விட்டார். புலிவீரர்களின் சொற்கள் மதிக்கப்பட வேண்டியவை.

தூய – அப்பழுக்கற்ற – நெஞ்சின் வேரில் அவை துளிர்க்கின்றன.

கிளிநொச்சி பரபரப்பாயிற்று.

போரின் அடையாளங்கள் கிளிநொச்சியில் தலைகாட்டத் தொடங்கின.

இந்தியத் துருப்புக்களை ஏற்றிப்பறக்கும் 'ஹெலிக் கொப்ரர்கள்'.......

உறுமிக்கொண்டு தெருவில் இந்தியப்படை 'ட்றக்' வண்டிகள் ஓடும்.

யாழ். நகரில் கடுமையான குண்டுவீச்சாலும் 'ஷெல்'

தொடர்ச்சி 17 ம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



### லண்டனில்
## கேணல் கிட்டுவினதும் தோழர்களினதும் 4ஆம் ஆண்டு நினைவெழுச்சி விழா

தமிழீழத்தில் மட்டுமல்ல, பிரித்தானியாவிலும் எம்முடன் ஒன்றாக வாழ்ந்து எம்மை வழி நடாத்தி, வங்கக் கடலிலே சங்கமமாகிப் போன தளபதி கேணல் கிட்டுவினதும், அவர் தோழர்களினதும் 4ஆம் ஆண்டு நினைவெழுச்சி நாள் நிகழ்வுகள் 12-01-1997 அன்று லண்டனில், walthamstow 'lloyds park' theatre இல் நிகழ்ந்தது.

முதலில், கேணல் கிட்டு அவர்களின் விடுதலைப் போராட்டம் சம்பந்தமான நினைவுப் படக்காட்சி அகன்ற திரையில் காட்டப்பட்டது. அதைத் தொடர்ந்து, அமைதி வணக்கம் செலுத்தப்பட்டு மலரஞ்சலி செய்யப்பட்டது. மலரஞ்சலியில் அனைத்து மக்களும் பங்கெடுத்து, தாயக விடுதலைக்காய் தம் உயிரை ஈகம் செய்த வீரர்களை உணர்வுடன் நினைத்துக் கொண்டனர்.

மலரஞ்சலியைத் தொடர்ந்து, கேணல் கிட்டு அவர்களினதும் அவர் தோழர்களினதும் நினைவாக நாட்டிய அஞ்சலிகளும், உரைகளும், நினைவுப் பாடல்களும், நாடக நிகழ்வும் இடம்பெற்றன. நடன ஆசிரியை திருமதி. ராகினி இராஜகோபால் அவர்களின் மாணவிகளால் நிகழ்த்தப்பட்ட மூன்று நாட்டிய அஞ்சலிகளும் சிறப்பாக அமைந்தன. சிறுவர் முதல் பல்வேறு வயதுடையவர்களும் நாட்டிய அஞ்சலியில் பங்கெடுத்துக் கொண்டனர். இறுதியாக இடம்பெற்ற நாட்டிய நிகழ்வில், தனது மாணவிகளுடன் ஆசிரியை திருமதி ராகினி இராஜகோபால் அவர்களும் பங்கெடுத்து நடனம் ஆடிச் சிறப்பித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

செஞ்சோலை (பிரித்தானியாக் கிளை) சிறுவர் அமைப்பின் சார்பாகச் செல்வி அனுசியா வரதலிங்கம் அவர்களும், தமிழர் மனித உரிமை மையத்தின் சார்பாக செல்வி மான் அவர்களும், நினைவு நாள் நிகழ்வில் இடம்பெற்ற நாட்டிய அஞ்சலிகள் பற்றி செல்வி துளசி மகேஸ்வரன் அவர்களும் உரை நிகழ்த்தினர். 'களரி' நாடக அரங்கத்தைச் சேர்ந்த கலைஞர்களால் அரங்கேற்றப்பட்ட 'கிட்டோபதேசம்' என்ற நாடக நிகழ்வு, லண்டன் வாழ் தமிழீழ மக்களுடனான கிட்டண்ணாவின் உரையாடல்களை, உபதேசங்களை, பாசப்பிணைப்பினை, அன்பு கலந்த கண்டிப்பினை வெளிப்படுத்தி நின்றது. விரைவாக வளர்ந்து வரும் இளங்கலைஞர் செல்வன் யேசுதாசன் யூட் அவர்களின் இன்னிசையுடன் தமிழீழப் பாடகர்கள் கேணல் கிட்டுவினதும், தோழர்களினதும் நினைவுகளை 5 பாடல்கள் மூலம் வெளிக் கொணர்ந்தனர். இடையிடையே கவிதைகள் வாயிலாகவும் இம் மாவீரர்களது நினைவுகள் மீட்கப்பட்டன.

**"எம்மை நம்பி எமக்காகப் போராடும் போராளிகளின் கரங்களைப் பலப்படுத்துதல் எமது கடமையே "**

இவ்வாறு, இந்நிகழ்வில் விடுதலைப் புலிகள் பிரித்தானியாக் கிளைப் பிரதிநிதி சாந்தன் அவர்கள் தமது சிறப்புரையில் உணர்ச்சியுடன் கூறினார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

"தளபதி கிட்டு அவர்கள்தான், தமிழீழ விடுதலைப் போராட்டத்தைப் பயங்கரவாதப் பிரச்சனை என்ற கருத்தில் இருந்து மாற்றி, தமிழீழ விடுதலைப் போராட்டமானது, தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டமே என்பதை உலகறியச் செய்வதில் பெரும் பங்கு வகித்தார். கால் பதித்த இடமெல்லாம் கடுபகை தடக்கும் இருள் சூழ்ந்த ஒரு காலத்தில் தளபதி கிட்டு அவர்கள், தனது அயராத உழைப்பினாலேயே யாழ்மாவட்டத்தை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் கொணர்ந்து வந்தார். கால் ஒன்றை இழந்த பின்பும் மனம் மளராது களத்தில் நின்று செயற்பட்டதுடன், லண்டனுக்கு வந்து தமிழீழப் போராட்டத்தின் தேவையை, அதன் நியாயத் தன்மையை உலகறியச் செய்தார். வெளிநாட்டில் பெற்ற பட்டறிவுடன் தாயகத்தை நோக்கி சர்வதேச கடற்பரப்பில் சென்று கொண்டிருந்த போதே, அத்துயரச் சம்பவம் நடந்தது. அதனால் காந்தி தேசம் மீண்டும் ஒருமுறை தனது முகத்தில் கரிபூசிக் கொண்டாலும், விடுதலைப் புலிகளைப் பொறுத்த வரை இவ் இழப்புக்கள் விடுதலை விளை நிலத்தில் விதைக்கப்பட்ட வித்துக்களே.

தம்மை விடுதலைப் புலிகளுடன் இணைத்துக் கொண்ட எத்தனையோ ஆயிரமாயிரம் வீரர்கள், தாம் மரணிக்க முன் தம் ஆற்றல்கள் அனைத்தையும் தமிழீழ விடுதலைக்காய் அர்ப்பணம் செய்கின்றனர். தமது உயிரைப் பற்றியோ அடுத்த வேளை உணவைப் பற்றியோ சிந்திக்காது, இதயத்தில் தேச விடுதலையை மட்டும் சுமந்து கொண்டு எதிரியுடன் போராடி, விடுதலைக்காய் விதையாகின்றனர். எதிரியின் ஆயுதங்களை எடுத்து, விடுதலைப் புலிகளின் கரங்களைப்



பலப்படுத்தி தமிழீழத்தைப் பெற்றெடுக்கத் தன் உடலிலேயே குண்டுகளைக் கட்டி எதிரியுடன் மோதி ஒரு அணுவளவான சதையுமின்றி காற்றோடும் கடலோடும் கலக்கின்றார்கள் கரும்புலிகள். ஏன் இவர்கள் குண்டுகளை உடலோடு கட்டிச் சிதற வேண்டும்.

எம்மினத்திற்காகப் போராடும் எம் போராளிகளின் கரங்களில் எதிரியைப் போன்று நவீன ஆயுதங்கள் இருந்தால் இந் நிலை தொடராது. எம் போராளிகளினது இழப்பையும் அவர்கள் சிந்தும் குருதியையும் குறைத்துக் கொள்ளலாம். இதனைக் குறைக்கும் சக்தியும் எம்மிடமுண்டு. அதனால், எம் போராளிகளின் கரங்களில் நவீன ஆயுதங்கள் சென்றடைய, போராளிகளுக்குத் தேவையான உணவு, உடை, மருந்து வகைகள் கிடைக்க புலம் பெயர்ந்து வாழும் நாம்தான் பங்கேற்க வேண்டும்.

தளரா உறுதியும், இலட்சிய தாகமும் தமிழீழ மக்களை உயிர் என நேசிக்கும் தலைவனும் தலைவனில் அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்ட போராளிகளும் எமக்குக் கிடைத்துள்ளார்கள். அதனால் நமது பங்கினையும் எத்தனை கஸ்டத்தின் மத்தியிலும் செய்ய, நாம் இன்றே திட சங்கற்பம் பூணுவோம்.

இன்று சுவிஸ், பிரான்ஸ் போன்ற ஐரோப்பிய நாடுகளில் நடைபெறும் மாவீரர் நாள் போன்ற விடுதலைப் போராட்ட நிகழ்வுகளில் எல்லாம் மக்கள் தாமாகவே முன்வந்து, மண்மீட்பு நிதிக்காக ஒதுக்கப்பட்ட பெட்டிற்குள் பணத்தையும் தங்க நகைகளையும் அள்ளி வழங்குகின்றார்கள். அவர்கள் நம்மிடம் பணமும், நகைகளும் அளவுக்கு மீறி இருக்கின்றது என்பதனால் இப் பங்களிப்பைச் செய்யவில்லை. எம்மை நம்பி எமக்காகப் போராடும் போராளிகளின் கரங்களைப் பலப்படுத்துதல் எமது கடமை என்பதற்காகவே அள்ளி வழங்குகிறார்கள்.

எமக்காக எம்மாவீரர்கள் தம் விரல்களை இழக்கும்போது, கைகளை இழக்கும்போது, கழுத்தில் சயனைட் குப்பிகளை அணிந்து போராடும் போது, என் விரலுக்கு ஏன் இந்த மோதிரம்? என் கைகளுக்கு ஏன் இந்த வளையல்? என் கழுத்திற்கு ஏன் இந்த நகைகள்? என்ற உணர்வுடனேயே தாமாக முன்வந்து இப்பங்களிப்பைச் செய்கின்றனர். மக்கள் தாமாகவே முன்வந்து பங்களிப்புச் செய்வதை அறியும் உலக நாடுகள், எம் விடுதலைக்கும் அதன் உணர்வுக்கும் மதிப்பளிக்கின்றன. இத்தகைய பங்களிப்புக்களோ, அதற்கான ஏற்பாடுகளோ பிரித்தானியாவில் இதுவரை நடைபெறவில்லை. ஆனால், மற்றைய நாடுகளைப் போல் இங்குள்ள தமிழீழ மக்களும் உணர்வுபூர்வமாக விடுதலையை வேண்டி நிற்கிறார்கள். இந்த உணர்வை இந் நாட்டு அரசுக்கு எடுத்துக் காட்டவும், இந்த உணர்வை எம் தலைவனும், அவர் வழி நிற்கும் எம் போராளிகளும், அவர்களுக்குப் பக்க பலமாக இருக்கும் எம் மக்களும் ஒளிப்பேழை மூலம் கண்டு மகிழட்டும்.

வாருங்கள்! மேடைக்கு வந்து உங்கள் உணர்வுகளை வெளிக் கொணருங்கள் என அன்போடு அறைகூவல் விடுக்கிறேன்" என்று கூறினார்.

இதனைத் தொடர்ந்து, மண்டபத்தில் அமர்ந்திருந்த மக்கள் மத்தியில், உணர்வு பூர்வமான பரபரப்பொன்று எழுந்தது. பெருந் தொகையான மக்கள் மேடையை நோக்கி எழுந்து வந்து, வரிசையில் நின்று அதற்கென ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த தமிழீழ மண் மீட்பு நிதிப் பெட்டிகளுக்குள் பணத்தையும் தங்க நகைகளையும் பங்களிப்புச் செய்தனர்.

**தாயகத்தில் ஆயுதம் ஏந்திப் போராட வேண்டிய இந்தக் கைகளுக்கு, சயனைட் அணிய வேண்டிய இந்தக் கழுத்திற்கு ஏன் இந்த நகைகள் என்ற உணர்வே மக்கள் மத்தியில் காணப் பட்டது. விடுதலைக்காக மனப் பூர்வமாகப் பங்களிப்புச் செய்யும் இப் பண்பாடு தொடர்ந்து வளரட்டும். அதற்கான சந்தர்ப்பமும் தொடர்ந்து கிடைக்கட்டும்.**

◆

## சுவிசில் கேணல் கிட்டுவினதும் ஒன்பது போராளிகளினதும் நான்காவது ஞாபகார்த்த எழுச்சிவிழா.

19-01-97 அன்று சுவிஸ் செங்காளன் நகரில், தமிழீழ விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் தளபதி கேணல் கிட்டுவினதும் அவரோடு இந்திய அரசின் சதியால் வங்கக் கடலில் சங்கமமாகிய ஒன்பது போராளிகளினதும் நான்காவது ஞாபகார்த்த எழுச்சிவிழா தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் கிளையினரால் நடாத்தப் பட்டது. சுமார் மூன்று மணியளவில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் பிரதிநிதி திரு. நடராஜா முரளிதரன் அவர்களால் தேசியக் கொடி ஏற்றி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து மௌன அஞ்சலியோடு, மாவீரர் குடும்பத்தினரால் ஈகைச்சுடர் ஏற்றி வைக்கப்பட்டு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

செங்கானன் மாநில தமிழ்ச் சிறார்களின் மழலைப் பேச்சுக்கள், கவிதைகள், நாட்டிய நிகழ்ச்சிகள், பேச்சு, சிறப்புரை என்பன இடம்பெற்ற இவ்விழாவில், செங்காளன் 'றயின்ரான் ஈஸ்வராலயா' இசைக் குழுவினரின் **'எழுச்சிக் கானங்கள்'** இடம் பெற்றன. இவ் எழுச்சிவிழா மேடையே இவ்விசைக்குழுவின் முதல் மேடை என்பதும் குறிப்பிடத் தக்கதாகும். எனவே இவர்களின் இசைப்பயணம் தொடர நாமும் வாழ்த்திடுவோம். மற்றும் திருக் கோணேஸ்வர நடனாலய செங்காளன், சூரிச் மாணவிகளது எழுச்சி நடனங்கள் உட்பட 'பெண்ணுக்குப் பெண்ணே பகை' என்னும் சீர்திருத்த நாட்டிய நாடகமும் இடம் பெற்றன. திருக்கோணேஸ்வர நடனாலய ஆசிரியை திருமதி. மதிவதனி சுதாகரன் அவர்களால் நெறிப்படுத்தப்பட்ட நடன நிகழ்ச்சிகள், மக்களை வியப்புக்குள்ளாக்கும் வண்ணம் மிகவும் சிறப்பாக நெறிப்படுத்தப் பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது.

அத்தோடு, தமிழர் புனர்வாழ்வுக் கழக சர்வதேச ஒருங்கிணைப்பாளர் திரு. டாக்டர் மகேஸ்வரன் அவர்களும் கலந்து கொண்டு உரையாற்றியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். அவர் தனது உரையில், ஈழத்தில் அல்லலுறும் எம்மக்களின் நிலைகளை விளக்கியதுடன், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அடுத்த பத்தாண்டுத் திட்டங்கள் பற்றியும் குறிப்பிட்டார். அத்துடன், கடந்த ஆண்டுகளில் மற்றைய நாடுகளில் உள்ள புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்களோடு ஒப்பிடுகையில் சுவிஸ்வாழ் தமிழர்களின் நிதியே, தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கு அதிகமாகக் கிடைத்தது என்றும், உங்கள் பங்களிப்பைத் தொடர்ந்தும் நாம் நாடி நிற்கின்றோம் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

சுவிஸ் பிரதிநிதி திரு. ந. முரளிதரன் தனது சிறப்புரையில் நடைபெற்றுக்கொண்டிருந்த நிகழ்ச்சி பற்றிக் குறிப்பிடுகையில், 'செங்காளன் தமிழ்ச் சிறார்கள் கிட்டத்தட்ட 19 பேர்வரை கலந்துகொண்டு நாம் தமிழர், எமதுநாடு தமிழீழம், எமது நாட்டை மீட்டெடுக்க நாம் ஒன்றுபட வேண்டும் என்பதனை தங்களது மழலைக் கவிதைகள், பேச்சுக்கள் மூலம் தெரியப்படுத்தியிருந்தார்கள். அத்துடன், மற்றைய நிகழ்ச்சிகளைவிட இன்றைய நிகழ்ச்சியில் பங்குபற்றிய சிறார்களின் எண்ணிக்கை அதிகமானது. ஆகவே அவர்களும் அவர்கள் பெற்றோர்களும் பாராட்டப்பட வேண்டியவர்கள் எனக்கூறினார். இனிவரும் காலங்களிலும் அவர்களுக்கு ஊக்கமளித்து, எமது கலை பண்பாட்டு நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவதற்கு பெற்றோர்கள் கவனமும், ஊக்கமும் செலுத்த வேண்டும்" என்றும் கூறியிருந்தார். நிகழ்ச்சிகளின் மத்தியில் தேசியபாதுகாப்பு நிதி சேகரிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

அத்தோடு நிகழ்ச்சிகளில் பங்குபற்றிய சிறார்களை ஊக்கப்படுத்தும் முகமாக திரு. ந. முரளிதரன் அவர்களால் பரிசில்கள் வழங்கப்பட்டு இறுதி நிகழ்ச்சியாக தேசியக்கொடி இறக்கப்பட்டு, புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் என்ற உணர்ச்சிக் கோசத்தோடு எழுச்சி விழா நிறைவுற்றது.

◆

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சிறுகதை

பகலவன் மேற்கு வானில் மறைந்துகொண்டதன் அடையாளமாக, அடிவானம் செங்கம்பளம் விரித்தாற்போல் காட்சியளித்தது. இரைதேடச் சென்ற பறவைகள், தங்கள் பணி முடித்து குஞ்சுகளுடன் கொஞ்சிக் குலாவுவதற்காகக் கூடு நோக்கி வேகமாகப் பறந்து கொண்டிருந்தன. பக்கத்து



## கல்லறையும் கருத்தரிக்கும்

- முல்லை சதீஸ்

வீட்டில் நெடுநேரமாகக் கத்திக்கொண்டு நின்ற பசுக்கன்றின் கதறல் சத்தம் இப்போது ஓய்ந்திருந்தது. சுமதி வரப்போகும் இருளை அகற்றுவதற்காக, விளக்குகளுக்கு எண்ணைவிட்டு தயாராக்கிக் கொண்டிருந்தாள்.

அப்போது, வாசலில் மோட்டார் சைக்கிள் ஒன்று வந்து ஓய்வாகி நின்றது. வந்தது யாராக இருக்கும் என்று பார்த்தவளுக்கு சந்தோசத்தால் இருப்புக்கொள்ளவில்லை. 'தம்பி' என்று ஆனந்தக் கூச்சல் போட்டபடி ஓடிச்சென்று கையைப் பிடித்துக் கொண்டாள். நீண்ட நாட்களின் பின் சகோதரியைக் கண்டதில் குமணனுக்கு மகிழ்ச்சியில் வார்த்தை வரவில்லை. சிரித்தபடி உள்ளே வந்தான். சுமதியின் சத்தம் கேட்டு அடுக்களையில் வேலையாக இருந்த தாயும், கிணற்றடியில் நின்ற வசந்தியும், பிரியந்தியும் ஓடிவந்து அந்த சந்தோசத்தைப் பங்கு போட்டுக் கொண்டார்கள்.

முள்ளியவளை காட்டா விநாயகர் கோவிலுக்கு அண்மையில் இவர்களது வீடு அமைந்திருந்தது. மண்ணால் கட்டப்பட்டு, கிடுகால் வேயப்பட்ட வீடும் பக்கத்தில் குசினியும் வீட்டின் முன்பக்கத்தில் குரோட்டன்களும் பூங்கன்றுகளுமாக அழகான அடக்கமான வளவு. தாய், தந்தை, மூன்று அக்காமார், ஒரு தம்பி என ரமணனின் குடும்பம் அளவான, அழகான குடும்பம். எந்த நேரமும் வீடு கலகலப்பாகக் காணப்படும். வித்தியானந்தாக் கல்லூரியில் 11ம் ஆண்டு படித்துக் கொண்டிருந்தவன், காலத்தின் கட்டாயத்தால் மூன்று வருடங்களின் முன்பு இயக்கத்தில் இணைந்து கொண்டான். இதற்கு முன்பு போனவருடம் ஒருதடவை லீவில் வந்து போனதற்குப்பின்பு, இப்போதுதான் வந்திருந்தான்.

சகோதரிகள் சுற்றியிருக்க, நடுவில் தாயின் தலைகோதலில் இருந்த ரமணன், "அப்பா எங்கேம்மா" "கண்ணனையும் காணேல்லை எங்கபோயிட்டான்." "கொப்பா வேலையாலை இன்னும் வரேல்லை." "தம்பி கொக்காட சைக்கிளையும் எடுத்துக்கொண்டு தண்ணீரூற்றுப் பக்கம் போயிட்டான். இனிவருவான்." தாய் கூறிமுடித்த சிறிது நேரத்தில், கண்ணன் சைக்கிளுடன் உள்ளே வந்தான். வந்தவன் தமையனைக் கண்டதும், "அண்ணை எப்ப வந்தவர்" என்று கேட்டுக்கொண்டே, அவசர அவசரமாக சைக்கிளை விட்டுவிட்டு ஓடிவந்து தமையனின் பக்கத்தில் இருந்து கொண்டான். சிறிதுநேரத்தில் வந்த தந்தையாரும் அன்றைய நாளில் கிடைத்த எதிர்பாராத சந்தோசத்தில் திக்குமுக்காடிப் போனார். ஊர்ப்பு தினங்கள், அவனின் கள அனுபவங்கள் என எல்லோரும் ஒன்றாக இருந்து கதைத்துக்கொண்டிருந்ததால், அன்றைய இரவு அவர்கள் சாப்பாடு முடித்து நித்திரைக்குப் போவதற்கு வெகுநேரம் ஆகிவிட்டது.

அடுத்த நாள் காலை, அவசர அவசரமாகச் சென்ற சுமதி வீட்டிற்கு வரும்போது புகைப்படம் பிடிப்பவருடன் வந்து சேர்ந்தாள். "முன்பும் தம்பி வரேக்க போட்டோ எடுக்கேல்ல, அடுத்தமுறை வரேக்க எப்படியும் போட்டோ எடுக்கவேணும்" என்று முன்பே சொல்லியிருந்தாள். குடும்பமாகவும் தாய்தந்தையருடன் தனியாகவும் சகோதரிகளுடன் – தம்பியுடன் தனியாகவும் நின்று புகைப்படம் எடுத்துக்கொண்டாள். சுமதிக்கு நீண்ட நாட்களாக ஒருஆசை. அதை இன்று நிறைவேற்றி விடுவதற்காக ரமணனிடம், "தம்பி உன்ர ஜீன்சையும் சேட்டையும் தாடா, நான் போட்டு ஒரு போட்டோ எடுக்கப் போறன்." "பிரச்சனையில்லை, தாறன். ஆனால் நீ புதுச்சேட்டு எடுத்துத்தர வேண்டிவரும். ஏனெண்டா நீ போட என்ர சேட்டு வெடிச்சுப்போடும்" என்று சொல்லி ரமணன் சிரித்தான். "பாரம்மா தம்பியை, என்னைப் பழிக்கிறான்" என்று சொல்லிச் செல்லமாகச் சிணுங்கினாள் சுமதி. சுமதிக்கு ஜீன்சும், சேட்டும் எடுப்பாக இருந்தது. தனியாகவும், தம்பியுடனும் நின்று புகைப்படங்கள் எடுத்துக் கொண்டாள். ரமணன் வீட்டில் நிற்கும் வரைக்கும் ஒரே கும்மாளம்தான். எந்நேரமும் வீடு கலகலப்பாகக் காணப்பட்டது. அவனின் லீவுநாட்களும் முடியவே எல்லோரிடமும் விடைபெற்றுக் சென்றான். விருப்பமில்லாமல் விடைகொடுத்து அனுப்பியவர்கள், அன்று முழுவதும் ஒன்றும் செய்யப்பிடிக்காமல் ஒவ்வொரு மூலைகளில் இருந்தார்கள். அன்று வீடு களையிழந்து அமைதியாகக் கிடந்தது. சுமதி ரமணனைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தாள். அவனின் உருவமும், உள்ளமும் வெகுவாக மாறியிருந்தன. நடத்தையும், வாயிலிருந்து வெளிவரும் வார்த்தைகளும் ஒரு முதிர்ந்த அறிவாளியைப்போல் காட்டியது. ரமணனின் நினைவிலேயே சோகை இழந்திருந்த வீடு, வழமைக்குத் திரும்ப பலநாட்கள் ஆகின.

ரமணன் வந்துசென்ற சில மாதங்களின் பின், ஒரு மாலைநேரம் மோட்டார் சைக்கிள் ஒன்று வந்து வாசலில் நின்றது. தம்பிதான் வருகிறான் என்று ஆவலாக வாசலை நோக்கியவளுக்கு ஏமாற்றமாக இருந்தது. வந்தது ரமணனல்ல, வேறு இரண்டு போராளிகள். வந்தவர்கள் சுமதியைப் பார்த்து, "இதுதானேக்கா உமையாளன் வீடு." அவர்கள் ரமணனின் இயக்கப்பெயரைச் சொல்லிக் கேட்டதுமே, "ஓ என்ன விசயம்" என்று கேட்டுக்கொண்டே அவர்களின் முகத்தைப் பார்த்தாள். இப்போது, மற்ற இரு தங்கைகளும் தாயும் அவ்விடத்திற்கு வந்திருந்தனர். வந்த இரு போராளிகளும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். பின்பு ஒருவர், "என்னெண்டு உங்களுக்குச் சொல்லுறதெண்டு தெரியாமல் இருக்குது அம்மா"

"உமையாளன் நேற்று நடந்த சண்டையில் வீரமரணம் அடைஞ்சிட்டார்."

இந்தச் செய்தியைக் கேட்ட தாய் பெரிதாகக் கத்தியபடி மயக்கம் போட்டுவிழ, சுமதி தாங்கிப்பிடித்து மடியில் கிடத்தியபடி அழுதுகொண்டே இருக்கிறாள். தங்கைகள் இருவரும் சுமதியின் தோள்மூட்டில் சாய்ந்து கொண்டு குலுங்கிக் குலுங்கி அழுகிறார்கள்.

வந்த இரு போராளிகளும், "இரவு



வித்துடலைக் கொண்டுவருவம் அக்கா, நாங்கள் போயிட்டு வாறம்" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்கள். ரமணனின் பிரிவால் வீட்டிலுள்ள அனைவரும் துவண்டு போனார்கள். தாயும், தந்தையும் இன்னுமொரு ஐந்து வயது கூடியவர்கள் போல் காணப்பட்டார்கள். சுமதி வீட்டுச் சுவருடன் சாய்ந்துகொண்டு ரமணனின் புகைப்படத்தைப் பார்த்தபடி இருக்கிறாள்.

"டேய் ஓடாத, எறிவன். என்ர காசைத் தந்திடு" "நிண்டால் நீ அடிப்பாய். நான் நிக்கமாட்டன்" ஓடியவன், காசுடன் கடைக்குப் போய்விட்டான். "அம்மா பாரணை. என்ர காசை எடுத்துக் கொண்டு ரமணன் கடைக்குப் போறான். நான் நூற்கட்டை வேண்டவேணும் எண்டு வைச்சிருந்தனான். மிச்சம் இல்லாமல் செலவழிச்சுப் போடுவான்" என்று சிணுங்கினாள்.

"என்ன பிள்ளை, உதிலை இருந்து யோசிக்கிறாய்" என்று தாய் கேட்கவும் சிந்தனை கலைந்து மேலே இருந்த ரமணனின் மாலை போடப்பட்ட புகைப்படத்தைப் பார்க்கிறாள். வரிப்புலி சேட்டுடன் இவளையே பார்ப்பதுபோல் இருக்கிறான். வந்த கண்ணீரைத் தாய்க்குத் தெரியாமல் துடைத்தபடி எழுந்து கிணற்றடிக்குப் போனாள்.

ரமணனின் பிரிவால் நோய்வாய்ப்பட்ட தாய் சற்றுத் தேறி வரும்போது, இன்னுமொரு அதிர்ச்சி தரும் செய்தி அவரை மீண்டும் படுக்கையில் போட்டது. கண்ணன் இயக்கத்திற்குப் போய்விட்டான். மூன்று பெண் பிள்ளைகளின் பின் கடைசியாக இரண்டு ஆண்பிள்ளைகளும் பிறந்ததால் தாய், தந்தை, சகோதரிகள் அனைவரும் அவர்களிருவரிலும் நிறைய அன்பு வைத்திருந்தார்கள். இப்போது, இருவருமே தங்களுக்குப்பக்கத்தில் இல்லையென்னும் போது, எல்லோருமே கவலையில் உடைந்து போனார்கள். எல்லோருடனும் சேர்ந்து தானும் கவலைப்பட்டால் ஆர்தான் இவர்களுக்கு ஆறுதல் சொல்லுவதென்று நினைத்த சுமதி,

"அம்மா கவலைப்படாதேங்கோ. அவன், ரமணன் விட்டுச்சென்ற ஆயுதத்தைதான் எடுத்து, அவன்ர இலட்சியத்தை நிறைவேற்றப் போயிருக்கிறான். அவனுக்கு வெற்றி கிடைக்கும் என்று நாங்கள் அவனை வாழ்த்துவம்"" என்று உறுதியாகச் சொன்னவள், தனது அன்றாட அலுவல்களில் ஈடுபடத் தொடங்கிவிட்டாள். அதேநேரம், பக்கத்திலுள்ள விநாயகர் கோவிலின் மணியோசை காற்றில் மிதந்து வந்து கொண்டிருந்தது. ✷

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## டென்மார்க்கில், தளபதி கேணல் கிட்டுவினதும் ஒன்பது வீரவேங்கைகளினதும் நான்காம் ஆண்டு நினைவுகூரல்

தளபதி கேணல் கிட்டுவினதும் ஒன்பது வீரவேங்கைகளினதும் 4வது நினைவுகூரல் டென்மார்க், 'ஈக்காஸ்ற்' நகரில் 11-01-97 சனிக்கிழமை யன்று நடைபெற்றது.

கொடி வணக்கப்பாடலுடன் ஆரம்பித்த கலை நிகழ்வுகள், முல்லைச்சமர் நேரடி ஒளிப் பதிவுப் படக்காட்சி வரை உணர்வோடு ஒன்றி நின்று நினைவுகளையும் ஏந்திவருவது இந்த நினைவு கூரலின் போது சிறப்பாக எடுத்து ரைக்கப்பட்டது.

வன்னிப் பெருநிலப்பரப்பு தமிழீழ மக்களுக்கு எப்படி அடைக் கலமாக நின்று, வரலாற்றுத் தேவை ஒன்றை நினைவு செய் தது என்னும் கருத் தமைவுடன் தயாரிக்கப்பட்டிருந்த 'அடைக் கலம்' என்னும் நாடகம் கலை, பண்பாட்டுக்கழகத்தினரால் தயாரிக்கப்பட்டிருந்தது.




கலாகேந்திரா நடனாலயத்தினரின் நடன நிகழ்வுகளும் 'அழியாத சுவடுகள்' என்னும் குறு நாட்டிய நிகழ்வும் மற்றும் கவிதை நிகழ்வுகளும் இடம் பெற்றன. தமிழீழ இசைக் குழுவினரின் நெஞ்சை விட்டகலாத பாடல்கள், கிட்டுவினதும் தோழர்களதும் நீங்காத நினைவுகளைச் சுமந்து வந்தன. நிகழ்ச்சிகளுக்கு முத்தாய்ப்பிட்டது போல, 'முல்லைச் சமர்' நேரடிப் படப் பிடிப்பின் தொகுப்பும் காட்டப்பட்டது.

நினைவு கூரலைச் சிறப்பித்தது. தளபதி கேணல் கிட்டு அவர்களினது நான்காவது ஆண்டு நினைவுகூரல், மாமனிதன் ஒருவனை ஈன்றெடுத்த தமிழீழத்தாய் கிட்டம்மாவின்

## இலண்டனில் குர்திஸ் மக்களின் ஊர்வலம்

குர்திஸ்தான் மக்களுக்கு, துருக்கி நாட்டு அரசினாலும் அதன் ஆயுதப் படையினராலும் இழைக்கப்படும் மனித உரிமை மீறல்களை, மேற்கு நாடுகள் கவனத்தில் எடுத்து அவற்றை தடுக்கக் வேண்டும் எனக் கோரி, பெற்றோர்கள், உறவினர்கள், மற்றும் மனித உரிமை அமைப்புக்களைச் சேர்ந்தவர்களும் நூற்றுக்கணக்கில் இவ் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.




குர்திஸ்தான் மக்களின் விடுதலைக்கு ஆதரவான பெண்களால் 21. 12. 96 அன்று இலண்டனில் Hyde Park ஊர்வலம் ஒன்று நடாதத்ப்பட்டது.

குர்திஸ்தான், துருக்கியில் நடைபெறும் மனித உரிமை மீறல்களைக் கண்டித்தும், அங்கு காணாமல் போனவர்களின் தமிழர்களின் மனிதாபிமான ஆதரவை வெளிப்படுத்தும் முகமாக, தமிழர் மனித உரிமை மையத்தைச் சேர்ந்தவர்களும், தமிழர் பெண்கள் அமைப்பு சார்பாகவும் தமிழ்ப் பெண்கள் சிலர் இவ் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். ✷

## சைவத் தமிழ்ச்சங்கம் நடாத்திய "அற்றார் அழிபசி தீர்த்தல்"

04-11-97 சனிக்கிழமையன்று சுவிஸ் 'சூரிச்' நகரில் அமைந்துள்ள 'சைவத் தமிழ்ச் சங்கம்', தாயகத்தில் அல்லலுறும் மக்களின் புனர்வாழ்வு நிதிக்காக 2வது ஆண்டு "அற்றார் அழிபசி தீர்த்தல்" என்ற பன்னிரண்டு மணித்தியாலங்கள் கொண்ட நீண்டதொரு நிகழ்ச்சியினைச் சிறப்பாக நடாத்தியுள்ளது.

இச்சைவத் தமிழ்ச் சங்கம், சூரிச் நகரில் சிவன் ஆலயம் ஒன்றை நிறுவி அதனைச் சிறந்த முறை மில் நிர்வகித்து வருவதோடு, தமிழ்ச் சிறுவர்களிடத்தில் தமிழ் மொழி, சைவ சமயம் ஆகிய பாடப் பரீட்சைகளையும் வருடந் தோறும் சுவிஸின் அனைத்து மாநிலங்களிலும் நடாத்தி வருகிறது. அது மட்டுமல்லாது,

கடந்த காலங்களில் எமது தாயகத்தில் அகதிகளாக்கப்பட்டு பெரும் துன்பங்களை அனுப வித்த மக்களுக்கு தமது சிவன் ஆலயத்தின் ஊடாகவும், கலை நிகழ்ச்சிகளை நடாத்தியதன் ஊடாகவும் வேறுபல வழிகளிலும் பெருமளவு நிதியினைத் திரட்டி தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினூடாகப் பெரும் சேவை புரிந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

அதன் அடிப்படையில் இன்றைய சூழ்நிலையிலும் பெருமளவு அகதிகளாகவுள்ள தமிழ்மக்களின் புனர் வாழ்வுக்காக, தமது பங்களிப்பை மேலும் ஆற்ற வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன், மேற்படி 2வது ஆண்டு "அற்றார் அழிபசி தீர்த்தல்" என்ற நிகழ்ச்சியை நடாத்தியுள்ளது. புலம் பெயர்வாழ் தமிழ் மக்களின் சிறார்கள் நாடகக் கலையில் மேம்படவும்,

எமது தாயக நிகழ்வுகளை அவர்கள் மனத்தில் ஆழமாகப் புகுத்தி விடவும் இப் போட்டிகள் பெரிதும் பயனளிக்கும். இவ்வழி காட்டல் மூலமாக, எதிர் காலத்தில் இன்னும் சிறந்த நாடகங்கள் படைக்கப்படலாம் என்று நாம் எதிர்பார்க்கலாம்.

அடுத்ததாக, 'பட்டிமன்றம்' நிகழ்ச்சி இடம்பெற்றது. அதன் விவாதத்தலைப்பாக **"ஆண்மீக இயக்கங்கள் அடக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காகப் போராடலாமா?"** என்றும் அமைந்திருந்தது. இதற்கு நடுவராக திரு.நடராஜா முரளிதரன் அமர்ந்திருக்க திரு. வசந்தன், திரு.விவேகானந்தன், திரு.உருத்திரலிங்கம், திரு.கோபாலராஜன் ஆகியோர் வாதிட்டனர்.

அனைத்து விவாதங்களையும் உற்றுநோக்கிய நடுவர் தனது தீர்ப்புரையில், பல சம்பவங்களை ஆதாரமாக நினைவுபடுத்தி **"ஆண்மீக இயக்கங்கள் அடக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காகப் போராட வேண்டும்"** என்று நேர்த்தியான தீர்ப்பைக்கூறி விவாதத்தினை முடித்து வைத்தார்.

பின்னர் 'சூரிச்' ராதா நடனாலய மாணவர்களினதும் 'சுக்' பாரதி கல்வி நிலைய மாணவர்களினதும் எழுச்சி நடனங்கள் இடம் பெற்றன. அதனைத் தொடர்ந்து, 'சூரிச்' கலைபண்பாட்டுக் கழகத்தினர் **"எழுச்சிக் கானங்கள்"** என்ற இசை நிகழ்ச்சியை வழங்கினார்கள். இறுதியாக நாடகப் போட்டியில் பங்கு பற்றிய நடிகர்களுக்கு பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. காலை 10 மணியளவில் ஆரம்பமான நிகழ்ச்சிகளில் சிறப்பாக நாடகப் போட்டிகள் இடம் பெற்றன. சுவிஸின் பலபாகங்களிலிருந்தும் எட்டு நாடகக்குழுக்கள் பங்கு பற்றின. இப் போட்டிகளுக்கு நடுவர்களாக திரு.நடராஜா முரளிதரன், திரு.அன்ரன் பொன்ராஜ், திரு.சுப்பிரமணியம் சண்முகதாஸ் ஆகியோர் நியமிக்கப்பட்டிருந்தனர்.

இந்நாடகங்களின் பிரதி, கூட்டுநடிப்பு, இயக்கம், இசை, ஒப்பனை, அரங்க அமைப்பு, நேரக் கட்டுப் பாடு போன்ற அம்சங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டு, அதன் படி முடிவுகள் அறிவிக்கப்பட்டன. அத்தோடு, நாடகங்களில் காணப்பட்ட குறை நிறைகளையும் எதிர்காலத்தில் அவை நிவர்த்தி செய்யப்பட வேண்டிய வழிகளையும் நடுவர் திரு. முரளிதரன் தெளிவாக விளக்கினார்.

அதன் படி முதலாவது இடத்தை 'சுக்' மாநிலத்தின் திரு.விமல் அவர் களின் இயக்கத்தில் உருவான **"எங்கள் தேசம்"** என்ற நாடகம் தேர்வு செய்யப்பட்டது. மாறுபட்ட கற்பனையில் நவீனத்து வமானதாகவும், சிறந்த நடிப்பாற்றல் மற்றும் தாயக நிகழ்வுகளை மீள்த் தொளி செய்வதாகவும் அமைந்து மண்டபம் நிறைந்த மக்களின் மனத்தில் ஆழமாகப் பதிந்து கொண்டது. இரண்டாவது இடத்தை 'சூரிச்' மாநிலத்தின் மதியழகன் இயக்கத்தில் உருவான **"யதார்த்தத்தைத் தேடி"** என்ற நாடகமும்,

மூன்றாவது இடத்தை 'லங்கந்தாள்' நகரின் திரு.செ.சிவராஜசிங்கத்தின் இயக்கத்தில் உருவான **"என்று விடியும்"** என்ற நாடகமும் பெற்றிருந்தன. இப்போட்டிகளில் கலந்து கொண்ட நாடகங்கள் அனைத்தும் எமது தாயக அவல நிகழ்வு களையே தாங்கியிருந்தன.

புலம்பெயர்ந்து வாழும் எமக்கு தாயகத்தின் நிகழ்வுகளோடு என்றும் நாம் வாழ அந்த நாடகங்கள் வழிசெய்தன. இதில் பாராட்டுக்குரிய விடயம் என்னவென்றால், அநேக நாடகங்களில் சிறுவர்களே நடித்திருந்தார்கள்.

### சூரிச் சிவன்கோவில் வ்.சு.மு விற்கு 50,000 சுவிஸ் பிராங்குகள் கையளிப்பு

இந்த நிகழ்ச்சியின் நுழைவுச் சீட்டு மூலமாகவும் அங்கு வந்திருந்த மக்களின் மனமார்ந்த அன்பளிப்பு மூலமாகவும் மற்றும் சிவன்ஆலயத்தின் மூலமாகவும் சேகரிக்கப்பட்ட 50,000 சுவிஸ் பிராங்குகளை இச் சைவத்தமிழ்ச் சங்கம் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரிடம் ஒப்படைத்தமை குறிப்பிடத் தக்கது.

### யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் T.R.O விற்கு 27,000 சுவிஸ் பிராங்குகள் அன்ப ளிப்பு

அதேதினம், அந்த மேடையில் சுவிஸ் யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர்கள் அதிஸ்ர லாபச் சீட்டிழுப்பின் மூலம் திரட்டிய 27,000 சுவிஸ் பிராங்குகளை தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தினரிடம் கையளித்தனர்.

இந்த நிதியைக் கையளிபபுச் செய்த இரு பொது அமைப்புக் களும் உண்மையில் பாராட்டப்பட வேண்டியவர்களே. ஏனெனில், இன்று புலம் பெயர்ந்து வாழும் நாட்டில் உருவாக்கம் பெற்ற ஆலய ங்கள் பல சர்ச்சைக் குரியன வாகவும், நிர்வாகச் சீர்கேடுகள் உள்ளவையாகவும் காணப்படுகினறன.

இந்நிலையில் சிறந்த நிர்வாகத்தைக் கொண்டு இயங்கும் பொது அமைப்புக் களும் அதன் உதவிக்கரம் கொடுக்கும் தன்மையும் பெருமைக் குரியதே. இவ்வாறான அமைப்புக்களை முன்னுதாரணமாகக் கொண்டு,

வெளிநாடுகளில் இருக்கும் தமிழ்ப்பொது ஸ்தாபனங்கள் அனைத்தும் தம்மாலான பங்க ளிப்புக்களை எமது தாயகத்தில் அவலத்தில் வாழும் மக்க ளுக்கு உதவிட முன்வர வேண்டும். ◆

-மலரவன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஐ.நா.வை நோக்கி அகதிகளாய் அமைதிப்பேரணி !

சிறிலங்கா அரச பயங்கரவாதத்தால் அழிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் தமிழ்த் தேசிய இனத்தின் அவலத்தை அகிலத்திற்கு எடுத்துரைக்க ...

அனைத்துலக நாடுகளிலும் வதியும் தமிழீழ மக்கள் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும், தமிழீழ மக்களுக்கும் ஆற்றும் உதவிகளின் தார்மீகத்தன்மையை எடுத்துரைக்க ...

சிறிலங்காவின் போர்க்காலச் சூழலே தமிழீழ மக்களைப் புலம் பெயர்ந்த நாடுகளில் அரசியல் அகதிகளாக்கியுள்ளது என்பதை எடுத்துரைக்க ...

எதிர்வரும் **17 - 3 - 1997** திங்கட்கிழமை,
**பிற்பகல் 2.00 மணிக்கு**
ஜெனிவா புகையிரதநிலையத்திலிருந்து ஆரம்பித்து ஐக்கிய நாடுகள் சபை வரை அமைதிப் பேரணி நடைபெறும்.

பேரணியில் கலந்து கொள்ளவிருக்கும் மக்களின் நலன் கருதி ஒவ்வொரு நகரங்களிலிருந்தும் போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இது பற்றிய விபரங்களை அவ்வப்பகுதி தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் கிளைப் பணியாளர்களுடன் தொடர்பு கொண்டு ஆசனப்பதிவுகளைச் செய்து கொள்ளவும்.

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் தமிழீழ விடுதலைப்புலிகள் ( சுவிஸ்கிளை)

# ஓயாத கால் ...

தாக்குதலாலும் பாதிக்கப்பட்ட பெண் அகதிகள் கூட்டம் ஒன்று கிளிநொச்சிக்கு வந்தது.

கண்ணீரும் கம்பலையுமாக வந்த அவர்கள், இந்தியப்படையின் கைக்கூலிகள் 'குழு' ஒன்றிடம், தெரியாமல் மாட்டிக் கொண்டார்கள்.

அந்தக் 'குழு', பெண் அகதிகளைக் கொண்டுபோய் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் உட்காரவைத்தது.

குளுமாடுகளின் குழு.......

அவர்களோடு தமிழ்ப் பெண்கள்.......

விலங்குத்தனத்தின் வெறியாட்டமும் – இழிவுகளும் தொடங்குவதற்கு முன்பு, அந்தப் பெண்களை எப்படியோ காப்பாற்றி விடவேண்டும் என்று நினைத்தார் ஆனந்தராஜா 'மாஸ்ரர்.'

நேரே அவர் மகா வித்தியாலயத்திற்குள் நுழைந்தார்.

எத்தனையோ ஆண்டுகளாக 'மாஸ்ரர்' பாடம் கற்றுக்கொடுத்த பள்ளிக்கூடம் அது.

அவர் எழுதிய கரும்பலகைகள்........ அவர் உலாவிய வகுப்பறைகள்........ அதே மேசைகள் – நாற்காலிகள்.......

எத்தனை மாணவர்களை இந்தப்பள்ளிக்கூடத்தில் மானமுள்ள வீரர்களாய் உருவாக்கியிருக்கிறார் 'மாஸ்ரர்'.

என்றுமே நீதிகளாலும், அறங்களாலும், பண்பாடுகளாலும் நிறைந்து போயிருந்த அந்த மகாவித்தியாலயத்தில் சேட்டைகளும் – அசிங்கங்களுமா......? மாஸ்ரரால் நினைத்துப்பார்க்கவே முடியவில்லை.

ஆனந்தராஜா 'மாஸ்ரர்' தலையிட்டார். பெண் அகதிகளை மகாவித்தியாலயத்தில் இருந்து வேறோர் இடத்துக்கு அழைத்துச் சென்றார். வெறியர்களிடம் இருந்து அவர்களைக் காப்பாற்றின மாதிரித்தான்.

ஒரு 'குளுமாடு' பள்ளிக்கூட வாசலில் மாஸ்ரரை முட்டி மோதிக்கொண்டு போயிற்று.

இந்த முரட்டுத்தனங்கள் எல்லாம் 'மாஸ்ரருக்கு' இப்போது பழகிப்போனவை.

கடலில் இறங்கிவிட்ட படகா, அலைகளைப் பற்றிக் கவலைப்படும்.

'மாஸ்ரருக்கு' நன்றாகவே தெரிந்தது – இந்தக் 'குழுக்களுக்கு' கொலைதான் கொள்கை.

ஆனால்......

தனக்குள்ளேயே அவர் சொல்லிக் கொண்டார்: நான் எதற்கும் ஆயத்தமாகவே இருக்கிறேன்.

∴ ∴ ∴

தெருவில் ஒரு நாய் ஊளையிட்டுக்கொண்டு ஓடிற்று. எங்கோ தூரத்தில் அதிர்ந்து வெடிக்கும் 'ஷெல்களின்' இடியோசை.

ஆனந்தராஜா 'மாஸ்ரர்' நாற்காலியில் உட்கார்ந்திருந்தவர் மெதுவாக எழுந்து வானொலியை முறுக்கிவிட்டார்.

சேதிகள்........

'இந்திய அரசையும் சிறிலங்கா அரசையும் துதிபாடும் வழமையான அதிகார வழிபாடு.'

**வானொலியை ஆத்திரத்தோடு திடீரென்று நிறுத்தினார் 'மாஸ்ரர்".**

**"பொய்ச்சேதிகளாலை விடுதலைப் புலிகளை அழிக்க முயலுகினம்...... செய்திகளை மறைச்சா - உண்மைகளை மறைச்சா - புலிகளையும் அவர்களது ஆதரவாளர்கள்ளையும் அழிச்சா -தமிழீழ விடுத லைப்போர் ஓய்ஞ்சு போகும் எண்டு நினைக்கினம்...."**

தன்பாட்டில் உறுமினார் அவர்.

மனைவியைப் பார்த்து 'மாஸ்ரர்' சொன்னார் –

"எத்தனை விதமான ஆபத்துக்குள்ளையும், பொய்ப் பிரச்சாரங்களுக்குள்ளையும் இந்தப் பிள்ளைகள் நிண்டு போராடுகினம் பாத்தியே.......!"

அப்போதுதான்–

புத்தம்புதிய 'மாஸ்ரரின்' வீட்டுக்கதவை உடைத்து விடுவது போல் யாரோ தட்டினார்கள்........

"யார் அது......"

கதவை அவர் மெதுவாகத் திறந்தார்.

அங்கே–

வெறிபிடித்த அந்தக் 'குழு' தான் காத்திருந்தது. முரட்டுத்தனமாக 'மாஸ்ரர்' வெளியே இழுத்துச் செல்லப்பட்டார்.

மனைவியின் ஓலம் காற்றைக் கிழித்தது........

அவளுக்குத் தெரியும்........

இனி அவர் திரும்பமாட்டார்.

∴ ∴ ∴

அடுத்த நாள்–

கிளிநொச்சி மகாவித்தியாலயம் நெருப்பாயிற்று.

மாணவர்கள் கிளர்ந்து எழுந்தார்கள்.

ஒவ்வொரு மாணவனின் கண்களிலும் நீர் தேங்கி மணிகளாய் உருண்டது.......

"எங்கள் நெஞ்சில் நிறைந்த 'மாஸ்ரரை' எங்கள் கையில் ஒப்படை!"

"கொலைகாரர்களே! ஆசிரியர்களைக் கொல்லவா குழு அமைத்தீர்கள்?"

"மாற்றானை மகிழ்விக்க, சொந்த நாட்டானைக் கொல்லாதே!"

கிளிநொச்சித் தெருவெல்லாம் சுவரொட்டிகளாய்......... ஒரு மாணவன், கிளிநொச்சி மகாவித்தியாலய மாணவர்கள் முன் உருக்கமாகப் பேசினான்.

"நண்பர்களே!"

நெஞ்சில் நிறைந்த ஆசிரியர் இனி வரமாட்டார். ஆனால், அவர் வருவார் என்று நாம் காத்திருப்போம்!

அவர் குரலை இனி நாம் கேட்கமாட்டோம். ஆனால், அவர் பேசுவார் என்று நாம் எதிர்பார்ப்போம்!" ✷




சுவிடனில் நடைபெற்ற மாவீரர் நாள் (நவம்பர் 1996) நிகழ்ச்சியின் போது..

www.tamilarangam.net



# தமிழீழ தேசியப்பணியில் அனைத்துலகத் தமிழ் மக்கள்

## நியூசிலாந்தில் மாவீரர் தினம்

நியூசிலாந்தில் ஒக்லாந்து வாழ் தமிழ் மக்களால் 14.12.96 அன்று மாலை 6.30 மணிக்கு Mt. Albert War Memorial மண்டபத்தில் மாவீரர் நாள் நினைவு கூறுப்பட்டது. இதனை தமிழர் ஒருங்கிணைப்புக் குழு ஒழுங்கு செய்திருந்தது.

மாவீரர் பாடல்கள் ஒலித்துக் கொண்டிருக்க, மண்டபத்தின் முற்புற வாசலில் பூக்களால் அலங்கரிக்கப்பட்ட மாவீர சமாதிகளுக்கு தீபமேற்றியிருந்த காட்சி மக்கள் மனங்களில் தாயகம் நோக்கிய ஓர் உணர்வை ஏற்படுத்தியதை உணரக் கூடியதாய் இருந்தது.

ஒருங்கிணைப்புக் குழுவின் பொறுப்பாளர் திரு. விக்கி விக்னராஜா அவர்கள் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். தொடர்ந்து மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் மேடைக்கு வந்து விளக்கேற்றி வைத்தனர். சிறுவர்கள் மிகவும் அமைதியான முறையில் விளக்குகளையும் பூக்களையும் ஏந்தி வந்து மாவீரர் சமாதியின் திருவுருவப் படத்தினடியில் வைத்து மலர் – தீப அஞ்சலி செய்தார்கள்.

இதனையடுத்து உரை நிகழ்த்திய திரு. வ. விஞ்ஞானலிங்கம் அவர்கள் தமதுரையில் "புலம் பெயர்ந்து வாழும் மக்கள் யாவரும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தமது பங்களிப்பை மேற்கொண்டால் போராட்ட காலத்தை சுருக்கி எமது விடுதலையை விரைவுபடுத்த முடியும்" என்றார். மேலும் தமிழீழத் தேசியத் தலைவரின் காலத்தில் எமக்கு விடுதலை கிடைக்கும் என்றும், மாவீரர்களின் தியாகம் ஒருபோதும் வீண்போகாது என்பதையும் உறுதியாகக் கூறினார். அவர் தனது உரையைத் தொடர்ந்து, தமிழீழத் தேசியத் தலைவரின் 1996ம் ஆண்டுக்கான மாவீரர் தினச் செய்தியை வாசித்தார்.

New zealand Massey University யின் சமூக – பொருளாதார பேராசிரியரான நியூசிலாந்து நாட்டைச் சேர்ந்த திருமதி. மாக்கிரட் ரவிட் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். இவர் தமிழ் மொழியில் ஆர்வமுள்ளவர். "தமிழீழ விடுதலைப் புலிகள்" பற்றி பல ஆய்வுகள் செய்து கட்டுரைகளையும் வெளியிட்டுள்ளார். ஒரு தமிழ்ப் பெண் மணி போல் சேலையணிந்து வந்த இவர், தமிழில் உரையாற்றி அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தினார். இவர் தமதுரையில் "தமது உரிமைக்காகப் போராடும் உரிமை எல்லோருக்கும் உண்டு" என்பதை வலியுறுத்தியதுடன், "மாவீரர் நாள் தமிழர்களுக்கு ஓர் முக்கிய நாள். இன்று உயிரோடு இருப்பவர்கள் நாளை இல்லை; இதை எண்ணும் போது மனதில் ஒருவகை கோபம் எழும்" என்றும் தமதுரையில் எடுத்தியம்பினார்.



நியூசிலாந்து தமிழ்ச்சங்கத்தின் தலைவர் திரு. S. சிறிதரன் அவர்கள் உரையாற்றும்போது "மாவீரர்களின் கனவுகள் நிறைவேற நாம் எம்மாலான முயற்சிகள் செய்ய வேண்டும். நியூசிலாந்து தமிழ்ச் சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்படுகின்ற தமிழீழ மக்களின் உரிமைப் போராட்ட நிகழ்ச்சிகளுக்கு தமிழ் மக்கள் அனைவரும் பங்களிப்புச் செய்ய வேண்டும்" எனவும் கேட்டுக்கொண்டார்.


தொடர்ந்து நடனம், நாடகம், பேச்சு, கவிதை, பாட்டு, குறும் படம் என பல கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. தேசிய மாவீரர்கள் பற்றி சிறுமி ஒருவரின் பேச்சு மண்டபத்தில் கூடியிருந்தவர்களின் கவனத்தை ஈர்த்தது. 12 வயதுக்குட்பட்ட பெண்பிள்ளைகளின் இரண்டு நடனங்கள் இடம்பெற்றன. இதில் ஒன்று, தமிழீழத்தின் புகழ் பாடுவதாகவும், மற்றொன்று போராடப் புறப்பட்ட இளவேங்கைகளின் வீரத்தைப் பிரதிபலிப்பதாகவும் அமைந்தன. மக்களின் பலத்த கரகோசத்தினால் இவ்விரு நடனங்களும் வரவேற்கப்பட்டன. அடுத்து நடைபெற்ற இரண்டு நாடகங்களும் மக்களின் சிந்தனையைத் தூண்டுபவையாக அமைந்தன. ஒரு நாடகம், தமிழீழப் போராட்டத்தின் நியாயத் தன்மைக்கு மக்களின் மனச் சாட்சியைத் தூண்டு வதாய் அமைந்தது. மற்றையது, 'நமக்கென்றோர் நிலம் ஏன் வேண்டும்' என்பதை அழகாகச் சித்தரித்துக் காட்டியது.

இவ் நிகழ்வு ஒக்லாந்தில் நடைபெற்ற இரண்டாவது மாவீரர் நிகழ்வாகும். உலகின் ஏனைய நாடுகளில் குறிப்பாகக் கனடா, பிரித்தானியா, யேர்மனி, சுவிட்சலாந்து, பிரான்ஸ், அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் வாழும் தமிழீழ மக்களுடன் ஒப்பிடும் "போது மிகவும் சொற்பமான மக்களே இங்கே வாழ்கின்றார்கள். இருப்பினும் 300க்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்டு தம் தாய்நிலத்து வீரர்களுக்கு தமது வணக்கத்தைச் செலுத்தினார்கள்.

### யேர்மனியில் கிட்டம்மா அரங்கில்

## தளபதி கேணல் கிட்டு நினைவு நாள்

11-01-97 சனிக்கிழமையன்று யேர்மனியில், 'டோட்முன்ட்' நகரின் புளோரியான் மண்டப த்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் தளபதி கேணல் கிட்டு அவர்களின் நான்காவது நினைவு நாளைக் கொண்டாடியது. யேர்மனி முழுவதும் இருந்து நூற்றுக்கும் அதிகமான



போட்டி யாளர்கள் அனுப்பிய ஓவியங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டவர்களுக் கான இறுதிப்போட்டி காலை 10 மணிக்கு நடாத்தப் பட்டது. நான்கு பிரிவுகளாக நடாத்தப் பட்ட இந்தப் போட்டியில் கலந்து கொண்ட சிறந்த போட்டி யாளர்கள், பாராட்டும் படியான விடுதலை உணர்வுமிக்க ஓவியங்களை வரைந்து கேணல் கிட்டு நினைவு ஓவியப் போட்டியை அர்த்தமுள்ளதாக்கினர்.

மாலை 5 மணிக்கு ஆரம்பமான கலைநிகழ்ச்சி, மாவீரன் கேணல் கிட்டுவை தமிழீனத்திற்கு ஈர்ந்த கிட்டம்மா அரங்கில் நடைபெற்றது. கடும் குளிரையும் பொருட்படுத்தாது, எழுநூறுக்கும் அதிகமான விடுதலை விரும்பிகள் வருகை தந்து மண்டபத்தை நிறைத்தனர். மௌன அஞ்சலியை அடுத்து, தீபாஞ்சலியும் மலரஞ்சலியும் நடாத் தப்பட்டது. விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழக நடன ஆசிரியர்களான வானதி, பவித்திரா, சுகனியா, வாணி ஆகியோரது நடனவமைப்பில் இடம் பெற்ற விடுதலைக்காணல் நடனங்களும், கலை, பண்பாட்டுக்கழக துணைப்பொறுப்பாளர் கண்ணனின் தமிழிசைக் கச்சேரியும் பலரது பாராட்டையும் பெற்றது.

காலஞ்சென்ற தேசப்பற்றாளர் கிட்டம்மா அவர்களைப்பற்றி அமுதநதி சுதர்சன் அவர்கள் எழுதிய பாடல் ஒன்று கண்ணனால் பாடப்பட்டது. மிருதங்கம் சிவரூபனும், தபேலா தேவகுருபரனும், கடம் கமலநாதனும் வாசித்தனர். ஒரு சிறுமி உணர்ச்சிபொங்க கிட்டண்ணாவை அஞ்சலித்துப் பேசினாள். தாசிவநாதனின் இயக்கத்தில் 'சமாதானப்புறா' என்ற நாடகம் மேடையேற்றப்பட்டது. மாவீரர் நாள் (யேர்மனியின்) 1996ம் ஆண்டு நிகழ்ச்சி ஒளிப்பேழையும் வெளியிடப்பட்டது.

கேணல் கிட்டு நினைவு ஓவியப்போட்டியில் தெரிவான பரிசுக்குரியவர்களுக்கு வெற்றிக்கிண்ணங்கள் வழங்கப்பட்டன. ஓவியர் கண்ணன் தெரிவான ஓவியங்களை விமர்சித்துப் பேசுகையில், "கேணல் கிட்டுவின் நினைவில் புதிய ஓவியர்கள் உருவாவதும் இனங்காணப் படுவதும் வரவேற்கத்தக்கது, சிறுவர் முதல் வளர்ந்தவர் வரை காலத்திற்குத் தேவையான ஓவியங்களைப் புதிய நுட்பங்களோடு வெளிக்காட்டத் தொடங்கி விட்டார்கள்" என்றார். அதிமேற் பிரிவில் முதற் பரிசைப் பெற்ற, பிறவியிலிருந்தே பேசவும் கேட்கவும் இயலாத சதீஷ்குமார் என்ற இளைஞன், போட்டிக்கான ஓவியத்தை வரைந்து முடித்த பின் அவனுடைய மனத்தில் நிறைந்த தமிழீழத் தலைவரை மாதிரிப் படங்கள் எதுவுமின்றி விரைவாக வரைந்து காட்டிப் பெருமைப் பட்டான்.

சிறப்புப்பேச்சாளரான உ.த.இ. கல்விப் பணிப் பொறுப்பாளர் திரு.நாகலிங்கம் அவர்கள் பேசுகையில், "இக்காலகட்டத்தில் விடுதலைப்போருக்குப் பங்களிக் காதவன் தமிழனேயல்ல" என்றார். மேலும் அவர் பேசுகையில், "அனைவரும் ஒன்றிணையும் காலம் இது" எனக் குறிப்பிட்டார். இறுதியாக விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழக தயாரிப்பான, அமுதநதி சுதர்சனின் கவியாக்கத்திலும் கண்ணனின் இசையமைப்பிலும் உருவான 'முல்லைமலர்' என்ற நாட்டிய நாடகம் சாவித்திரியின் நடனஅமைப்பில் மேடையேறி முல்லைச்சமரின் வேகத்தைக் காட்டியது. ♦

## அவுஸ்திரேலியாவில் கேணல் கிட்டுவின் நான்காவது நினைவு நாள்

கேணல் கிட்டுவினதும், அவருடன் வீரமரணம் அடைந்த ஏனைய ஒன்பது போராளிகளினதும் நான்காவது நினைவு நாள் நிகழ்வுகள் 19-01-97 அன்று (ஞாயிற்றுக்கிழமை) சிட்னியில் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினால் நடாத்தப்பட்டது. தமிழர் ஒருங்கிணைப்பு சிட்னிக் கிளையின் பொறுப்பாளர் திரு.பா.சிறிபாலன் தமிழீழக் கொடியை ஏற்றி வைத்தார். திரு.இ.தனபாலசிங்கம் அவர்கள் மங்கள விளக்கேற்றினார். கேணல் கிட்டுவுக்கும் அவருடன் வீரமரணம் அடைந்த ஒன்பது போராளிகளுக்கும் மக்கள் வரிசையாக நின்று உணர்வு பூர்வமாக அஞ்சலி செலுத்தினர். அதன்பின் பேச்சு, கவிதை, சிறுவர் நாடகம், பாடல்கள் போன்ற நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. கேணல் கிட்டு ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்திற்காக நடைபெற்ற கிரிக்கற் போட்டியில் வெற்றிபெற்ற கழகங்களுக்கு வெற்றிக் கேடயங்கள் வழங்கப்பட்டன. கேணல் கிட்டுவின் உரை, தீருவிலில் நடை பெற்ற கேணல் கிட்டுவினதும், ஒன்பது போராளிகளினதும் நினைவு நடுகல் நாட்டப் பட்ட நிகழ்ச்சி என்பன அகலத் திரையில் காட்டப்பட்டன. திரு.பா.சிறீபாலன் அவர்கள் தமிழீழத் தேசியக் கொடியை இறக்கி வைத்ததுடன், நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெற்றது.

**மெல்பேணில்,**

மெல்பேணில் 04-01-97 அன்று கிட்டுவின் நினைவுதினம் நடைபெற்றது. அங்கு பாடல்களும், சிறப்புரையும் இடம்பெற்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அமைதி வரும்

முல்லையில் கிடைத்த வடு
முழுதாக மறையுமுன்.....
எல்லையில் இன்னொரு
எதிரி முகாம்!

ஆனையிறவு பரந்தன்
இராணுவப் படையை
நேரடியாய்த் தாக்கினர்!
ஆயுதக்கிடங்கும் ஆட்டிலறிகளும்
பட்டியலிட முடியா பத்தும் பலவும்
பாயும் புலிவீரர் சொத்துக்களாகின!

அமைதியைக் கொண்டு வந்து...
அகப்பையால் அள்ளித்தந்து - தமிழர்
முகப்பையே மாற்றுவேனென
முன்மொழிந்த ராணியே...

உம் அம்மாவைக் கூப்பிடும்...
'அங்கிளை'யும் அழைத்து வரச்
சொல்லும்
அமைதி விரைவிலென அவர்களுக்கும்
கூறும்!

புரியவில்லையா......? புதிராக
இருக்கிறதா......?
படித்தவர் நீங்கள்... பட்டெனப் புரியுமே!

ஆயுத ஒப்படைப்புத்தான் இப்போ
அடிக்கடி நடக்குதே!
அதுதான்...
அமைதி விரைவில் வரும்!

-தமிழொளி-

# தலைவனவன் விழிசிவந்து அரவணைத்த மகளே!

கிட்டாத தொலைவுக்குப் போனாலுமெங்கள்
கிட்டம்மா தமிழ்வானில் நிலையான திங்கள்!
எட்டாத தமிழ் வீரக் கிட்டென்னும் சிற்பி
பொட்டாகிப் பொலிவாகி முத்தான சிப்பி!

ஏக்கமுடன் மகன் வரவை
எண்ணிநின்ற போதினிலே!
பார்க்கவந்த அவன் தீயை
அரவணைத்த நாளதிலே!

தேக்குமரம் போல நின்று
துணிவுதந்த தாயே!
யார்க்குமடி பணியாத
தன்மானத் தீயே!

கிட்டாத தொலைவுக்குப் போனாலு மெங்கள்
கிட்டம்மா தமிழ்வானில் நிலையான திங்கள்!
எட்டாத தமிழ் வீரக் கிட்டென்னும் சிற்பி
பொட்டாகிப் பொலிவாகி முத்தான சிப்பி!

கொடுமை கண்டு கொதித்தெழுந்து
ஆர்த்த கடலலையே!
அடிமையென வாழவெண்ணா
புலிகிடந்த குகையே!

விலை கொடுத்துப் பெறவெண்ணா
தளபதியின் பிரிவால்
தலைவனவன் விழிசிவந்து
அரவணைத்த மகளே!

கிட்டாத தொலைவுக்குப் போனாலு மெங்கள்
கிட்டம்மா தமிழ்வானில் நிலையான திங்கள்!
எட்டாத தமிழ் வீரக் கிட்டென்னும் சிற்பி
பொட்டாகிப் பொலிவாகி முத்தான சிப்பி!

-தமிழீழவிடுதலைப்புலிகள்-(யேர்மன் கிளை)

# படிஏறும்போது பலமாக நின்றால் கொடியேறும்போது குதூகலம் நிட்சயம்

தென்னம் பூவுதிர தேங்காய் குலுங்குமென்பர்
மாம்பூவுதிர்ந்து விட்டால் மண்மணக்கும் என்று
சொல்வர்
வேம்பு துளிர்த்து விட்டால் வேனில்
வருகுதென்பர்
வாழ்வையே பூவாக்கி வரலாற்றில் உதிர்த்து
விட்ட
சமாதிப் பூக்களுக்குச் சந்தனத்தை இட்டு
வைப்போம்.

ஊற்று வரும் நேரம் உடைந்து விட்ட -
அணையினைப் போல் - நம்
நாட்டு நிலைமை நலிவுற்று இருக்கிறது.
கூரைகள் உடைந்ததனால் குடிபெயர்ந்த -
எம்மினம்
வானத்தைக் கூரையாக்கி வயல்வெளியில்
வாழ்கிறது.
வான் குண்டுபோட்டு அந்த தேன்கூட்டைக்
கலைத்ததனால் -
அமாவாசை இரவுபோல் அவர்கள் வாழ்வு
இருக்கிறது.
ஒளியேற்றி அவர்களுக்கு உதவுவது எம்
கடமை

தேவைக்கதிகமாய் திரிகள் இருக்கிறது.
உங்கள் மனங்கள் மட்டும் மெழுகாய்
உருகினால் -
எங்கள் நாட்டில் ஒளியேற்றி வைக்கலாம்.

அங்கு - ஆதிக்கக் குண்டினால் அன்னையை
அழித்தார்கள்
அதனால் -பாலுக்காய் அழுத பச்சைக்குழந்தை
- இன்று
தாய்க்காய் அழுகிறது.
வீரமண்ணில் வெற்றுச் சுவரிலே
கூடுகட்டவெனக் குடியேறி விட்ட
இந்தத் தேன்குடிக்கும் சிலந்திகளால்
பூக்களுக்கெல்லாம் புற்றுநோய் வருகிறது.

இளம் பிள்ளைகள் இறந்து போகிறார்கள்
பச்சைக்குழந்தைகளைப் படுகொலை
செய்கிறார்கள்.

வெள்ளைப் புறாக்களைக் காட்டி - இனி
விரட்டியடிப்பதில் வேலையில்லை
அங்கிருக்கும் சூரியன் இங்கெமக்குச்
சுடுவதுபோல்
இங்கிருந்து கொண்டு எம்மவரை நேசிப்போம்

பணவுதவி மட்டுமா எங்களால் முடியும் - இல்லை
மனவுதவி செய்யலாம் மண்ணைக் காப்பாற்ற
உள்ளவரை உதவிசெய்வோம் - உள்ளம்
உள்ளவரை உதவிசெய்வோம்

படியேறும் போது பலமாக நாம் நின்றால்
கொடியேறும் போது குதூகலம் நிச்சயம்.
முகில் கலைந்து போனதனால்
மனக் கலக்கம் வேண்டாம்
மழைவரும் மகிழ்ச்சியாய் இருப்போம்.

நேரா-சிட்னி




# மாவீரனே! (நண்பனே!)

மாற்றான் குண்டுகள்
உன்
மார்பைத் துளைத்தனவோ?
மாமனிதன் உனை
மண்ணில் சாய்த்தனவோ!
சிதறிய தேங்காய் போல்
சில்லாகிப் போனாயோ!
அன்றி
நரிகள் கையில் சிக்காது
நஞ்சை நீ மென்றாயோ!

சூரியக்கதிர் சமர்தனிலே
சூரியன் நீ அணைந்தாயே!
ஈன்றெடுத்த மண்தனிலே
இரத்த விதை விதைத்தாயே!
மாவீரர் சமாதியிலே
மறவனாய் மலர்ந்தாயே!
வெளிநாட்டுத் தமிழருக்கும்
வெகுட்சி வரச் செய்தாயே!

வெங்கதிர்ச் செல்வன் படைதனிலே
வேங்கையாய்ப் பாய்ந்தவனே!
வேட்டை ஆட வந்தவரை
வெட்டிப் புதைத்தவனே!
ஊர் உறவு வாழ்வதற்காய்
உறங்காமல் உழைத்தவனே!
உறங்காமல் உழைத்ததினால்-இன்று
உறக்கத்தில் போனாயோ!

தானைத்தலைவன் ஆணைப்படி
அணிவகுத்த புலிகளைப்பார்!
படையெடுத்த பகைவர் கொடி
பாதியிலே எரிந்ததைப்பார்!
முப்படை மூடரெல்லாம்
முல்லையிலே முறிந்ததைப்பார்!
கூவிவந்த கூட்டமின்று
குரல் இழந்து போனதைப்பார்!

மண்ணோடு நீ கலந்து
மலராகிச் சிரிக்கின்றாய்!
விண்ணோக்கி நான் பார்த்தால்
விண்மீனாய் ஒலிக்கின்றாய்!
வாள் ஏந்தும் வீரருக்கு
வேராக நிற்கின்றாய்!
விடிவு தேடும் மக்களுக்கு
விடிவெள்ளி நீதானே!

- திலீபன் செல்வகுமாரன் (ஜேர்மனி)




# அனைத்துலக தமிழீழ மக்கள் நினைவில் கேணல் கிட்டுவும், தோழர்களும்

## அலையே எங்கள் அண்ணன் எங்கே? அன்பிற்கினிய தோழர்கள் எங்கே?




மலரின் மலர்ச்சி உன் முகத்தில் கண்டோம்-பெரு
மலையின் முதிர்ச்சி உன் திடத்தில் கண்டோம்!
வளரும் கலையை உன் கரத்தில் கண்டோம்-எம்
தலைவன் உருவை உன் உளத்தில் கண்டோம்!




அனலும் பெரிதாய் உன் கண்ணில் வீசும்-பின்
அதுவும் அன்பாய் எம் முன் பேசும்!
அலையே எங்கள் அண்ணன் எங்கே? -அவன்
அன்பிற்கினிய தோழர்கள் எங்கே?




ஒளியின் வடிவை உன் விழியில் கண்டோம்- அந்த
உண்மையின் வரவை உன் பேச்சில் கண்டோம்!
வளியின் வேகம் போர்க் களத்தில் கண்டோம்-நல்
வாளின் கூர்மை உன் அறிவில் கண்டோம்!




கன்றிழந்த பசுவாய் நாம் நின்றநிலை கண்முன்னே
நிற்கிறது...
நின்று நீர் உரைத்த உரை நினைவகலாதிருக்கிறது...
என்றும் உம் பணி மறவோம் - தமிழ்
ஈழத்திற்காய் எமைத்தருவோம் !

- சிறுவையூரான்


T.C.C
Via Mariano Stabile - 49
90139 Palermo, Italy
T/F: 091-611 3179

W.T.C.C
Lang STR - 208
8005 Zurich, Swiss.
T/F: 01/273-29-38

T.C.G
Post Fach - 340251
51824 Gummersbach - 34
Germany

U.T.O., 211 Katherine Rd,
London E6 1BU, UK.
Tel: 0181 - 503 4294,
Fax 0181 - 470 8593

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo -1, Norway
T: 022-350 980 F: 22381040

W.T.C.C.
170-10 Cedarcroft Road
Suite 1-L, Jamaica,
New York 11432, U.S.A.
Tel: 718-657-0465
Fax: 718-523-7399

L.T.T.E
P.O.Box 47, 7400 HERNING
DENMARK.
Tel/Fax: 97-155299

T.C.C
Gr. Hertoginnein - 108
2517 EL Den Haag Nederland
Tel: 070-346 1963, Fax 070 362 5172

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel: 435 81142, F 435 81191

T.C.C
Vissingebacken 11 1 TR
16354 Spanga, Sweden

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T: 03-470 6441 F: 560 8224